# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9:வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 04 சனிக்கிழமை (20-11-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:25


## யுத்தச் சூழ்நிலையைக் காரணம் காட்டி

# தேர்தலை ஒத்திவைக்கக் கோரி

# உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## சுன்னாகம் வாசி மனு

வவுனியா,நவம்பர்.20

**அடுத்தமாதம் 21 ஆம் திகதி நடைபெறுவதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி தமிழர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.**

**வடக்கு - கிழக்கில் நிலவும் போர்ச் சூழ்நிலையைக் காரணம் காட்டியே தேர்தலை ஒத்திவைக்குமாறு அவர் மனுவில் கோரியுள்ளார்.**

சுன்னாகத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் வசந்தன் என்பவரே சட்டத்தரணி டிலாந்தி டி சில்வா மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில்அவர் தெரிவித்துள்ளதாவது :-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் இரண்டாயிரம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மின் ஊழியர் வவுனியாவில் சூட்டுக்குப் பலி!

வவுனியா,நவ.20

வவுனியா குருமண்காட்டில் நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் இளைஞர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

மின்சாரசபை ஊழியரான இந்த இளைஞன் படையினரின் சோதனைச் சாவடியூடாகச் சென்றதாகவும் -

அவரைச் சோதனை இடுவதற்காக படையினர் மறித்ததாகவும் -

அவர் நிற்காமல் ஓடியபோது அவரை நோக்கிச் சுட்டதாகவும் - படையினர். தெரிவித்தனர்.

சூட்டுக்கு இலக்காகி மரணமானவர் கஜேந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஐ-3-164)

## புறக்கோட்டையில் ஆயிரத்துக்குமேற்பட்ட தமிழர் கைது

கொழும்பு,நவ.20

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஆயிரத்து 126 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி.என்.டி சில்வா தெரிவித்தார்.

இவர்களில் 4 பேரைத் தவிர ஏனையோர் நேற்று விடுவிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

கடந்த வாரத்தில் கொழும்பு நகர்ப்பகுதியில் ஆயிரத்து ஐம்பத்தாறு வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப் பட்டதாகவும்-

அதன்மூலம் பல தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## வவுனியா நகரப்பகுதி மீண்டும் வெறிச்சோடியது!

வவுனியா,நவ.20

**வவுனியா நகரப்பகுதி மீண்டும் நேற்று சன நடமாட்டம் எதுவும் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.**

நகரில் இருந்து ஆசிக்குளம், ராஜேந்திரகுளம் ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருந்தவர்களில் ஒரு பகுதியினர் கடந்த புதன்கிழமை நகரில் உள்ள தமது வீடுகளுக்கு திரும்பினர். அதைத் தொடர்ந்து நகரில் கடைகள் திறக்கப்பட்டன. அரச அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்திருந்தன. ஆனால் நேற்று மீண்டும் நகரம் வெறிச்சோடிப் போனது. பதற்றம் நிலவியது. நகரப் பகுதியில் நேற்று கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள் ஊழியர் வரவின்மையால் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், வங்கிகள், சந்தைகள் யாவும் மூடப்பட்டுக் கிடந்தன.

போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை -

நகரில் திருட்டுச் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (ஐ-3-164)

## யாழ். அரச அதிபரும் தேர்தல் அதிகாரியும் அவசரமாகக் கொழும்புக்கு அழைப்பு

### தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்பொருட்டு யாழ். அரச அதிபரும் உதவித்தேர்தல் ஆணையாளரும் நேற்று முன்தினம் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டனர்.

தேர்தல் ஆணையாளரின் அழைப்பின்பேரில் கொழும்பு சென்ற இவர்கள் ஒரு சில தினங்களில் யாழ். திரும்புவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டிய தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள், கடமையாற்றவேண்டிய ஊழியர்களின்எண்ணிக்கை, தேவையான

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## கோவில்புளியங்குளத்தில் ஷெல் வீழ்ந்து மூவர் பலி!

வவுனியா,நவ.20

இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள பூவரசம்குளத்துக்கும் இரணைஇலுப்பைக்குளத்துக்கும்இடையில் கோவில் புளியங்குளம் என்னும் இடத்தில் நேற்றுக் காலை ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் இரு பெண்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த வசந்தா (வயது 20), பேரானந்தசெல்வி (வயது 22 - 2 பிள்ளைகளின் தாய்), வசந்தராஜா (வயது 22) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஆறுபேர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-3-164)

## கல்முனை பஸ்நிலைய கட்டடங்கள் இனந்தெரியாதோரால் இடித்து அழிப்பு

மட்டக்களப்பு.நவ.20

கல்முனை மத்திய பஸ் நிலையக் கட்டடங்கள் இரண்டும் நேற்று முன்தினம் இரவு இருந்தஇடம் தெரியாதவாறு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இனந்தெரியாத குழு ஒன்றினால் தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகள் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்றும் -

பஸ் நிலையத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கூட அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் -

அறியப்படுகிறது.

இந்த பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் நாளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 16 ஆவது தேசிய மாநாடு இடம்பெற உள்ளதாகவும் -

பாதுகாப்புக்காக கட்டடங்களை அகற்றுமாறு அரசியல்வாதி ஒருவர் கோரிக்கை விடுத்திருந்தார் என்றும்-

அந்தக் கோரிக்கையை பஸ் டிப்போ நிர்வாகம் ஏற்கவில்லை எனவும் -

சொல்லப்பட்டது.

பஸ்நிலையத்துக்கு ஏற்பட்ட சேதம் 17லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3-21)

## விமானசேவை இல்லை

யாழ்ப்பாணம்,நவ.20

பலாலிக்கும், இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்றும் இடம்பெறாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சேவையை மீண்டும் எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து முடிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தமிழகத்துக்கு அகதிகள்

மன்னாரில் இருந்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் வள்ளம் ஒன்றில் நேற்று தமிழ்நாட்டின் அரிச்சிமுனைப் பகுதியை வந்து சேர்ந்தனர் எனவும் - உடனடியாக அவர்கள் யாவரும் மண்டபம் அகதிமுகாமில் தங்கவைக்கப்பட்டனர் எனவும் தமிழகப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

### ஜீ.சீ.ஈ. சாதாரணப்பரீட்சை

## காகிதாதிகள், ஆவணங்கள் படகு மூலம் வன்னிக்கு

மன்னார்,நவ.20

அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் படகுகள் மூலம் நேற்று கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மன்னாருக்கு எடுத்துவரப்பட்ட அவை ஆறுபடகுகள் மூலம் பள்ளிமுனையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன என்றும் -

அடுத்தவாரம் வினாத்தாள்களும் இதே மார்க்கமூடாகவே இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## 10 புலிகள் உயிரிழப்பு

வவுனியா,நவ.20

வன்னியில்மேற்கொண்டுள்ள'ஓயாத அலைகள் - 3' இராணுவ நடவடிக்கையில் கடைசியாக நடந்த சண்டைகளில் தமது தரப்பில் பத்துப்பேர் உயிரிழந்தனர் என்று விடுதலைப்புலிகள்

( 8ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி மாணவர் மரணங்கள்:

## கல்விப் பணிப்பாளர் உட்பட எண்மர் நேற்று சாட்சியமளித்தனர்

கல்விச் சுற்றுலா சென்ற சமயம் நான்கு மாணவர்கள் பருத்தித்துறைக் கடலில் மூழ்கி மரணமான சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசாரணைகளின்போது வடமராட்சி கல்விவலயப் பணிப்பாளர் சி.சிவராசா உட்பட எண்மர் சாட்சியமளித்தனர்.

பதில் நீதிவான் சு.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெற்றது.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத் தலைவர் கே.எஸ் குகதாஸன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி. செ.சுந்தரேசன், அதே பாடசாலை ஆசிரியை திருமதி மீனா தங்கராசா, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியை திருமதி சந்திரிகா நாகேந்திரன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி மேனகா திருநடராசா, பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அற்புதராணி சுந்தரமூர்த்தி, கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி ஆசிரியை மைதிலி வல்லிபுரம் ஆகியோர் சாட்சியம் அளித்தனர். இந்தமரணங்கள் தொடர்பாக தீர்ப்பு வழங்குவதை பதில் நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ-3-173-118-109)

## பாலம்பிட்டியில் இருந்து படையினர் தந்திரோபாயம் கருதியே பின்வாங்கினர்!

### இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு,நவ.20

வன்னியில் பாலம்பிட்டி, பள்ளமடு, தட்சனார்மருதமடு போன்ற பகுதிகளில் இருந்து யுத்த தந்திரோபாயம் கருதிப் படையினர் பின்வாங்கியுள்ளனர் என்று இராணுவத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் நேற்றுக் கூறியதாக கொழும்பு தனியார் வானொலி ஒன்று தெரிவித்தது.

படையினருக்கு இழப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும்-

பின்வாங்கிய படையினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளில் இருந்து விடுதலைப்புலிகளுடன் மோதி வருகின்றனர் என்றும் -

அவர் மேலும் தகவல் வெளியிட்டதாக அந்த வானொலி கூறியது.

அதேநேரம் - கடந்த 36 மணித்தியாலங்களில் வன்னியில் நடந்த தாக்குதலில் பத்துப் படையினர் உயிரிழந்தனர் என்றும் -

நூற்றிஆறு படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினர் வன்னியின் மேற்குப் பகுதியில் தமது நடவடிக்கைகளை தொடர்வதாகவும் -

அது மேலும் தெரிவித்தது. (ஐ-3-7-21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி

# யாழ்.அரச ஊழியர்களுக்கு லீவு வழங்கக் கட்டுப்பாடு

வலிவடக்கு,நவ.20

யாழ். மாவட்டத்தை விட்டு வெளிச் செல்வதற்கு அரச ஊழியர்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரும் கடிதம் அரச அதிபரினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் கடமைக்கான உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

முக்கிய அலுவல்கள் காரணமாக வெளியே செல்லவேண்டியவர்களுக்கு உரிய நடைமுறைகளை மேற்கொள் ளும்படியும் அக்கடிதத்தில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ஐ-86)

# சங்கானை பிரதேச பிரிவில் 262 பேருக்கு 5 ஆயிரம் ரூபா

வலிமேற்கு,நவ.20

சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் மேலும் 262 பேருக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதி யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புக் கிளையில் இருந்து பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கொடுப்பனவு பெறுவோர் எண்ணிக்கை வருமாறு:-

வட்டுக் கிழக்கு-9,வட்டுவடக்கு-14, அராலிமேற்கு-13,அராலிமத்தி-30, அராலிதெற்கு-15,அராலிகிழக்கு-06,அராலி வடக்கு-3,வட்டுத்தென்மேற்கு-3,வட்டு மேற்கு-21,தொல்புரம்கிழக்கு- 11,பொன்னாலை - 10,சுழிபுரம்மேற்கு - 20,சுழிபுரம் மத்தி-40,பண்ணாகம்-7,பனிப்புலம்-15,சித்தன்கேணி-6,சங்கானைகிழக்கு-9,சங்கானைமேற்கு-2,சங்கானைதெற்கு -13,சங்கானைமத்தி-15.

மேற்படி 20கிராம உத்தியோகத்தர் பிரி வுகளையும் சேர்ந்த 262 பேரும் முன்னர் குறிப்பிட்ட வங்கிகளுக்குச் சென்று பணத்தை பெற்றுக்கொள்ள முடியும். தத்தமது கிராம உத்தியோகத்தர்களுடன்தொடர்புகொண்டு பெயர்களை உறுதிப்படுத்திய பின்னர் வங்கிகளுக்குச்சென்று பணத்தை அடுத்த வார இறுதியில் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலக திட்டமிடல் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-175)

# சுன்னாகம் மின் நிலையத்தில் பழுது; சில இடங்களில் மின் தடை!

யாழ்ப்பாணம்,நவ.20

சுன்ணாகம் மின் நிலையத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக கடந்த சில தினங்களாக சில பகுதிகளில் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுன்னாகத்தில் இருந்து கே.கே.எஸ். வீதி மார்க்கத்தில் கோம்பயன்மணல் பகுதிவரை மின் வழங்கப்படும் பிரதேசங்களிலும் -

சுன்னாகத்தில் இருந்து வட்டுக் கோட்டை வரையான மின் மார்க்கத்தின் கீழ் மின்பெறும் இடங்களிலுமே இந்த மின் தடை ஏற்பட்டு வருகிறது.

இவ்விரு மின்மார்க்கங்களின் கீழும் மின்பெறும் பகுதிகளுக்கு இரவு 6 மணிமுதல் 10 மணிவரையும் காலை 5 மணிமுதல் 6 மணிவரையும் சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்தே மின் வழங்கப்படுகிறது. இந்த நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் 'கூல் எயார்' நிறுவனத்தின் மின்சாரம் இப் பகுதிகளுக்குக் கிடைக்கிறது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில்- குறிப்பிட்ட நேர வேளையில் - கடந்த நான்கு தினங்களாக மின் துண்டிக்கப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின் விநியோகக் கோளறு விரைவில் சீர்செய்யப்பட்டுவிடும் என்று மின்நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# குடாநாட்டில் சகல வீதிகளையும் திருத்தி அமைக்க 10 ஆண்டு திட்டம்

வலிகாமம் மேற்கு,நவ.20

யாழ். மாவட்டத்தில் சகல வீதிகளையும் எதிர்காலத்தின் நிலமைக்கு ஏற்றவாறு திருத்தியமைப்பதற்கு பத்து ஆண்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் சனத்தொகை அதிகரிப்பு, வாகனங்களின் அதிகரிப்பு போன்ற பல்வேறு நிலைமைகளுக்கும் ஏற்றவாறு பிரதான வீதிகள் உட்பட சகல வீதிகளையும் திருத்தியமைப்பதற்கு பத்துஆண்டுகள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறு திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு அமைச்சு சுற்றறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளது.

பத்து ஆண்டுத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு உள்ளூராட்சி ஒருங்கிணைப்புக்குழு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, பிரதேச ஒருங்கிணைப்புக்குழு என மூன்று குழுக்கள் செயற்படவுள்ளன.

உள்ளூராட்சி ஒருங்கிணைப்புக் குழு பிரதேசசபைத் தலைவரை தலைவராகவும் -

பிரதேச ஒருங்கிணைப்புக்குழு பிரதேச செயலரைத் தலைவராகவும்-

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அரசாங்க அதிபரைத் தலைவராகவும் கொண்டு செயற்படவுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேசசபை ஆகியவற்றுக்கு சொந்தமான சகல வீதிகளும் இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இதனால் இந்த மூன்று திணைக்களங்களும் ஒன்றிணைந்து பத்து ஆண்டுத்திட்டத்தை தயாரிக்கவுள்ளன. (ஐ-175)

# 8 கூட்டுறவுச்சங்கங்களுக்கு கப்பலில் லொறிகள் வரும்

யாழ்ப்பாணம் நவ. 20

யாழ். மாவட்டத்தில் உள்ள எட்டு ப.நோ.கூ. சங்கங்களுக்குமான லொறிகள் 'லங்காமுடித்த' கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவுள்ளன.

மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் ப.நோ.கூ. சங்கங்களுக்கு லொறிகள் கொள்வனவுக்கென 15லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்ட கடனுதவி மூலமே இந்த லொறிகள் கொள்வனவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், பளை, கொடிகாமம், பருத்தித்துறை, சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, புலோலி ஆகிய ப.நோ. கூ.சங்கங்களுக்குரிய லொறிகளே இந்தக் கப்பலில் எடுத்துவரப்படவுள்ளன.

இதேவேளை -

தெல்லிப்பழை, நல்லூர் ப.நோ.கூ. சங்கங்களும் குறிப்பிட்ட கடனுதவியில் லொறிகளைக் கொள்வனவு செய்துள்ளன.

இந்த இருலொறிகளும் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளன. (ஐ-5-17)

## கப்பலில் விதை உ.கிழங்கு

யாழ்ப்பாணம்,நவ.20

கொழும்பிலிருந்து தனியார்துறையினருக்குரிய பொருள்களை ஏற்றிக் கொண்டுபுறப்பட்டுள்ள 'கிரிந்த' கப்பலில் 100 மெற்றிக்தொன் உருளைக் கிழங்கு எடுத்துவரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார்துறையினரால் எடுத்து வரப்படும் இந்த விதை உருளைக் கிழங்கு அடுத்தவாரம் முதல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இம்முறை விதை உருளைக் கிழங்கு உரியகாலத்தில் எடுத்து வரப்படாததால் விளைச்சல் பாதிக்குமென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-5)

# சர்வதேச சிலப்பதிகார மாநாடு டிசம்பரில் கோலாலம்பூரில்

கோலாலம்பூர்,நவ.20

மலேசிய தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஏற்பாட்டில் செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் கோலாலம்பூரில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

தமிழ், தொன்மை மொழிகளில் மூத்தமொழி என்பதை உறுதிப்படுத்தும் வகையில் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இளங்கோ அடிகள் இயற்றிய 'சிலப்பதிகாரம்' என்னும் அரியதொரு காப்பியத்தை மக்களுக்கு விளக்கும் வண்ணம் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாட்டுக் குழுத் தலைவர் மு.மணீ வெள்ளையன் கூறினார்.

எதிர்கால தலைமுறையினர் தங்களின் வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில் இந்த சிலப்பதிகார மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்-

டிசம்பர் 12ஆம் திகதி கோலாலம்பூரில் நடைபெறும் இம் மாநாட்டை ம.இ.கா. தேசியத் தலைவரும் பொதுப் பணித்துறை அமைச்சருமான டத்தோ ஸ்ரீ.ச.சாமிவேலு அதிகாரபூர்வமாக தொடக்கிவைப்பார் என்றும் -

தெரிவித்தார்.

இம்மாநாட்டிற்கு தமிழக அரசின் கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாடு அமைச்சர் தமிழ்க்குடிமகன் ஆகியோர் சிறப்பு வருகை புரிவார்கள் என்றும் -

தமிழக அரசின் அகழ்வாராய்ச்சி இயக்குநர் திரு.நடனகாசிதாசன் உட்பட இதர சில முக்கிய பிரமுகர்களும் இம்மாநாட்டிற்கு வருகை புரிவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சிலப்பதிகாரம் காட்டும் தமிழ் நாகரீகம், கலை,பண்பாடு, அரசியல், வர்த்தகம் மற்றும் தமிழ்மொழி தொடர்பான விழிப்புணர்வை உலகத் தமிழர்களிடையே உருவாக்கிடவும், கடலுக்குள் மூழ்கிக்கிடக்கும் பூம்புகாரின் சிறப்புத்தன்மையை அகழாய்வு செய்து உலகிற்கு உணர்த்திட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசினையும், இந்திய அரசினையும் தீர்மானம் மூலமாக வற்புறுத்தவும் ஐ.நா.வின் யுனெஸ்கோவின் பார்வையை பூம்புகாரை நோக்கி ஈர்த்திடவும் திட்டமிட்டு இம்மாநாடு நடைபெறவுள்ளது என அவர் கூறினார். (ஐ)

## 125ஆம் ஆண்டு நிறைவு விழா

குருநகர்,நவ.20

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் 125ஆம் ஆண்டு நிறைவு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி.ஆ.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்.வலயக் கல்வித்திணைக்களப் பொறியியலாளர் கு.சிவபாலன், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சரவணபவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இந்த விழாவில் பாலர் விசேட செயற்பாட்டறை திறத்தல், சிறப்பு மலர் வெளியீடு ஆகிய நிகழ்வுகளுடன் கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவ மாணவியரின் "வாத்தியப் பிருந்தா" இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (க-30-51)

## சமுர்த்திக் குழுக்கள்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்திக் குழுக்கள் அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. (ஐ-86)

## மீனவர் கைது

நாவாந்துறை பகுதியில் கடந்த 17 ஆம் திகதி கடற்றொழிலாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநகர் தண்ணீர்தாங்கி வீதியைச்சேர்ந்த மனுவல் அருளப்பு (வயது40) என்பவரே கைதுசெய்யப் பட்டவராவார். (ஐ-5)


**பாலர் ஆசிரியராக**

க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை: ஆறு மாதத்தில் தபால் வழியில் பயிற்சி.

விவரங்களுக்கு:
**பாலர் ஆசிரியர் சங்கம்**
கொக்குவில். (71106)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
விஜய் ~ சுவாதி
மற்றும் பலர் நடித்த
**செல்வா**
10.30, 2.00, 5.00
(C/9912)

**லிபேட்டி**
(அச்சுவேலி)
அஜித், சுவாதி
நடித்த
**வான்மதி**
காட்சிகள் 10.30
(71007)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜய், சாளினி
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள் 11.00 - 2.30
(புதிய நேரம்)
[illegible]
[illegible]
(71105)

**வெளிவந்து விட்டது**

தந்தை S. J. பேர்க்மான்ஸ் இன் ஜெபத்துடன்
சகோதரன் N. பத்மதேவா பாடிய
**அன்பான இயேசு ஜீவ கீதங்கள்**
பெற்றுக்கொள்ள பாகம் 2 (பாகம்.1)
CD யில் இருந்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
இல. 540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
(சாவகச்சேரி).

அல்பா மிக்ஸ்சர்,
பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(71113)


## கண்ணீர் அஞ்சலி

கல்விக்கள ஆய்விற்காகச் சென்ற வேளை
கடலலையில் சிக்குண்டு அகால மரணமடைந்த
யா/ஹாட்லிக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களான

செல்வன் பூ. கந்தர்வன்
செல்வன் சு. சிவோத்தமன்
செல்வன் சி. ரவிசங்கர்
செல்வன் பா. பிரதீபன் ஆகியோரின்

மறைவினால் சொல்லொணாத் துயரடைகிறோம். அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவர்களது ஆத்மாக்கள் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விப்பணிப்பாளர்,
அலுவலர்கள்,
வடமராட்சிக் கல்வி வலயம்.

(C/9897)

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

எமது சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு நல்ல பல ஆலோசனைகளையும் திட்டங்களையும் அறிமுகப்படுத்திய நல்லாசான்

கூட்டுறவுப் பரிசோதகர்

**சி.கிருஷ்ணர்**

அவர்களுக்கு எமது நினைவஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயற்குழு உறுப்பினர்கள்,
உறுப்பினர்கள்,
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(71118)

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி கரவெட்டி பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் அகால மரணங்களினால் ஏற்பட்டதுயரம் காரணமாகவும் - அவர்களுள் ஒருவரான எமது பிரதேசத்தைச் சேர்ந்த **செல்வன் சுந்தரலிங்கம் சிவோத்தமனின்** மரணச்சடங்கு நடைபெற இருப்பதனாலும் -

20.11.1999 சனிக்கிழமை நடைபெற இருந்த எமது கல்லூரிப் பரிசளிப்பு விழா 24.11.1999 புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அதிபர்,
யா/விக்னேஸ்வரா கல்லூரி,
கரவெட்டி.

(C/9910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகை திங்கள் எட்டாம்நாள் (24-11-99) புதன்கிழமை காலை 7.56 நிமிடம் முதல் 9.52 நிமிடம் வரையுள்ள தனுலக்கினமும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| **எமது சிரேஷ்ட புத்திரன்**<br>**திருநிறை செல்வன்**<br>**யோகேந்திரா**<br>**அவர்களுக்கும்** | **எமது கனிஷ்ட புத்திரி**<br>**திருவளர் செல்வி**<br>**வத்சலா**<br>**அவர்களுக்கும்** |

இறைவன் திருவருள் துணைகொண்டு பிள்ளையார் கோயில் வேங்காரட்ணநகர் அடையாற்றில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. திருமதி இரத்தினவேல்,**
அரசவீதி, உரும்பிராய்.
இலங்கை.
**மே/பா திரு. திருமதி கு. பரமேஸ்வரி,**
இல.25, கற்பகாம்பா நகர்,
கொட்டிவாக்கம்,
திருவான்மியூர், சென்னை - 41,
தென்இந்தியா.

**திரு. சி. நடராஜா,**
சேச் லேன், கொக்குவில்,
இலங்கை.
**மே/பா திருமதி சி. பத்திநாதன்,**
இல.5 5ஆவது குறுக்கு,
7ஆவது பிரதான வீதி,
ஸ்ரீனிவாசநகர், திருச்சி - 17,
தென்இந்தியா.

**(இரு வீட்டார் அழைப்பு)**

(C/9874)

# நில்மா

நறுமணச் சொட்டு நீலம்

ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நில்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளிவீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன் ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நில்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நில்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு உங்களுக்கு தேவையான வெண்மைக்குக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளி வீசும் பிரகாசமான வெண்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.




சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95, ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699

**இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நில்மா.**

**யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்**

**CITY AGENCY**
**No. 158, STANLEY ROAD**
**JAFFNA.**
T.P :- 021-2202 / 021-2991 / 021-2911

**S.V.M**
**No. 154, HOSPITAL ROAD,**
**JAFFNA.**
T.P :- 021-2053 / 021-2100

# தோணிக்கல் பகுதியில் மேலும் இருவர் ஷெல்லுக்கு பலி

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரில் தோணிக்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து தோணிக்கல் ஐயா நூல் நிலையத்துக்கு அருகில் வசித்து வந்த விஜயராணி (வயது 30) அவரது மகனான கஜேந்திரன் (வயது இரண்டரை) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இருவரும் வீட்டில் தனியாக இருந்த சமயம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் மற்றொரு குழந்தையும் உயிரிழந்தமை தெரிந்ததே. (ஐ-3-164)

# மேலும் 147 பேருக்கு தொலைபேசி இணைப்பு

குடாநாட்டில் மேலும் 147பேருக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்க வடபகுதி மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.

அனுமதி பெற்றோரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் மேற்படி சபையின் யாழ். அலுவலகம், ரெலிகொம் நிறுவன அலுவலகம் ஆகியவற்றில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை 'உதயன்' அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஐ-3)

# ஜி.சீ.ஈ அனுமதி அட்டைகள் விமானத்தில் வந்தன

அடுத்தமாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ.சீ.ஈ. (சாதாரண)தரப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சைக்குரிய ஆவணங்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டன என்றும் -

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்த அந்த வலயங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் -

இந்தப் பரீட்சையில் பணியாற்றவிருக்கும் பிரதம பரீட்சகர்கள் தங்கள் அடையாள அட்டை இலக்கங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3-51)

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**
நடத்தும்

## இசை நாடகப் போட்டி விழா

**நிகழ்வு IV**

பிரதம விருந்தினர்:- **திரு ஆ.மகாலிங்கம்**
(பிரதேச செயலர்,
உடுவில் பிரதேச செயலகம்.)

சிறப்பு விருந்தினர்:- **திரு கி.துரைராஜா**
(பிரதம பொறியியலாளர்
வீதி, அபிவிருத்தித் திணைக்களம்.)

இடம்:- **நல்லூர் இளங்கலைஞர் மன்றம்.**
காலம்:- **21-11-99 ஞாயிற்றுக்கிழமை**
**9. 00 மணி முதல்**

**இடம் பெறும் நிகழ்வுகள்**

- **அரிச்சந்திர மயான காண்டம்** (உசன் கலைவாணி நாடக சபா)
- **சத்தியவான் சாவித்திரி** (கே.எஸ். சந்திரன் குழுவினர், கரவெட்டி)
- **அரிச்சந்திர மயான காண்டம்** (பண்ணாகம், அண்ணா கலாமன்றம்)
- **அரிச்சந்திர மயான காண்டம்** (கே. எஸ் சந்திரன் குழுவினர், கரவெட்டி)
- **'முத்தா மாணிக்கமா'** (மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கொழும்புத்துறை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பிரவேசம் இலவசம்**

(71112)

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.**

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடியில் இயங்கும் தொழிற்பேட்டைக்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை. தமிழ், ஆங்கிலம் எழுத, வாசிக்க தெரிந்திருப்பதோடு தட்டச்சிலும் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை 01-12-99 ற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தலைவர்/செயலாளர்,**
**யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,**
**228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(71040)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## O/L கணிதம் 99

தற்போதைய திட்டத்திற்கமைய அட்சரகணிதம், எண்கணிதம், கேத்திர கணிதம், புதியகணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் காலை, மாலை இரண்டிரண்டு மணித்தியாலப்படி 10 அல்லது 15 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (70992)

## யாழ்ப்பாணம்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள். 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் இடப்பெயர்வின் கதை. 3. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 4. யாழ்ப்பாணம் சிறு கதைத் தொகுப்பு ரூபா.50/= (71022)

## தேவை

Computer இல் Word, Page maker என்பன படித்த Type setting இல் அனுபவமுள்ள ஒருவர் தேவை. 22/11/99 திங்கள் காலை 9 மணிக்கு நேரில் சமுகம் தரவும். தொடர்புகளுக்கு:-கோப்பாய்சிவம், கலையகம், பருத்தித்துறைவீதி, ஆவரங்கால், புத்தூர். (70996)

## இறைச்சிக்கோழி

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். தினமும் காலை 7 தொடக்கம் தொடர்புகளுக்கு இல-19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) முத்திரைச்சந்தையடி நல்லூர்.(71021)

## O/L MATHS

99 இல் கணிதபாடம் எடுத்துக் கொடுக்க வேண்டியவர்களுக்கும் Credit, Distinction பெறுபேறடைய இறுதியான Paper Class 20 மணித்தியாலங்களில் 15 வருடங்கள் தொடர்ச்சியாக அரசாங்க விடைத்தாள்கள் திருத்திய அதிக அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். இல-85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் பின்புறம்.) திருநெல்வேலி. (71064)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



**நவரத்தினசாமி சிவபாதசுந்தரம்**
(இளைப்பாறிய அதிபர், யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்)

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 03-12-1933 | 26-07-1998 |

**திருமதி சிவபாதசுந்தரம் பூரணலட்சுமி**

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 25-07-1937 | 30-11-1998 |

திதி: 20-11-1999

ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது.

பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:-
திருமதி N. கேதீஸ்வரன்,
ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(71066)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 08 - 10 - 1949



உதிர்வு 21 - 10 - 1999

**திருமதி தனலட்சுமி இராமு**

21-10-1999 இல் காலமான எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்தி அனுப்பி மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (20-11-1999) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முனியப்பர் கோவிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(71037)

# தபால் மூலம் ஆங்கிலம்

தொழில்புரிவோர், மாணவர்கள் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.

சுயவிலாசமிட்ட நீள உறையுடன் எழுதவும்.

**English Div.**
**79, Shoe Rd,**
**Colombo -13.**

(70176)


பாவனையாளர்களே! வியாபாரிகளே!

இதோ உஜாலா உங்களுக்கு வழங்கும் ஓர் விசேட

# அறிவித்தல்




பாவனையாளர்களே! வியாபாரிகளே!

உஜாலா சொட்டு நீலம் இந்தியாவின் ஜோதி லேபோரட்டரி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு, இந்திய தரக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, வெள்ளை ஆடைகளுக்கு தூய வெண்மையினைத் தரும் சொட்டு நீலம் உஜாலாதான் என்று பாவனையாளர் அனைவரினதும் ஏகோபித்த ஆதரவினைப் பெற்றதொன்று என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

ஆனால்.....

சந்தையில் இப்போது உஜாலா போன்று பல போலிகள் நடமாடுவதால் பாவனையாளர் சிலர் போலிகளை பாவித்து வெள்ளை ஆடைகளுக்கு வெண்மை பெற முடியாமல் திண்டாடுவதாக கேள்வியுற்றோம்.

*போலிகளைக்கண்டு நீங்கள் ஏமாறலாமா?*

உஜாலா சொட்டுநீலம் வாங்கும்போது ஏற்படும் பாவனையாளரின் கவனக்குறைவினாலும், வியாபாரிகளின் உஜாலா சொட்டுநீல விற்பனையில் ஏற்படும் கவனமின்மையும் போலிகளின் நடமாட்டத்திற்கு வழிவகுக்கிறது.

*போலிகளிலிருந்து வெண்மையின் உண்மையினை அறிய நாம் தரும் வழிமுறைகள் :*

உஜாலா சொட்டுநீலத்தின் உற்பத்தி முழுவதும் இந்தியாவிலேயே மேற் கொள்ளப்படுகின்றது. இதன் அமைப்பின் மேல் மூடி சில்வைத்து மூடப்பட்டிருக்கும். வளைந்து நெலிந்த அமைப்பு இலகுவில கையாளக்கூடியதாக இருக்கும்.. பாதுகாப்பான மூடி நீலம் ஒழுகாதவாறு பாதுகாக்கின்றது. லேபலில் உற்பத்தி திகதி, ஜோதி லேபோரட்டரி நிறுவனத்தின் வர்த்தக சின்னம் காணப்படுவதோடு. ஏனைய லேபல்கள் போல் அல்லாமல் போத்தலிலேயே அச்சிடப்பட்டிருக்கும்.

எனவே பாவனையாளர்களே! வியாபாரிகளே! உஜாலா சொட்டு நீலம் உங்கள் கரங்களுக்கு கிட்டும் போது மேற்கூறப்பட்ட தகவல்களை ஒருமுறைக்கு இருமுறை சரி பார்த்து வாங்குவீர்களானால் உங்கள் ஆடைகளின் வெண்மைக்கு 100% உத்தரவாதம் வழங்குவோம்.




TNT Grafix

இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்:
**பா இம்பெக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
213/1, பிரதான வீதி, கொழும்பு-11. போன்: 321145, 470812, பெக்ஸ்: 321146

ஆடைகள் மின்னலடிக்கும் வெண்மைபெற உஜாலா பாவியுங்கள்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNOPS

இதழ் :5

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## அரசாங்க அலுவலர்களுக்கான கணனிப்பயிற்சி



இலங்கை மின்சார சபையில் கணனிப்பயிற்சி



யாழ் செயலகத்தில் பட்டதாரிப்பயிலுனர்களுக்கான கணனிப்பயிற்சி



யாழ் செயலக அலுவலர்களுக்கான கணனிப்பயிற்சி

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு UNOPS/JRRP இவ்வாண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கணனிப்பயிற்சியை வழங்கி வருகிறது. இப்பயிற்சியை UNOPS/JRRP ஐ சேர்ந்த ஐந்து கணனிப் பயிற்றுனர்கள் வழங்கி வருகின்றனர். இவ்வலுவலர்களுக்கான பயிற்சி, சுழற்சி முறையில் அவர்கள் அலுவலகங்களில் நடைபெற்று வருகிறது. இரு கணனிப் பயிற்றுனர்கள் யாழ் செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 34 செயலக அலுவலர்களுக்கு 6 மாத கால கணனிப் பயிற்சியை வழங்கி வருகிறார்கள். இப்பயிற்சி செயலக அலுவல்களுடன் தொடர்புடையதாக நடைபெற்று வருகின்றது.

ஏனைய மூவர் பிரதேச செயலகங்களுக்கும், கணனியை கொண்டுள்ள சில முக்கிய அரசாங்க அலுவலகங்களுக்கும் இப்பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, உடுவில் ஆகிய பிரதேச செயலகங்களுக்கான கணனிப் பயிற்சிகள் நிறைவடைந்துள்ளன. ஊர்காவற்றுறை, வேலணைக்கான பயிற்சிகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து இலங்கை மின்சார சபையில் 20 அலுவலர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் தற்போது யாழ் அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாக தெரிவு செய்யப்பட்ட 14 பட்டதாரிப்பயிலுனர்களுக்கு இரு வாரகால முழுநேர கணனிப் பயிற்சி UNOPS/JRRP இன் 3 கணனிகளில் யாழ் செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி நிறைவடைந்தவுடன் இப்பட்டதாரிகள் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவார்கள்

## பாபறா மல்வாணி கணனிப் பயிற்சி நிலையத்தின் எதிர்கால செயற்பாடுகளிற்கான கலந்துரையாடல்



பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையத்தை வியாபார நிலையமாக இயங்க வைப்பதற்கு கணனிப்பயிற்றுனர் குழுவுடனான கலந்துரையாடல்

மகளிருக்காக மகளிரால் செயற்படுத்தப்படுகின்ற கணனிப்பயிற்சி நிலையம் ஒன்றை பாபறா மல்வாணி கணனிப் பயிற்சி நிலையம் என்ற பெயருடன் 1999 யூன் மாதம் UNOPS/JRRP நிறுவியது. இதற்காக நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட கணனிப்பயிற்றுனர்கள் குழவிற்கு சிறப்புப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இக்குழுவிடம் யாழ்மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட 240 இளம் பெண்களுக்கு இலவச போக்குவரத்துச் சேவையுடன் கூடிய கணனிப் பயிற்சியை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இப் பொறுப்பு இவ்வாண்டு டிசம்பரில் நிறைவடையும் நிலையில் இச்சேவையானது மகளீருக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற UNOPS/JRRP இன் கொள்கைக்கிணங்க பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையம் சுயமாக 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செயற்படவுள்ளது. இந்நிறுவனத்தின் பயிற்சி பற்றிய விளம்பரம் கடந்த வாரம் சஞ்சீவி பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

இப்பயிற்சி நிலையத்திற்கு UNOPS/JRRP இனால் இடப்பட்ட மூலதனம், சுயமாக செயற்படுத்தப்படுவதன் மூலம் இந்நிலையத்திற்கு கிடைக்கும் வருமானத்தினால் பகுதி பகுதியாக வேறு மகளிர்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களிற்கு செலுத்தப்படும். இம்மூலதனம் முழுமையாக செலுத்தி முடிக்கப்படுவதன் மூலம் இந்நிறுவனம் பயிற்றுனர் குழவிற்கு உரிமையுடையதாக மாறி தொடர்ந்தும் செயலாற்றும். இந்நிறுவனம் இயங்குவது யாழ் மகளீர் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தையற்பயிற்சிகளும் சான்றிதழ்கள் வழங்கலும்



UNOPS/JRRP இன் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பல்வேறு பிரதேசங்களில் நடத்தப்பட்டு வந்த ஆறு மாத கால இலவச தையற்பயிற்சிகள் நிறைவடைந்து வருகின்றன. இப்பயிற்சிக்காலத்தின் போது தயாரிக்கப்பட்ட ஆடை, அலங்காரப் பொருட்களின் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கலும் நிகழ்சிகள் தற்போது நடைபெறுகின்றன.

இந்நிகழ்சிகள் வரிசையில் சாவகச்சேரிக்கான நிகழ்ச்சி ஒக்டோபர் 23 ஆம் திகதியும், யாழ்ப்பாணத்திற்கானது, ஒக்ரோபர் 24 இலும் கோப்பாய்க்கானது ஒக்ரோபர் 30 இலும், உடுவிலிற்கானது நவம்பர் 1 இலும், சித்தங்கேணிக்கானது நவம்பர் 4 இலும், தெல்லிப்பளைக்கானது நவம்பர் 6 இலும், பருத்துறைக்கானது நவம்பர் 16 இலும், நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளின் போது UNOPS/JRRP இன் அதிகாரிகளும் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

### நல்லூர் சந்தையைப் புனரமைக்க முடியாதா ? வாசகர் திருமுகத்திற்கான பதில்

இவ்வாண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி வெளியான வாசகர் திருமுகப்பகுதியில் நாயன்மார்க்கட்டைச்சேர்ந்த சி.க.துரைசிங்கம் என்பவர் நல்லூர் சந்தையைப் புனரமைக்க முடியாதா என கேள்வி எழுப்பியிருந்தார். பிரதேச சந்தைகள் மேல் உள்ள பற்றினை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

UNOPS/JRRP இன் சந்தைகள் புனரமைப்புத்திட்டம் ஆரம்பமாகிய போது வடமாகாண புனர்வாழ்வு மீள்குடியேற்ற அதிகார சபையின் (RRAN) அனுமதி திருநெல்வேலி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, மல்லாகம் ஆகிய சந்தைகளைப் புனரமைப்பதற்கே கிடைக்கப்பட்டது. அத்துடன் UNOPS/JRRP இன் சந்தைகள்புனரமைப்புத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நிதி நான்கு சந்தைகளை புனரமைப்பு செய்வதற்குப் மாத்திரமே ஆகும்.

நன்றி

### கட்டுமரங்களிற்கான அல்பீசிய மரங்கள்



வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்திற்கு வழங்குவதற்கு வள்ளம்/கட்டு மரத்தை உற்பத்தி செய்வதற்கான அல்பீசிய மரங்கள் UNOPS/JRRP இனால் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ICRC கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டது. இம்மரங்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்திற்கு கட்டுமரம் உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இவ்விதழ் தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

***Programme Manager***
***Public Information Team***
***UNOPS/JRRP***
***125, Temple Road***
***Jaffna.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீப்பிள் பாக் வியூ இன்
## PEOPLE PARK VIEW INN

வெளியிடங்களில் இருந்து கொழும்பிற்கு வரும் மக்களின் வசதியைக் கருத்திற் கொண்டு கொழும்பு -11 புறக்கோட்டை இல 163/1, 5 ஆம் குறுக்குத்தெருவில் (OPPOSITE GAS COMPANY)சகல வசதியும் உள்ளடக்கிய தங்குமிட விடுதி அமைந்துள்ளது. புகையிரத நிலையம், பேருந்து நிலையத்திற்கு அண்மையில் புதிய நிர்வாகத்தின் கீழ் குறைந்த கட்டணத்துடன் இயங்குகின்றது.

துணை நிறுவனம்:

**ஈஸ்வரா லொஜ்**

169, செட்டியார் தெரு,
கொழும்பு - 11. (330356)

T.P - 421090
342240

(71085)



யாழ். நகரில்

மிலேனியம் 2000 ஆண்டில்

## ஸ்ரீ முருகன்

ஸ்தாபனத்தாரின்

மேலும் பல சேவைகள்:-

சகல தபால் சேவைகள், தபால் முத்திரைகள் , மணி ஓடர்கள், ரேடியோ & T.V லைசன்ஸ், கொம்பியூட்டர் சேவைகள், உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி சேவைகள், ப(F)க்ஸ் வசதிகள், போட்டோஸ்ரட், லெமினேற்றிங், ரைப்பிங் (தமிழ் & ஆங்கிலம்) சகல சேவைகளையும் ஒரே இடத்தில் அமைதியான சூழலில் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:-

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பு நிலையம்**
**அஞ்சல் அலுவலகம்**

803, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 - 2170, 2670
021 - 3214

(C/9891)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 - 04 - 1957
மறைவு 22 - 10 - 1999

அமரர்

## குலவீரசிங்கம் குணராசா

(துன்னாலை)

பிரான்ஸில் சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு, எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குமார் (சகோதரன்)

மாதா கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(71089)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றுள்ள

**லயன் டாக்டர் சு.சி.அருளானந்தம்**
(சங்கத்தானை)
அவர்களையும்

**சி. இராமச்சந்திரன்**
(நுணாவில் மத்தி)
அவர்களையும்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**கோபி தொலைத் தொடர்பு**

நுணாவில் மத்தி - சாவகச்சேரி

T.P. No. 2226 - (கேபிள்)
070 - 212595
0094 - 70212595

(C/9890)


## 16ஆம்நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 18 - 01 - 1909
மறைவு 03 - 11 - 1999

மூதறிஞர்

## வைத்தியலிங்கம் கதிர்காமநாதன்

நாள்கள் பதினாறு நகர்ந்தோடி
மறைந்ததையா
நம் வாழ்வில் நின்நாமம்
நிதமும் ஒலிக்குதையா
நெஞ்சமலர் வாடுதையா - உங்கள்
நேசமொழி கேளாது.

எமது குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தவர்களுக்கும் எமக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது குடும்பத் தலைவர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் எமது இல்லத்தில் 20-11-99 சனிக்கிழமை (இன்று) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மூதறிஞர் இல்லம்,
ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் வீதி,
இணுவில் தெற்கு.

தகவல்:
திருமதி பஞ்சாயுதன் சிவகலா (மகள்) (71096)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகளும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 13 - 09 - 1922
ஆண்டவன் அடியில் 21 - 10 - 1999

அமரர்

## மெய்கண்டதேவர் பராசக்திப்பிள்ளை

அன்பின் சுடரே! அருளின் உருவே!
இன்னரும் சோதியாய் எமக்கொளி தந்த
தன்னிகரில்லாத்தவத்தின் வடிவே!
அன்பின் தாயே! ஆண்டு பல சென்றாலும்
நின் அன்பு வடிவம் அகத்தில் நிற்கும்!

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (20-11-99) சனிக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ம. குகதாசன் (மருமகன் - குகன்)
கு. சத்தியதேவி (மகள் - ராசு)
க. சந்திரசேகரமுதலி (மருமகன் - கனடா)
ச. தேவாகுமாரி (மகள் - கனடா)

(71086)

# இன்று நடப்பவை

வேலணை,நவ.20

அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 3மணிக்கு நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி கலந்துகொள்வார். (ஐ-167)

* * *

யாழ். கன்னியர்மடம் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (ஐ-3)

* * *

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் இசைநாடக நாட்டுக் கூத்துப் போட்டி விழா இன்று காலை 9.00 மணிமுதல் நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், பளை உதவி அரசாங்க அதிபர் சு.புத்திசிகாமணி ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-3)

* * *

அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் வடமராட்சி வலயத்தில் நடத்தப்படும் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் ஆக்கப் பொருள்கள் கண்காட்சி இன்று காலை 10.30 மணிக்கு வட-இந்து மகளிர் கல்லூரியில் வி.சி. தங்கவேல் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசாமி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-3)

* * *

# நாளை

யாழ்ப்பாணம், நவ.20

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் திருவாசக விழா நாளை காலை 9.30 மணிக்கு இணுவில் கிழக்கு அம்மா அச்சகத்துக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. (க)

* * *

காரைநகர், நவ.20

தீவகக் கல்விவலய சமய கலாசார விழாக்குழுவால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டிப் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரதமவிருந்தினராகவும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-73)

## அநாதரவாக சைக்கிள்

யாழ்ப்பாணம், நவ.20

அரியாலை வடமேற்கு கலைமகள் வீதியில் பெண்கள் சைக்கிள் ஒன்று கடந்த செவ்வாய் முதல் அநாதரவாக விடப்பட்டுள்ளது.

உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அரியாலை வடமேற்கு கிராம அலுவலர் டி.தஜீதரன் கேட்டுள்ளார். (ஐ)

## சாயிபாபா பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம்,நவ.20

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 74ஆவது பிறந்ததின விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் திருநெல்வேலியில் உள்ள சத்திய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

முற்பகல் நிகழ்ச்சி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ கு.குமாரக்குருக்களின் சிறப்புரை உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பிற்பகல் நிகழ்ச்சிகள் 2.00 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் நா.வி.மு.நவரத்தினத்தின் அவதார இசைக்கதம்பம் உட்பட கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

தென்னிந்தியத் திரைப்படங்களைத் தாராளமாகப் பாாக்கக்கூடிய நிலைமை இப்போது. தமிழகத்தில் திரை அரங்குகளில் காட்டப்படுவதற்குக் காத்திருக்கும் படங்களைக் கூட யாழ்ப்பாணத்தில் பார்க்கிறார்கள். இந்தத் திரைப்படங்கள் எங்கள் பிரதேசத்துக் கலாசார விழுமியங்களைப் பெரியஅளவில் ஆட்டங்காண வைத்துள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விடயம். தடுப்பதற்கு எவருமில்லை; தாமாக உணர்ந்து திருந்தும் தன்மையும் இல்லை என்று இளம் சமூகம் சீரழிந்துகொண்டிருக்கின்றது.

திரைப்பட மோகங்கொண்ட இளசுகள் தமது அடையாள அட்டைக் 'கவரினுள்' காதலைத் தூக்கி நின்றாடும் திரைத் 'தெய்வங்களின்' கவர்ச்சிப் படங்களையும் வைத்திருப்பது ஒன்றும் புதிய சங்கதி அல்ல.

அனால் இப்போது இந்தப் படங்கள் மீது ஐந்தாம் ஆறாம் ஆண்டு படிக்கும் சிறிசுகளுகளுக்கும் ஏகப்பட்ட மோகம் பிறந்திருப்பதுதான் புதிய தகவல். பாடசாலைக் கல்விக்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதனைவிட சினிமா நடிகர், நடிகைகளின் கவர்ச்சிப் படங்களை வாங்குவதிலேயே அவர்கள் நாட்டம் காட்டுகின்றனர்.

சில மாணவர்கள் கொப்பி, புத்தகம் வாங்குவதற்கென பெற்றோரிடம் பணம் பெற்று இக்கவர்ச்சிப் படங்களை வாங்குவதாக கிராமப் பகுதி ஆசிரியை ஒருவர் கவலை தெரிவித்தார். பாடசாலைக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குப் பணவசதி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த இளசுகள் கூட கவர்ச்சிப் படங்களுக்கு அடிமைப்பட்டு பெற்றோரை ஏமாற்றுகின்றார்கள்.

சினிமாத் தாரகைகளின் படங்களை வாங்குவதற்குப் பணம் கிடைக்காத இரண்டு சிறுவர்கள் செய்த திருகுதாளத்தைப் படித்துப்பாருங்கள்:

சினிமா நடிகைகளின் படங்களை வாங்குவதற்காக அவர்கள் வீடுவீடாகச் சென்று தமது தந்தை இறந்துவிட்டார் எனவும், தமக்கு பிச்சை இடுமாறும் கேட்டு பணம், அரிசி என்பவற்றை பெற்றுள்ளனர். பல வீடுகளில் இரந்து பெற்றவற்றில் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அரிசியை அவர்கள் வீதியில் வீசியெறிந்ததைக் கண்ணுற்றார் ஒரு பெரியவர். சிறுவர்களை விசாரித்தார். அவர்கள் தமது பாடசாலையின் பெயரைக் கூறிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். யாழ்நகரப் பிரதேசத்தின் அண்டிய பகுதியில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது.

சினிமா நடிகர் நடிகைகளின் படங்களை விற்பனை செய்து, சிறுவர்களைத் தீயவழிக்குத் திசைதிருப்பும், தமது வர்த்தக நலனை மட்டுமே கருதும் வியாபாரிகள் இது விடயத்தில் தமக்குள்ள சமூகப் பொறுப்பை உணர்வார்களா? இந்த வழியில் பணம் சம்பாதிப்பதை விட்டு வேறு நல்ல வழியை கடைப்பிடிக்கக் கூடாதா? என்று கேட்கிறார்கள் பெற்றோர்களும் ஆசிரியர்களும்.

□ □ □

ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாக அதிகாரிகள் என்று கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடத்தப்படுவது வழமை. இந்தப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவோருக்கு அந்தந்த மாகாணசபை நிர்வாகங்கள் போதியளவு அலவன்ஸுகளை வழங்குகின்றன. அனேகமாக ஒவ்வொன்றுக்கும் 1,000 ரூபா தொடக்கம் 1,500 ரூபா வரை வழங்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்குள் அடங்கும் மாவட்டங்களிலும் மேற்படி பயிற்சிவகுப்புகள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு நிகழ்வுக்கும் 500ரூபா மட்டுமே அலவன்ஸாக வழங்கப்படுகிறது. அந்தப் பணமும் உரிய நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. பல மாதங்கள் சென்ற பின்னரே அது சம்பந்தப்பட்டவர்கள் கைக்கு வந்து சேர்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களுக்கென நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பு ஒன்றுக்குரிய கொடுப்பனவு ஒரு வருடம் கழித்தே கிடைத்தது. அந்தப் பணத்தை, இப்பொழுது எப்படிச் செலவிடுவது எனத் தெரியாத ஏற்பாட்டாளர்கள், பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களை அழைத்து மதிய போசனம் வழங்கியதாக தகவல்கள் உண்டு.

வடக்கு - கிழக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டுக்கு மத்திய அரசிடம் கையேந்தி நிற்கும் நிலையாலேயே கொடுப்பனவுகள் குறைவாகவும் தாமதமாகவும் வழங்கப்படுவதாக அண்மையில் குடாநாட்டுக்கு வந்திருந்த மாகாண சபையின் உயர் அதிகாரி ஒருவர் காரணம் கூறியிருந்தாராம்.

ஆனால் இதே அதிகாரிகள்வர்க்கம் தமக்குரிய அலவன்ஸுகள், கொடுப்பனவுகளை எவ்வளவு குறுகிய காலத்தில் - அனேகமாக அந்தந்த மாதமே - "அப்பிக் கொள்வதாக" விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையில் இருந்தவாறு இந்தப் பயிற்சியை நடத்துங்கள், அந்தக் கருத்தரங்கை நடத்துங்கள் என்று கட்டளை போடும் அதிகாரிகள், தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெறுவதில் உள்ள அக்கறையை, தாம் உத்தரவிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் காட்டுவதே நியாயம். நொண்டிச் சாட்டுக் கூறி பாவம் ஆசிரியர்களை வருத்துவது தகுமா? வசதிகளுடன் அரச வாகனங்களில் சுற்றித் திரியும் தங்களைப் போன்று ஆசிரியர்களும் வசதி படைத்தவர்கள் என்ற நினைப்பா இந்த அதிகாரிகளுக்கு?

□ □ □

சிறப்புக்குரிய தானங்களில் கண் தானமும் ஒன்று. உலகத்தைப் பார்க்கும் வாய்ப்பை இழந்தவருக்கு அதனைக் காட்டும் ஒளிவிளக்காக இன்னொருவரின் கண் அமைவதுண்டு. கண் பார்வையை இழக்க இருக்கும் ஒருவருக்கும் அடுத்தவரின் கண் ஒளி கொடுக்கும்.

இந்தச் சிறப்புமிகு கண் தானம் உலகின் எல்லா நாடுகளிலும் பிரபல்யம் அடைந்த ஒன்று. கொழும்பில் கூட கண்தான சங்கம் ஒன்று நிறுவப்பட்டு, அதனூடாக கண் தானம் ஊக்குவிக்கப்பட்டது. அதனால் பல்லாயிரக் கணக்கான இலங்கையர்கள் பார்வை கிடைத்த பேற்றை அடைந்தனர். கண்தானத்தை ஊக்குவித்த டாக்டர் ஹட்சன் டி சில்வா இலங்கையர்களின் கண்களை பல வெளிநாடுகளுக்கும் அனுப்பி அந்த நாடுகளின் பிரசைகளும் ஒளிபெற உதவினார்.

யாழ்.ஆஸ்பத்திரியிலோ, தனிப்பட்ட முறையிலோ கண் தானம் செய்து சேமித்து வைக்கக்கூடிய வசதி இதுவரை இருக்கவில்லை. இப்போது சேமித்துவைக்கும் வசதி இல்லாவிடினும் தானம் செய்யக்கூடிய வசதி யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்காய் பாடுபட்டு உழைத்த கண்வைத்திய நிபுணர்கள் பாரட்டப்பட வேண்டியவர்கள்.

அவர்களின் முயற்சியால் அடுத்தவர்களின் கண் கொண்டு உலகத்தைப் பார்க்கும் வாய்ப்பு மூன்று பேருக்குக் கிடைத்தது.

ஆனால் கண்தானம் செய்ய விரும்புவோருக்கு ஊக்கமளிப்பது போல யாழ். வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் நடந்துகொள்ளவில்லை என்று கைதடியைச் சேர்ந்த ஒருவர் முறைப்படுகிறார்.

தனது கண்களைத் தானம் செய்ய விரும்பி அதற்கான பதிவுகளை மேற்கொள்ள யாழ்.ஆஸ்பத்திரிக்கு வந்த அவரிடம் இரண்டு மாதம் கழித்து வருமாறு கூறப்பட்டதாம். பதிவு செய்வதற்கான படிவங்கள் இல்லை என்று கூறியே அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

மூன்று மாதங்கள் கழித்து இரண்டாவது முறை யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தபோதும் படிவங்கள் அப்போதும் வரவில்லை என்று திருப்பி அனுப்பி இருக்கிறார்கள் யாழ்.ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்கள். கண்தானம் செய்ய விரும்பியவர் ஓர் அரசாங்க உத்தியோகத்தர்.

கண்தானம் செய்யவிரும்பியோரை ஊக்குவித்துச் செயலாற்ற வேண்டிய ஆஸ்பத்திரி - அரச - உத்தியோகத்தர்கள் இப்படி ஏனோதானோ என்று நடப்பது ஏனோ?

சம்பந்தப்பட்ட பகுதி ஐந்து மாதங்களாகப் படிவம் இல்லாது செயற்படுவதாயின் கைதடி அன்பர் போல எத்தனை பேர் திருப்பி அனுப்பப்பட்டிருப்பர்? கண்தானம் எப்படி எங்கள் பிரதேசத்தில் வளரும்?

– மின்னல்.


ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
நிலைத்திருக்கக்கூடிய மனித அபிவிருத்தி

undp

ஐ.நா.அ.தி. 150 க்கும் மேற்பட்ட அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் செயற்படுகின்றது. எமது அலுவலகங்களின் உலகளாவிய வலைப்பின்னல் ஊடாகவும் அரசாங்கங்கள் மற்றும் அபிவிருத்திப் பங்குதாரர்களுடன் கலந்துரையாடுதலினூடாகவும் ஐ.நா.அ.தி. நிலைத்திருக்கக் கூடிய மனித அபிவிருத்திக்கான செயற்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்றது.

பூகோள சுற்றாடல் வசதி/ சிறிய நன்கொடை நிகழ்ச்சித் திட்டம் (GEF/SGP)
சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான கருத்தாக்கப் பத்திரம் – இரண்டாம் செயல்முறைக் கட்டம்.

பூகோள சுற்றாடல் வசதி (GEF) என்பது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே பூகோள சுற்றாடல் பாதுகாப்பிற்கான நன்கொடை உதவி வழங்குகின்ற ஒரு நிதிப் பொறி முறையாகும். பூகோள சுற்றாடல் வசதி (GEF) இதனுடையதும் ஐ.நா.அ.திட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்றதுமான சிறிய நன்கொடை நிகழ்ச்சித் திட்டம் (SGP). சுற்றாடல் பாதுகாப்பிற்குப் பங்களிக்கின்ற அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சமூகமட்ட நிறுவனங்களினதும் நடவடிக்கைகளிற்கான உதவிகளை பெற்றுக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

சிறிய நன்கொடை நிகழ்ச்சித் திட்டமானது இலங்கையிலே அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின் சிறிய அளவிலான கருத்திட்டங்களிற்கு ஏற்கனவே நிதி உதவி அளித்ததன் பின் தற்போது இரண்டாவது கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்ற செய்முறையில் உள்ளது. நன்கொடை வழங்கும் செயன்முறையை ஆரம்பிக்குமுகமாக சுற்றாடல் விடயங்களில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புக்கள் என்பவற்றிடமிருந்து ஜெ.ஃப்/சி.ந.நிகழ்ச்சித் திட்டத்தின் மைய விடயங்களான உயிரின பல்லினத் தன்மையின் பாதுகாப்பு, காலநிலை மாற்றக் குறைப்பு சம்பந்தமான பிரேரணைகள் (புதுப்பிக்கக்கூடிய சக்தி, சக்திப் பாதுகாப்பு, சக்தி வினைத்திறன் சம்பந்தமான பிரச்சினைகள் உட்பட) வரவேற்கப்படுகின்றன. பிரேரணையானது கருத்தாக்கப் பத்திர (Concept Paper) அமைப்பில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி கருத்தாக்கப்பத்திரங்கள் ஜெ.ஃப் இனுடைய பொருள் சார்ந்த விடயத்துடனான தொடர்பு, ஜெ.ஃப் இனுடைய நிகழ்ச்சித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட விடயங்களுடனான தொடர்பு, சமூக பங்கேற்பு, நிலைத்து நிற்கக்கூடிய தன்மை புத்தாக்கம், சமூக சமத்துவம் போன்ற பிரமாணங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு மேலும் விரிவுபடுத்துவதற்காகத்தெரிவு செய்யப்படும். செயற்திட்டமானது சமர்ப்பிக்கப்பட்ட கருத்தாக்கப்பத்திரத்தின் அடிப்படையிலேயே விரிவான செயற்திட்ட பிரேரணையாக விருத்தி செய்யப்படும் எனக் கருதியே தெரிவு நடைபெறும். தெரிவு செய்யப்பட்ட கருத்தாக்கத்தை சமர்ப்பித்த அரசசர்பபற்ற நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புகள் ஆகியவற்றுக்கு பிரேரணைகளை மேலும் விரிவுபடுத்துதல் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்படும்.

கருத்தாக்கப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டி கீழே தரப்பட்டுள்ளது.
செயற்திட்டத்தின் பெயர் :–
நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :–
ஜெ.ஃப் / சி.ந.தி. மையவிடயங்கள் :– உயிரினப் பல்லினத் தன்மை / காலநிலை மாற்றம்
திட்டத்தின் பயனாளிகள் :–
திட்டத்திற்கான நியாயமும் குறிக்கோள்களும் :–
எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் :–
திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் :– (கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் உட்பட)
திட்டம் தீட்டப்படுவதில் இருந்து மதிப்பீடு செய்வது வரையிலான திட்ட நடவடிக்கைகளில் மக்களின் பங்கேற்பு :–
செயற்திட்டத்தின் நிலைத்திருக்கும் தன்மை :–
செயற்திட்டத்தின் காலம் :–
மற்றைய மூலங்கள் / வழங்குனர்களின் பங்களிப்பு (இருந்தால்) :–
மதிப்பீடு செய்யப்பட்ட செலவு விபரங்கள் :–

ஜெ.ஃப்/சி.நி.திட்டத்தின் இரண்டு மைய விடயங்கள் தொடர்பான தகவல்களை எமது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

தயவு செய்து உங்களின் கருத்தாக்கப் பத்திரங்களை 21 ம் திகதி மார்கழி மாதம் 1999 இற்கு முன்பாக கீழ் வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.
UNOPS, 125, Temple Road, Jaffna, Srilanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்டோர் எங்கிருந்தாலும் தேர்தலில் வாக்களிக்கக்கூடாது

## குமார் பொன்னம்பலம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.20

வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களின் நிலையும்' என்னும் தலைப்பில் கொழும்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:-

கடந்த 50 வருட காலமாக தமிழ் மக்கள் சிங்கள மக்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள். தொடர்ந்தும் 50 வருடங்கள் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவார்களே தவிர அவர்களுக்கு உரிமை வழங்கப்படமாட்டாது.

தமிழர்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் தமிழ் ஈழம் ஒன்றுதான் ஒரே வழியாகும்.

வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர் வடக்கு - கிழக்கில் இருந்தால் என்ன தெற்கில் வேறு எந்த இடத்தில் இருந்தால் என்ன ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கும் வாக்களிக்கக்கூடாது.

வாக்களிப்பதன் மூலம் தமிழர் இந்தக் கட்சிகளையும், அவற்றின் கொள்கைகளையும் ஏற்பதாக சர்வதேச சமூகத்துக்கு நிரூபிப்பதாக் முடியும். ஆகவே தமிழர் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழவேண்டும் - என்றார்.

மலையகத் தமிழர்களின் நிலை என்ன? என்று அங்கு எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த் குமார், மலையகத் தமிழர்களின் தலைமைகள் இதுபற்றி முடிவுசெய்யட்டும் - என்றார்.

வாக்களிக்கச் செல்லாதவர்களை பொலீஸார் மற்றும் படையினர் பலாத்காரமாக வாக்களிக்க வற்புறுத்தினால் என்ன செய்வது? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"எவரும் வற்புறுத்தி வாக்களிக்குமாறு கேட்க முடியாது. சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமை புரிவார்கள். இது விடயத்தை அவர்களிடம் தெரிவித்தால் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பர்" என்று பதில் அளித்தார் குமார். (ஐ-3)

### ஆங்கிலக்கவிதை நூல் வெளியீடு

கொழும்பு,நவ.20.

இன்னற்படும் மனித சமுதாயத்தை விழித்து ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "ODE TO SUFFERING HUMANITY" என்ற கவிதை நூல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கந்தையா நவரேந்திரன் எழுதிய இந்நூலின் வெளியீட்டுவிழா கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் டாக்டர் இவ்தி இஸ்மாயில் தலைமையில் நடைபெறும். கலாசார அமைச்சின் ஆலோசகர் எஸ்.எச்.எம். ஜமீல், நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார். நூல் ஆசிரியர் தமது ஆங்கில ஆசான் அறிஞர் ஏ.எம்.ஏ அசீஸுக்கு நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார். (அ)

### யாழ். அரசஅதிப.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களின் விவரம் மற்றும் தேர்தல்கால ஏற்பாடுகள் குறித்து ஆராயவே இவர்கள் இருவரும் கொழும்புக்கு அழைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தற்பொழுது 6லட்சத்து 13ஆயிரம் வாக்காளர்கள் இருப்பதாகவும் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கணக்கெடுக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையை விட 10ஆயிரம் வாக்காளர்கள் குறைந்துள்ளதாகவும்-

தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5-9)

### தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுவரை உள்ள போதிலும் அவசரப்பட்டு முன்கூட்டியே தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தச் சூழ்நிலை நிலவுகின்றது. வன்னியில் இராணுவ முகாம்கள் வாபஸ் பெறப்படுகின்றன. எல்லைக்கிராமங்களில் மக்கள் இடம்பெயர்கின்றனர்.

இந்த நிலையில் தேர்தலை நடத்துவது சிங்கள - பௌத்த மக்கள் தமக்கு ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதாகவே இருக்கும்.

பிரதித் தேர்தல் ஆணையாளராகத் தமிழர் ஒருவர் இருக்கிறார். சிரேஷ்ட அதிகாரியான அவர் கடமையில் இருக்கும்போது தேர்தல் திணைக்களத்துக்கு வெளியில் இருந்து ஒருவர் பதில் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது சந்தேகம் ஏற்படுகின்றது. எனவே தேர்தல் திகதியை ஒத்திவைக்கவேண்டும் - என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-7-21)

### 10 புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற மோதல்களில் -

பதுமன் (சந்தியாப்பிள்ளை அல்பேட் பிறைசின்-யாழ்ப்பாணம்), வள்ளுவன் (திருநாவுக்கரசு சிவரூபன்- யாழ்ப்பாணம்), எழில்மங்கை (சின்னத்தம்பி ஜெயமலர்-வெட்டுக்காடு), கிளிமொழி (கேசவராசா உதயலதா - கௌதாரி முனை), கார்வேந்தன் (சுதந்திரன் இரத்னசீலன்-யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

18ஆம் திகதி இடம்பெற்ற மோதல்களில் ஈகைவாணன் (வடிவேலு நிதரன்-அம்பாறை), பார்த்தீபன் (லோகநாதன் விமலதாஸன் - மட்டக்களப்பு) ஆகியோரும் -

எல்லைப்படைவீரர்களான நாகேந்திரன் ஸ்ரீகாந்தன் (யாழ்ப்பாணம்), முருகானந்தன் சாந்தகுகன் (யாழ்ப்பாணம்), வீரகத்தி பாலு (யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க-3)

### மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,நவ.20

அரியாலை மத்தி இளைஞர் கழகம் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3மணி - விக்ரம் அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி.
* பிற்பகல் 4.30மணி - வர்த்தக வங்கி வி.க.அணி எதிர் ஜெட்லைனர்ஸ் 'பி' அணி.

(ஐ-3)


**எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்**

- கற்பக விநாயகனே (சிவசிதம்பரம் பாடியது)
- மகிஷாசுரமர்தினி (மகாநதி ஷோபனா)
- நமோ நமோ ஸ்ரீ நாராயணா (மகாநதி ஷோபனா)
- அருணசிவா (மகாநதி ஷோபனா)
- அரோகரா (மகாநதி ஷோபனா)
- அருணாச்சிவா (மகாநதி ஷோபனா)
- அண்ணாமலையார் மகிமை (வீரமணிதாசன்)
- குங்குமம் (மகாநதி ஷோபனா)
- கந்தர் சஷ்டி கவசம் (மகாநதி ஷோபனா)
- திருநீறு (மகாநதி ஷோபனா)
- மாரியம்மன் தாலாட்டு (வீரமணி தாசன்)
- அருணாசலகீதம் (பிரபாகர்)
- அண்ணாமலை தீபம் (வீரமணிதாசன்)
- சர்வம் சக்திமயம் (சித்ரா)
- அம்மா கண் பாரம்மா (எஸ்.ஜானகி)
- வேம்பாத்தா (எல்.ஆர்.ஈஸ்வரி)
- அண்ணாமலையார் போற்றி (கிருஷ்ணராஜ்)
- அண்ணாமலையார் சுப்ரபாதம், கவசம் (கிருஷ்ணராஜ்)
- சுப்ரபாதம் (பம்பாய் சகோதரிகள்)
- ஹரிநாராயணா குருவாயூரப்பா (பஜனைப்பாடல்)

**சுப்பமேஸா வீடியோ, ஓடியோ சென்ரர்**
**149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(சி-9917)


### பெண் காயம்

நெசவு ஆலை இயந்திரத்தில் தலைமயிர் சிக்குண்டதில் பெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கோண்டாவில் இருபாலை வீதியில் உள்ள நெசவு ஆலை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அளவெட்டி வடக்கைக் சேர்ந்த செல்வி வீ.கண்மணி (வயது36) என்ற பெண்ணே காயமடைந்தவராவார்.

### நினைவுமலர் வெளியீடு

கொழும்பு,நவ.20

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாரின் உருவச்சிலை கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டதன் நினைவாக மலர் ஒன்று இன்று பிற்பகல் 5மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த விழா இடம்பெறுகின்றது. (ஐ-3)

## கண்ணீர் அஞ்சலி

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை அகாலமரணமடைந்த கல்லூரி மாணவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

அவர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த வருத்தத்தையும், துயரத்தினையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக் கொள்கிறது.

**ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,**
**கொழும்புக்கிளை.**

(C/9914)

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் மகேஸ்வரி

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி இராசரத்தினம் மகேஸ்வரி 19.11.99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் கமலாதேவி (கொழும்பு), லங்காதேவி (கனடா) நவரத்தினம் (நீர்வேலி), காலஞ்சென்ற மல்லிகாதேவி, ரெஜினாபதி(கோப்பாய்), புவனேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற செல்வரெத்தினம், மணிவர்ணன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசுப்பிரமணியம், சங்கரலிங்கம், சிவபுனிதம், கனகரத்தினம், இரத்தினம், நிஷானி ஆகியோரின் மாமியாரும் லதா, ராஜன், பாலசுரேஷ், வனிதா, கவிதா, விஜிதா, பாஜிதா, விஜிதா, சஜேந்திரவர்ணன், துளசிகா, பாலசொரூபி, சாந்தரூபன், துஷியந்தி, மோகனதாஷ், துவாரகா, சுபாசினி, சியாமளா, காலஞ்சென்ற செல்வநிதி, செந்தில்வர்ணன், நர்சிலா, கஜேந்திரன், நிறோஜா, சிந்திகா, ஊஷாந்திகா, விதுசாந்த், தனுசாந்த் ஆகியோரின் பேர்த்தியும் றக்சிகாவின் பூட்டியும் கனகநாயகத்தின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை 21.11.99 அன்று காலை 10 மணிக்கு நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :-
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி-9915)

### சுந்தரலிங்கம் சிவோத்தமன்

**(ஹாட்லிக் கல்லூரி மாணவன்)**

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் சிவோத்தமன்(பபா) 17.11.1999 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

இவர் மறவன்புலவு சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் பாக்கியம், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கந்தப்பு சின்னம்மா ஆகியோரின் பேரனும் சாந்தினி (2001 A/L கணிதம்), அகல்யா (தரம் 10) மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள், சிவராஜ்(தரம் 6, ஹாட்லிக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம் (பொறியியலாளர், மலேசியா), கந்தசாமி(கணக்காளர், தாய்லாந்து). தர்மராசா(கரவெட்டி) ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி வைஜைந்திமாலா சந்திரன், திரு.த.செந்தில்நாதன் (தேசிய சேமிப்பு வங்கி) ஆகியோரின் பெறாமகனும் புவனேஸ்வரி, கைலேஸ்வரி, வள்ளிநாயகி (மருத்துவமனை, மட்டக்களப்பு), கலா ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் புகழுடல் நாளை (21.11.99) ஞாயிறு அன்று 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், பாடசாலை வலயச்சமூகம், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
**கந்தப்பு தர்மராசா**
(மாமா)

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி/9916)

### துரையப்பா சிவலிங்கம்

(குட்டி)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய லிகிதர் துரையப்பா சிவலிங்கம் 19.11.99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் சீதாலட்சுமியின் அன்புக்கணவரும் திருமதி சிவாஜினி (தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி சுகந்தினி (பிரான்ஸ்), சியாமினி, திருமதி சுதாயினி (அமெரிக்கா), திருமதி ஸ்ரீரஞ்சினி, சிவாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவராஜா (ஆசிரியர், போக்கட்டி அ.த.க.பாடசாலை), உருத்திரா(பிரான்ஸ்), கரிகால்வளவன் (அமெரிக்கா), ரகுபதி (அலையோசை றெக்கோடிங் ஸ்பொட்), மீரா(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் Dr.திருஞானசம்பந்தர், பரமேஸ்வரி, மகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேந்திரன், பூபாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சி.பொ.மயில்வாகனம் (சட்டத்தரணி), சரஸ்வதி, பரஞ்சோதி(மட்டக்களப்பு), சிவானந்தன்(A.M.C F/A), செந்தில்குமாரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் தமீரா (அமெரிக்கா), நிஜங்கன், தர்சிகா, சரண்யா(மாணவர்கள், அமிர்தாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:-
**திருமதி சிவாஜினி சிவராஜா**
(மகள்)

'சிவனில்லம்',
கண்டி வீதி, சாவகச்சேரி.

(71130)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**முழு நிலா நாள் கருத்தரங்கு**

**இடம்:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – குமாரசுவாமி மண்டபம்.

**காலம்:** 22–11–99 திங்கட்கிழமை. பிற்பகல் 3.30 மணி (புதியநேரம்)

**தலைமை:** பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கருத்துரை:** சமூகச் சூழல் காரணிகளால் உருவாகும் உள நெருக்கீடுகளும் சமூகப் பின்னடைவுகளும்

**வழங்குபவர்: வே.யுகபாலசிங்கம்** (M.A., Dip - in -Edu.)

**ஆதரவு:**
S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED-PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED

580, HOSPITAL ROAD, (NEAR BANK OF CEYLON) JAFFNA Phone: 021-3254

520, HOSPITAL ROAD, (IN FRONT OF GENERAL HOSPITAL) JAFFNA



**NIRU**
TUITION CENTRE
Kondavil
A/L - 2001
**இரசாயனவியல்**
**வெப்ப இரசாயனம்**
THERMO CHEMISTRY
**ஆரம்பம்:** **20-11-99**
(சனி 4. 30 P. M)
**ஆசிரியா:**
**திரு N. மகேஸ்வரன்**
(7122)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-11-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை
சஞ்சீவி 20-11-1999


பெண்ணிற்கு அழகு பொன்னழகு. அந்த பொன்னழகை அழகுக்கு அழகு சேர்க்க அள்ளித் தருகின்றாள்
சாரங்கா
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகைமாடம்
174/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.NO- 2480 (C/9863)

## கருத்துக் கலசம்

மயூரா

### வெற்றிக்கு திட்டமிடுதல்

ஒன்றைச் செய்வதற்கு முன் கூட்டியே சரியாகத் திட்டமிடுவோமானால், நாம் செய்ய நினைத்ததில் சரிபாதி முடிந்து விட்டது என்றாகும். (A work well planned is half done.)

*ஆங்கிலப் பழமொழி.*

உலகம் ஒரு போர்க்களம்; அதில் வாழ்க்கை ஒரு போராட்டம் என்றான் நெப்போலியன். எமது வாழ்க்கையை வளமாக்க வேண்டுமாயின் பலவித கஷ்டங்களையும் சிரமங்களையும், சவால்களையும் எதிர்கொள்ளநேரிடும். இவற்றைக்கண்டு மனந்தளராது நினைத்ததை அடைய முடியும் என்ற நம்பிக்கை தேவை. எவ்வளவு சோதனைகள், வேதனைகள் வந்தாலும் அவை நீங்கி நல்ல காலம் பிறக்கும். அதற்கான விடா முயற்சி வெற்றிதரும் என்ற மன உறுதிசார் நம்பிக்கை அவசியம்.

தோல்விகள்தான் வெற்றியின் படிக்கற்கள். ஆகையால் இலக்கு வைத்ததனை எய்த முடியவில்லை என்று மனந்தளர்தல் ஆகாது. முயற்சி திரு வினையாக்கும். இந்த முயற்சிக்குத் திட்டமிடல் முதுகெலும்பு எனலாம்.

திட்டமிடாத எந்தச் செயலும் திடீரெனக் குழப்பத்தில் முடியும் ஆபத்து உண்டு. குழப்பம் பதற்றமாகி, பதற்றம் பயமாகி, பயம் பரபரப்பாகிவிடுவது உண்டு. இவற்றைத்தடுப்பதற்கு குழப்பம் தவிர்க்கப்பட வேண்டும். குழப்பம் இல்லாதிருக்கத் தெளிவான செயற்பாடு தேவை. தெளிவான சிந்தையே அதன் அத்திவாரம். தெளிவான சிந்தையில் இருந்து பிறப்பதே திட்டமிடுதல்.

குடும்பப் பெண்கள் கூடத் திட்டமிட்டே செயலாற்றவேண்டும். நாளை காலையில் என்ன உணவு; மதிய போசனம் என்னவாக இருக்க வேண்டும்; விருந்தினர் வரும்போது இரவுநேர உணவாக எதனைத் தயாரிப்பதென்று முன் கூட்டியே திட்டமிடவேண்டும். வீட்டில் உள்ள பொருள்கள் என்னென்ன என்று தெரிந்துகொண்டுதான் உணவுகளைத் திட்டமிடவேண்டும். இல்லையேல் குழப்பமடைய நேரிடும்.

அதேபோல, ஒவ்வொருவரும தமது இலக்கை, குறிக்கோளைத் தீர்மானித்துக்கொண்டு, அதனை அடைவதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும். குறிக்கோளை அடையும் திட்டம் அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாக அமையவேண்டும். திட்டமிடுதலால் ஓர் ஒழுங்குமுறை உருவாகும். ஒழுங்குமுறை இல்லாமல் ஆற்றப்படும் செயல்கள் குழம்பிப்போகும் வாய்ப்பே அதிகம். திட்டமிடுவதோடு பிரிக்கமுடியாத அம்சம் காலவரையறை. இத்தனை நாள்களில் அல்லது மாதங்களில் அல்லது வருடங்களில் இந்த வேலையைச் செய்துமுடிக்க இயலும் என வகுத்துக்கொள்வதே திட்டமிடுதலின் சிறப்பு. திட்டமிட்ட காலப்பகுதிக்குள் குறிக்கோளை அல்லது இலக்கை அடைய விடாமுயற்சியுடன் செயற்படவேண்டும். திட்டமிட்டுத் தொடங்கிய செயல், சில வேளைகளில் வகுக்கப்பட்ட காலஅட்டவணைக்குள் எய்தப்படாதிருக்கலாம். அதாவது இடையில் உண்டாகும் சிறு சிறு தடங்கல்கள், தாமதங்களால் அது தாமதமாகக்கூடும்.ஆனால் இன்று செய்வதை நாளை செய்யலாம் என்று ஒத்திவைக்கலாகாது. காலத்தைக் கடத்தக்கூடாது. முயற்சி செய்வதற்கு, அந்த முயற்சியின் மூலம் வெற்றி காண்பதற்குத் திட்டமிடல் எத்துணை அவசியமோ, திட்டமிட்டதைச் செயற்படுத்தி முடிப்பதற்கு காலத்தை வீணாக்காது, தள்ளிப்போடாதிருப்பதும் அந்தளவு அவசியம்.

# உள்ளம், மனம் என்ற சொற்பதங்கள் கொள்ளும் கருத்துக் கோலங்கள்

**நா.க.சண்முகநாதபிள்ளை**

உள்ளம், மனம் என்ற இரு சொற்களும் கொள்ளும் கருத்துக் கோலங்கள் தெள்ளத்தெளிவாக வெளிக்கொணரப்படுவதில்லைப் போலும். இயல், இசை, நாடகத்துறைகளில் இவ்விரு சொற்களும் சிலவேளைகளில் ஒன்றிற்கொன்று சார்புடைய கருத்தைக்கொண்டனவாகவும், இன்னும் சிலவேளைகளில் மாறுபட்ட கருத்துடையனவாகவும் எடுத்தாளப்படுகின்றன. உளவியலாளர்களிடமும் ஒருமித்த கருத்துக் காணப்படுவதாகத் தெரியவில்லை. இக்கட்டுரையின் நோக்கம் இரண்டு சொற்பதங்களுக்குமுள்ள கருத்து ஒற்றுமை எவை கருத்து முரண்பாடுகள் எவை என்பதை வாசகர்களோடு பகிர்ந்துகொள்வதேயாகும்.

மனித உடலமைப்பில் இரண்டு முக்கியமான உறுப்புகள் உண்டு. ஒன்று இதயம் மற்றது மூளை. இதயம் என்பது இரத்தத்தை உடல் முழுவதும் பரவும்படி செய்வதற்காக அமைந்த உறுப்பாகும். இரத்தமானது உயிர் நிலைத்திருப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதால், அதை இடைவிடாது ஓடச் செய்யும் இதயம் எல்லா உறுப்புகளிலும் மிகவும் ஏற்றமுடையதாகும். இக்கருத்தை இதய பூர்வமாக நாம் ஏற்றுக்கொண்டுதானாகவேண்டும். இரத்த உறவுகள் உள்ளத்தால் பொய்யாதவை.

இதயத்தின் தசைகள் கை, கால்களிலுள்ள தசைகள் போன்ற இயக்கு தசைகளுமல்ல; இரப்பையிலுள்ள தசைகளைப் போன்ற இயங்கு தசைகளுமல்ல. இவை ஒருவகைச் சிறப்பான தசைகள். இத்தசைகள் தாமாகத் தனித்து நின்று இயங்கும் தன்மையின. மற்றைய உறுப்புக்களைப் போலன்றி இதயத்தை வெளியே எடுத்து ஊட்டங்கொடுத்தால், அது பல மணிநேரம் இயங்கிக்கொண்டிருக்கும். இதயத்தின் ஒரு சிறு துண்டு கூட அவ்வாறு செய்யும். உணர்ச்சிவசப்படும்போது இதயம் வேகமாக வேலைசெய்து இரத்தத்தை உடலெங்கும் பாய்ச்சும். சோம்பற் குணம் மிகும்போது வேகம் குறைந்து இயங்கும். தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடுமல்லவா!

சிந்திக்கும் ஆற்றல் மூளைக்கேயன்றி இதயத்திற்கில்லை என்பது யாவரும் அறிந்ததே. எனினும் புறத்தே ஐம்பொறிகளினாலும் உள்வாங்கப்படும் புலன் உணர்வுகளின் தூண்டுதல்களால் இதயத்தின் இயக்கம் கூடியும் குறைந்துமிருக்கும். இவ்வகைத் தூண்டுதல்கள் நரம்புகள் மூலம் முண்ணாணுக்குக் காவப்பட்டு பின்னர் மூளைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. உதாரணமாகச் சூடான ஒரு பொருள் அல்லது சூடு கையில் பட்டவுடன் திடீரெனக் கையை இழுக்கின்றோம். இது இச்சையில் செயல் எனப்படும். சூட்டுணர்வு மூளைக்கு அறிவிக்கப்பட்டதும் சுட்ட இடத்திற்குரிய பரிகாரம் தேடுவதில் ஈடுபடுகின்றோம். இது இச்சை உள்ள செயல் எனப்படும். மிகச் சூடான தேநீர் கிண்ணத்தில் எமக்குத் தரப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அது சூடாக இருக்கின்றது என்று தெரியாமல் அதனைக் கையில் எடுக்கின்றோம். சூட்டுணர்வு கையில்படுகின்றது; முறைப்படி கையை விட்டிருக்கவேண்டும். ஆனால் நாம் தேநீரின் பெறுமானம் கருதி அப்படி விட்டுவிடுவதில்லை. மூளையில் இருந்து பெறுமானம் கருதி விடப்படும் கட்டளை தேநீரைக் கீழே போடுவதைத் தடுக்கிறது. அதாவது மனம் தடுக்கிறது. எல்லாத் தூண்டல்களுக்கும் இவ்வாறான துலங்கல்கள் உண்டு. ஒன்று சிந்தனையின் பாற்பட்டு மூளையிலிருந்து அல்லது மனத்திலிருந்து வருகின்ற இச்சை உள்ள செயல். மற்றது சிந்தனையின் பாற்படாமல் முண்ணானில் இருந்து வரும் இச்சை இல்லாத செயல். மூளையும் முண்ணாணும்; உடலிலுள்ள ஏனைய உறுப்புக்களும் செய்றபடுவதற்கு மூலகாரணமாக இருப்பது இதயத்தின் மூலம்இறைக்கப்படும இரத்தமாகும். எனவே; இதயத்தின் செயற்பாடு முதலில் உணர்ச்சிவசமான செயல்களுக்கும் பின்னர் அறிவுபூர்வமான செயல்களுக்கும் தூண்டுதலாக இருக்கிறது. உணர்ச்சிபூர்வமான செயல்கள் உள்ளத்திலிருந்தும் அறிவுபூர்வமான செயல்கள் மூளையில் இருந்தும் உந்தப்படுகின்றன என்று எண்ணத் தோன்றுகின்றது. உள்ளம் என்பது இதயத்தையே குறிக்கின்றது என்று இதனால் கருதலாம். மனம் என்பது மூளையைக் குறிக்கிறது. இச்சையற்ற செயல்களுக்கு அதாவது உணர்ச்சிபூர்வமான செயல்களுக்கு இதயமும் முண்ணாணும் காரணமாகவும், இச்சையுள்ள செயல்களுக்கு இதயமும், முண்ணாணும், மூளையும் காரணமாகவும் இருக்கின்றன. காதலர்கள் இதயத்தை வரைந்தே தம்காதலை வெளிப்படுத்தல் மரபு - உள்ளத்துள்ளது காதல். உள்ளத்தை அகம் என்றும் சொல்லுவர். அகம் என்பது மேலே உந்தும் சக்தி என்றும் மனிதர்களுடைய நுகர்ச்சிக் களத்தில் அகம் என்பது ஒரு தனிப்பட்ட மண்டலம் என்றும் பலர் கருதுகின்றனர். இயல் பூக்கங்களும், உள்ளக்கிளர்ச்சிகளும், உள்ளப் போக்குகளும் சேர்ந்தே அகம் அல்லது உள்ளமாகும். இங்கே அன்பு, சாந்தி, தர்மம், அகிம்சை போன்ற நல்ல மெய்ப்பாடுகள் அல்லது உணர்ச்சிகளை உள்ளத்தில் வளர்த்தும் கோபம், கொடூரம் போன்ற ஆக்ரோசமானவற்றை அடக்கியும், சகித்தும் நாம் பழகவேண்டும். "உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம் காத்துக்கொள்ளும் குணமே குணமென்க" என்பதனால் அக வாழ்விலே "குடும்பம் என்பது குணம் வளர்க்கும் பாத்தியாக" மாற வேண்டும். மனமானது அறிவுபூர்வமான கடிவாளங்களை இட்டும் உள்ளமானது மன எழுச்சிப் பிறழ்வுகளை மனதார அறிவுபூர்வமாக அடக்கியும் இணைந்து செயற்படவேண்டும். இதுகாறும் உள்ளம், மனம் என்பவை பற்றிய சிந்தனைச் சிதறல்களையும், கூட்டுக்கருத்துக்களையும் பார்த்துள்ளோம். கருத்தூட்டம் தர உதவுவதாகுக.

'உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற'

*

## துரியோதனன் தொடர்பு



ஒருசமயம் தர்மபுத்திரரும், துரியோதனும் இளம் வயதில் ரதத்தில் ஏறி காட்டில் வில்பயிற்சி செய்யச் சென்றார்கள்.

பிறகு திரும்பி வரும்போது தர்ம புத்திரர், ரதத்தில் ஏறாமல் நடந்துவர நினைத்தார்.

''நாடாளும் மன்னராகப் போகும் நான், பூமியில் கால் பதிய நடந்துவர விரும்புகிறேன்'' என்றார் தர்மர்.

இதைக் கேட்ட துரியோதனன், ''நாடாளப் போவது நானல்லவா? நானும் இந்த மண்ணில் நடந்து வருவதுதானே முறை?'' என்று நினைத்தான், ரதத்திலிருந்து இறங்கினான்.

இருவரும் ஒன்றாக நடந்து சென்றார்கள்.

வழியில் ஓர் இறைச்சிக் கடையை தர்ம புத்திரர் பார்த்ததும், அவர் மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றின.

'இந்தக் கடையிலுள்ள இளைஞன் ஏன் இத்தகைய பாவத் தொழிலைச் செய்கிறான்? உயிர்வதை செய்வது மகா பாவம் என்பது இவனுக்குத் தெரியாதா? இப்படிப்பட்ட இழிந்த தொழிலை செய்து வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? கருணை, அன்பு, தர்மம், நியாயம் போன்ற நல்ல குணங்கள் எதையும் இவன் நினைத்துப்பார்க்கமாட்டானா? இழிவான இந்தத் தொழிலைச் செய்து மகா பாவத்தைத் தேடிக் கொள்கிறானே...!''

தர்மபுத்திரர் இறைச்சிக் கடையிலிருந்த இளைஞனை மீண்டும் ஒருமுறை பார்த்தார்.

அப்போது அவன், தான் வெட்டிய இறைச்சித்துண்டுகளில் சிலவற்றைக் கடையின் கூரையின் மீது தூக்கி எறிந்தான். அங்கே அவற்றை உண்பதற்காகவே காகங்கள் காத்திருந்தன.

இளைஞன் இன்னும் சில இறைச்சித்துண்டுகளை வீதியோரம் இருந்த நாய்களுக்குப் போட்டான். அவைகள் அவற்றை ஆவலுடன் கவ்விச்சென்றன.

இந்தக் காட்சிகளைப் பார்த்து தர்மபுத்திரர் வியந்தார். செய்வது இறைச்சி வெட்டும்தொழில் என்றாலும் அதிலும் தர்மசிந்தனை கலந்து செய்த அந்த இளைஞனை தர்மபுத்திரர் மனதிற்குள் பாராட்டினார்.

எதைப் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும், நல்லதாகவே நினைப்பது தர்ம புத்திரரின் இயல்பு. ஆனால் இன்றைக்கு, அந்த இறைச்சிவிற்கும் இளைஞனைப் பற்றி இழிவாகத்தான் எண்ணியது ஏன் என்று தர்மபுத்திரருக்கே விளங்கவில்லை.

இதைப் பற்றி அவர் அரண்மனைக்குத் திரும்பியதும் ஸ்ரீகிருஷ்ணனிடம் தெரிவித்தார்.

ஸ்ரீகிருஷ்ணர்: தர்மபுத்திரா நீ யாருடன் நடந்து வந்தாய்?

தர்மர்: துரியோதனனுடன் வந்தேன்.

ஸ்ரீகிருஷ்ணன்: அதன் விளைவாகத்தான் இந்த எண்ணங்கள் உன் மனதில் தோன்றியிருக்கின்றன! தர்மா, தூய எண்ணங்கள் இல்லாதவர்களோடு சேரும்போது அந்த எண்ணங்கள் நம்மையும் வந்தடைகின்றன. நல்லவர்களின் தொடர்புதான் எப்போதும் வேண்டும் என்பதைப் புரிந்து கொள்!

ஸ்ரீகிருஷ்ணன் கூறிய விளக்கம் தர்மபுத்திரரின் மனதில் தெளிவை ஏற்படுத்தியது.



## சாயி சிந்தனை

**முன் கூட்டியே ஆரம்பியுங்கள்;
அவதானமாகச் செயற்படுங்கள்;
இலக்கினைப் பாதுகாப்பாக அடையுங்கள்.**

இவை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பொன் மொழிகள். ஒவ்வொருவரின் வாழ்வும் வளம் பெறுவதற்குரிய வளமான உபதேசமாகும். நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பல் வேறுபட்ட கருமங்களை ஆற்றுபவர்களாக விளங்குகின்றனர். பாடசாலை செல்கின்ற மாணவர்கள், இல்லத்தைப் பேணுகின்ற இல்லத்தரசிகள், தொழிலகம் செல்கின்ற சேவகர்கள் போன்ற பலரும் தங்கள் தங்கள் கருமங்களைக் காலதாமதமின்றி முன்கூட்டியே ஆரம்பித்தல் நன்று. ஆற்றும் கருமங்கள் எதுவாயினும் அதனைப் பொறுப்போடு, பதற்றமின்றி, அவதானமாக ஆற்றுதல் நன்று. இவ்வாறு ஆற்றுகின்றபோதே ஒவ்வொருவரும் எடுத்த கருமத்தின் இலக்கினைப் பாதுகாப்பாக, உறுதியாக அடைய ஏதுவாகிறது. பகவானின் இவ்வாக்கானது ஆழ்ந்தகன்ற பொருள் கொண்டதாகும். ஒவ்வொருவரும் வாழ்வில் இவ்வாக்கு அளிக்கும் பொருள் உணர்ந்து கருமமாற்றின் தேவையில்லாத இடையூறுகளை, இன்னல்களை நீக்கிச் சிறப்பாகச் செயற்படுதல் சாத்தியமாகும்.

*(எதிர்வரும் 23ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் பிறந்த தினமாகும்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிகாரங்களின் முள்ளைத் திருப்பி காலத்தை மாற்றிய தனிமனிதன்

கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு 12.00 மணிக்கு பிரிட்டனின் கடிகாரங்கள் அனைத்திலும் சிறிய முள் பின் நோக்கித் திருகப்பட்டு - தூங்கிக் கொண்டிருந்த அனைவருக்கும் கூடுதலாக ஒரு மணி நேரம் போனசாக வழங்கப்பட்டது. பனிக்காலத்தில் போர்வைக்குள் முடங்க இந்த ஒரு மணி நேரம் வரவேற்கத்தக்கதுதான்.

பின்னர் பெப்ரவரி, மார்ச் மாதத்தில் சூரியனின் கதிரொளி படுக்கையறைவரை திரைச்சேலைகளைக் கிழித்துக்கொண்டு முகத்தில் பாயும் காலத்தில் கடிகாரத்தின் சிறு முள் மீண்டும் முன்னோக்கித் திருகப் படுகின்றது. ஒரு மணி நேரத்தை பிரிட்டன் மக்கள் இழக்கின்றனர். விரைவாக வேலைக்கு செல்லவேண்டுமாம்.

ஆண்டுக்கு இரண்டு தடவை கேலிக்கூத்துப்போல் செய்யப்படும் இந்த சின்ன முள், பெரிய முள் ஜிம்பகா விளையாட்டு பிரிட்டனில் மட்டுமல்ல, இன்று ஜேர்மனியில், கனடாவில், ஜப்பானில், அமெரிக்காவில் கூட கடைப்பிடிக்கப்படுகின்றது.

இது எங்கே ஆரம்பித்த வழக்கம்? ஏன் ஆரம்பித்தது??

இது பிரிட்டனில் ஆரம்பித்த வழக்கம். தனி மனிதன் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு 85 ஆண்டுகளாக பிரிட்டனில் நடந்து வரும் வழக்கம். அந்தத் த்னி மனிதர் வில்லியம் வெலட் அவர்கள்தான். அரசியல்வாதியோ, செல்வாக்கானவரோ அல்லர். ஆனால் செல்வந்தர்.

தென்கிழக்கு லண்டனில் (South East London) தமது தந்தையார் ஆரம்பித்த வில்லியம் வெலட் அன்ட் சன்ஸ் என்ற வீடு கட்டும் கட்டடத் தொழில் நிறுவனத்தை நடத்தி வந்தார். உள்ளூர் தொழிலாளர்களைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டி விற்று வந்தது அவரது நிறுவனம். நல்ல ஊதியம் வழங்கும் நல்ல முதலாளி என்று பெயர் வாங்கினார். காலை வேளையில் குதிரையில் ஏறி ஊரைச் சுற்றி வருவார்.

தென்மேற்கு லண்டனுக்கு அருகே (South West London) சிசல் ஹேரஸ்ற் என்ற இடத்தில் அமைந்துள்ள வீட்டிலிருந்து புறப்பட்டு குதிரையில் போய்க்கொண்டிருந்தார் திரு. விலட். அவருக்கு அப்போது வயது 50. ஆண்டு 1906. சூரியனின் பிரகாசமான ஒளி பாய்ந்துகொண்டிருந்தும் கூட தனது அயலவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தார்; சிந்தித்தார்.

ஏன் தூங்குகிறார்கள்? ஓ,.. கடிகாரத்தில் அவர்கள் எழுந்திருக்க இன்னும் உரிய நேரம் 7 மணியோ 8 மணியோ வரவில்லை. அதனால் தூங்குகிறார்கள் என்பதை உணர்ந்தார். இத்தனை பேர் வாழ்வையும் மனித ஆற்றலையும் ஒரு சாதாரண கடிகாரம் வீணாக்குவதா?

சூரியன் விரைவாக வந்து விடும் கோடை காலத்தில் கடிகாரங்களை முன்கூட்டியே ஒரு மணி நேரம் முன்னால் பிடித்து வைத்தால் விரைவாக வேலைக்குப் போய் வேலையை முடித்துவிட்டு வரலாமே என்று தீர்மானித்தார்.

"சூரிய ஒளி என்பது ஆண்டவனால் மனித இனத்துக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதம். அதனை முடிந்த அளவு நாம் ரசித்து அனுபவிக்க வேண்டும். சூரிய ஒளியை வாசலில் காத்திருக்க வைத்துவிட்டு நாம் தூங்கிக் கொண்டிருக்கக் கூடாது" என்று நண்பர்கள் மத்தியில் பேசினார்; ஆதரவு திரட்டினார். பத்திரிகைகளில் எழுதினார். அரசாங்க ஆட்சிப்பீடத்தை அணுகினார். அவருக்கு எதிர்ப்பு பயங்கரமாக உருவாகியது. பிரிட்டனின் ரயில்வேத்துறை கத்திக் கூக்கிரலிட்டு எதிர்த்தது. நேரத்தை மாற்றி விளையாடினால் ரயில்கள் மோதிக்கொள்ளும். விபத்துக்கள்தான் அதிகரிக்கும் என்று கத்தினார்கள். மற்றும் சிலர் விலட் அவர்களை எள்ளி நகையாடினர். விடாக்கண்டர் விலட் விட்டு விடவில்லை. தமது கருத்துக்களை அச்சிட்டுப் பிரசுரித்தார். பல்வேறு மொழிகளில் 18 பதிப்புக்களை வெளியிட்டார். "வெளிச்சத்தின் வீண் விரயம்" என்பது அவரது பதிப்பின் தலைப்பு. தனது கருத்தை ஏற்று ஆண்டு தோறும் கடிகாரத்தின் சின்ன முள்ளை ஒரு மணி நேரம் முன்னால் பிடித்துவிட்டால் எரிபொருள் சேமிப்பு 20 இலட்சம் ஸ்ரேலிங்பவுண் பெறுமதி என்று கணக்கிட்டு வாதிட்டார். விலட்டுக்கு 'முட்டாள்' பட்டம் கட்டினார்கள் சிலர். திடீரென பெரிய இடத்திலிருந்து எதிர்பாராத ஆதரவு விலட்டுக்கு வந்து சேர்ந்தது. இங்கிலாந்தின் அப்போதைய மன்னர் 7ஆவது எட்வர்ட் அரசர் "இது அற்புதமான ஐடியா" என்று வெலட்டைப் பாராட்டினார்.

லண்டனில் இருந்து
சுதா

நேரத்தை மாற்றினால் 20 லட்சம் ஸ்ரேலிங்பவுண் சேமிக்கலாம் என்று வாதிட்டார். முதலாவது உலகப் போர்க்காலம் அது. பகல் நேரம் வெளிச்ச நேரம் மேலும் கூடுதலான நேரம் நீடித்தால் போர்க்காலப் பயிற்சிகளுக்கு நல்லது என்று வெலட் சுட்டிக்காட்டினார். மன்னர் எட்வர்ட் தனது சந்திரிங்ஹாம் அரண்மனையிலும் பல்மோறல் வின்சா அரண்மனைகளிலும் இந்த கடிகார நேர மாற்றம் அமுலாக்கப்பட உத்தரவிட்டார். பிரதமர் அஸ்குவித் தலைமையிலான அரசு எதிர்ப்புத் தெரிவித்தும் கூட மன்னர் வெலட்டின் திட்டத்திற்கு ஆதரவு தந்தார். அப்போதைய ஆட்சியில் உறுப்புரிமை வகித்த சேர்ச்சில் போன்றவர்கள் ஆதரவு தர வெலட்டின் திட்டம் நாடாளுமன்ற மசோதாவாக பகல் வெளிச்சம் என்ற சேமிக்கும் மசோதா என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தோல்விகண்டது. 1914 இல் முதலாவது உலகப்போர் வெடித்தது. போர் முடிவடையும் வரை தனது பிரச்சார முயற்சிகளை தொடரமுடியாது என்று உணர்ந்த வெலட் போர் முடியும்வரை தனது முயற்சிகளை ஒத்திவைத்தார். காலத்தை மாற்றமுயன்ற வெலட் மீது காலன் பொறாமைகொண்டான். அடுத்த ஆண்டு 1915 மார்ச் 4ஆம் திகதி வெலட் உயிர்துறந்தார். ஆனால் அவரது கருத்து உயிர் வாழ்ந்தது. 1916 மே மாதம் 21ஆம் திகதி (வெலட்டின் பிறந்த தினத்தன்று) பிரிட்டிஷ் அரசின் புதிய மசோதா சட்டமாகியது. போர்க்காலத்தில் நிலக்கரியை சேமிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு வெலட்டின் திட்டத்தை சட்டமாக்கியது. நேர சேமிப்புக்காக மாற்றப்பட்ட புதியநேரம் 'வெலட் நேரம்' என்று மக்களால் அழைக்கப்பட்டது. "போர் மூண்டதும் பிரிட்டிஷ் மக்கள் தமது பழைய கொள்கைகளை பிடிவாதங்களை அழித்து விடுகிறார்கள்" என்று போர்க்கால பிரதமர் சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் சொன்னதுபோல போர் முடிவடைந்த பின்னர் கூட பிரிட்டிஷ் மக்களுக்கு 'வெலட் நேரம்' பிடித்து விட்டது. 1925இல் போர் முடிவடைந்த பின்னர் கூட அது நீடித்தது. 1925 இல் பிரிட்டனின் கோடைகால நேரச்சட்டம் இயற்றப் பட்டதோடு இப்போது பிரிட்டன் மக்கள் அனுபவிக்கும் 'நேரமாற்றம்' சட்டபூர்வமாகியது. பிறநாடுகளும் இதனைப் பின்பற்றின. பெற்ஸ்வூட் என்ற இடத்தில் வெலட்டுக்கு நினைவுத்தூபி ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அந்தத் தூபியின் அடியில் பிரிட்டன் மக்கள் இன்றும் மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்துகிறார்கள்.

*

# சச்சின் தலைமையில் பிரகாசிக்கும் இந்திய அணி




இந்தியாவில் கடந்த மாதம் பலரது எதிர்பார்ப்புக்களையும் உசுப்பி விட்டது ரஜினியின் 'படையப்பா' திரைப்படத்தின் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களோ, ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளுக்கான மரணதண்டனைத் தீர்ப்புத் தொடர்பான ஆளுநரின் முடிவோ அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய நாட்டின் புகழை சர்வதேச ரீதியில் பரப்பிவரும் இந்தியக் கிரிக்கெட் அணியின் புதிய அணித்தலைவரான சச்சின் டெண்டுல்கர் முதுகுவலிச் சத்திர சிகிச்சையின் பின்பு இந்தியக் கிரிக்கெட் அணியில் மீண்டும் இணைந்து கொண்டமையே என்றால் அதை எவரும் மறுக்கமுடியாது.



அணித்தலைவர் டெண்டுல்கருடன் கங்குலி.

சச்சினின் விறுவிறுப்பான அந்தப் பழைய ஆட்டத்தை "கிரிக்கெட் எமது மதம்; சச்சின் எமது கடவுள்" எனக்கூறும் இந்திய ரசிகர்கள் காண ஆவலாய்க் கிடந்தார்கள்.

இவர்களுக்கெல்லாம் ஒரு வரப் பிரசாதமாக அமைந்ததே இந்திய-நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச மற்றும் டெஸ்ட் போட்டிகளாகும்.

நியூஸிலாந்து அணியுடன் மொஹாலியில் விளையாடிய டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இனிங்ஸ் பல வித எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்த இந்திய ரசிகர்களின் ஆவலைத் தகர்த்தெறிந்தது. அதிலும் இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் 83 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து நின்ற நிலை இந்திய அணிக்கு எதிரானவர்கள் கூடப் பரிதாபப்படக்கூடிய ஆட்டமாகவே அமைந்தது.

இந்திய ரசிகர்கள் வவுனியாவில் இடம்பெயர்ந்த அகதிகள் போலானார்கள். ஏனெனில் அவர்கள் மலைபோல நம்பியது சச்சினை. ஆனால் அவரோ வெறும் 18 ஓட்டங்களை மட்டும் அடித்துவிட்டு 'முதுகுவலி சத்திர சிகிச்சையின் பின் வந்த எனக்கு இது போதும்' என்றது போல காலை வாரி விட்டுவிட்டார். நியூஸிலாந்து அணியைப் பொறுத்தவரையில் தலைமைப் பீடம் அனுபவம் மிக்கது. ஆகவே நினைத்ததை நடத்திக் காட்டிவிட்டது. அப்போதுதான், இந்திய அணிக்கு மட்டுமல்ல இந்திய அணியின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் அஸாருதீனின் அருமை புரிந்திருக்கும். விஜய்பரத்வாஜ், எம்.எஸ்.கே.பிரசாத், டெவன் காந்தி ஆகியோர் உட்பட புதுமுக இளம் ஆட்டக்காரர்கள் தங்களுக்குரிய அடைமொழியை மெய்ப்பித்து விட்டுச் சென்றமை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுத்திருந்தது. இருப்பினும் அவர்களது பின்னைய ஆட்டங்கள் பிரகாசமானதாக அமைந்ததால் புதியவர்கள் தெரிவில் ஒரு வெற்றிகண்டது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

நியூஸிலாந்து அணியோ பந்து வீச்சில் காட்டிய அக்கறையை துடுப்பாட்டத்தில் காட்டத்தவறியமையே அவர்களது தோல்விக்கு வழிவகுக்கும் என அப்போது நினைத்திருக்க நியாயமில்லை. ஆனால் இரண்டாவது இனிங்ஸில் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை மட்டும் இழந்து குவித்த 505 ஓட்டங்கள் இந்திய அணியின் துடுப்பாட்ட வலிமையைச் சான்று பகர்ந்தது. அது மட்டுமல்லாமல் சச்சின் (126*), ட்ராவிட் (144) ஆகியோரது சதங்களையும், ரமேஷ் (73), காந்தி (75), கங்குலி (64*) ஆகியோரது அரைச்சதங்களையும் இந்திய அணியின் வேகத்திற்கு சான்றாகக் கூறலாம். தமது பந்து வீச்சில் முதல் இனிங்ஸுக்கும் இரண்டாம் இனிங்ஸுக்கும் இவ்வளவு ஏற்ற இறக்கமா என நியூஸிலாந்து அணி சிலையாய் மலைத்தது. ஆனாலும் ஒருவாறு வரையறுக்கப்பட்ட மீதி நாள்களில் களத்தில் நின்று ஆட்டத்தை சமநிலை பெறச் செய்தமை இந்திய அணியின் துரதிர்ஷ்டமும் நியூஸிலாந்து அணியின் அதிர்ஷ்டமும் எனச் சொல்வதில் தவறில்லை.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமானதும் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 256 ஓட்டங்களுக்கெல்லாம் ஆட்டமிழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்கள் சென்ற போட்டியில் விட்ட தவறை அப்போது விட்டுவிடவில்லை. ரமேஷ், காந்தி இருவருமே அரைச்சதமடித்து ஆட்டத்தின் அத்திரவாரத்தைப் பலப்படுத்திக் கொண்டனர். 330 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்த இந்திய அணியைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியினர் 155 ஓட்டங்களுள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர். 83 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணி காந்தி - சச்சின் அற்புதமான இணை ஆட்டத்துடன் தாய் மண்ணில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் சுழல் பந்துவீச்சாளர்களான இந்தியாவின் கும்ப்ளே, நியூஸிலாந்தின் விட்டோரி ஆகியோர் ஒவ்வொருவரும் 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தமை போட்டியின் சிறப்பம்சமாகும்.

## ராஜ் - வீகன்

நியூஸிலாந்து அணியுடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டிக்கு 1 - 0 என்ற முன்னணி நிலையுடன் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்த ஆட்டத்திலும் இந்திய அணி இரண்டாவது டெஸ்ட் போலவே சிறப்பாக ஆடி 7 விக்கெட்டுக்களை இழந்து 583 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ரசிகர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது சச்சின் அடித்த 217 ஓட்டங்கள் அவரது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் [illegible] ஓட்ட எண்ணிக்கை ஆகும். அத்துடன் ரமேஷ் (110), கங்குலி (125) ஆகியோர் பெற்ற ஓட்டங்களும் இந்த மொத்த ஓட்டங்களுக்குச் சமர்ப்பணமாகின. இந்திய அணியின் இந்த நிதானமான துடுப்பாட்டம் தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து அணியின் ஆட்டத்திற்குப் பெரும் சவாலாய் அமைந்தது. ஆனாலும் நியூஸிலாந்து அணியினர் சாதித்துக் காட்டுகிறோம் என்றவாறு களமிறங்கி 308 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந் தார்கள். இந்த இனிங்ஸைப் பொறுத்த வரையில் நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்டத்திற்கு அவ்வப்போது சாவு மணி அடித்தபடி இருந்தவர் அனில் கும்ப்ளே. இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்தியாவின் துடுப்பாட்டத்தில் ஒருவித அலட்சியப்போக்குக் காணப்பட்டது. இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட நியூஸிலாந்து அணியினர், இந்திய அணி ஆட்டத்தை நிறுத்திக்கொண்ட 148 ஓட்டங்களுக்குள்ளும் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். தன் இரண்டாவது இனிங்ஸில் முதல் இனிங்ஸில் போலல்லாது சிறப்பாகவே துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 427 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என்றபோதிலும் வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ள குறைந்த காலப்பகுதியில் குவிக்கப்போய் இரண்டாவது வெற்றியையும் இந்திய அணிக்கு வாரி வழங்க விரும்பாது இரண்டு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்ற துடன் மூன்றாவது டெஸ்ட் ஆட்டமும் சமனிலையில் முடிவடைந்தது.

விளைவாக, நடைபெற்று முடிந்த மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை இந்திய அணி 1 - 0 என்ற கணக்கில் வென்றதன் மூலம் டெஸ்ட் கிண்ணத்தைத் தனதாக்கியது. சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான இந்த வெற்றிக்கிண்ணம் இந்திய ரசிகர்களின் பலத்த எதிர்பார்புகளுக்கு இந்திய அணியால் அளிக்கப்பட்ட கௌரவமாகக் காணப்பட்டது.

போனது போனதுதான் இனிப் போக இருப்பதையாவது தடுத்து தமதாக்குவோம் என்ற நிலையில் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்குத் தயாரானது நியூஸிலாந்து அணி.

பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் மத்தியில் ராஜ்கோட்டில் ஆரம்பமான முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி, பழிக்குப்பழி தீர்த்தது போல இந்திய அணியின் பந்து வீச்சினைத் தவிடுபொடியாக்கி 50 ஓவர்கள் நிறைவில் 349 ஓட்டங்களைக் குவித்தது. இதில் நதான் அஸ்டில் அடித்த அற்புதமான சதமும், ஸ்பெயர்மன், த்வோஸ் ஆகியோர் பெற்ற அதிரடி அரைச்சதங்களும் பிளமிங்கின் எதிர்பார்ப்புகளுக்குப் பால் வார்த்தன. தொடர்ந்து ஆடும் இந்திய அணி மிக மோசமான தோல்வியைச் சந்திக்கப்போகிறது என எதிர்பார்த்தாலும் 306 ஓட்டங்களை அடித்து கௌரவமான ஒரு தோல்வியைச் சந்தித்துக் கொண்டது. அன்றைய ஆட்டத்தில் சச்சின் சிறப்பாக ஆடியிருந்தாலும் அந்த 350 என்ற இலக்கையும் அடைந்திருக்கலாம் என்பது பலரதும் கருத்து. ஆனாலும் இந்திய அணி தோற்றுப் போகும் அனேக ஆட்டங்களில் சிறப்பாக ஆடும் அஜய் ஜடேஜாவின் ஆட்டம் அன்றைக்கும் விதிவிலக்காக அமையவில்லை. இவர் 95 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த நிலை



நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங்.

தான் எல்லோரும் கவலைப்பட வேண்டிய தொன்றானது. 120 ஓட்டங்களை விளாசியதுடன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய நதான் அஸ்டில் அன்றைய ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முதலாவது ஆட்டத்தின் சரிவை நிவர்த்தி செய்யும் முகமாக ஹைதராபாத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி மிகமிகச் சிறப்பாக விளையாடியதுடன் பல சாதனைகளையும் நிலைநாட்டியது.

(இந்த ஆட்டம் பற்றிய விரிவான விவரம் கடந்த வார சஞ்சீவி விளையாட்டரங்கில்)

கடந்த ஆட்டத்தில் இந்திய அணிக்குக் கொடுத்த கசப்பான மருந்தை இம்முறை தாங்களேஅருந்த

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் பூட்டோவுக்கு ஏற்பட்ட கதி நவாஸ் ஷெரீபுக்கும்?

அமெரிக்க நடாளுமன்றத்தில் பாகிஸ்தானுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பொருளாதார மற்றும் ஆயுதத் தடைகள் -

தென்ஆபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பாகிஸ்தானை இடைநிறுத்திவைக்க எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் -

பாகிஸ்தானில் நவாஸ்ஷெரீப்பை நீதிமன்றம் முன்நிறுத்தி அவரைத் தண்டிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் - ஆகியவை காரணமாக சர்வதேச நாடுகளின் கவனம் மீண்டும் உபகண்டம் நோக்கித் திரும்பி உள்ளது.

பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயக நடைமுறைகளை ஏற்படுத்துவ



பாகிஸ்தானின் புதிய இராணுவ ஆட்சியாளர் முஷாரப்

தற்கான கால அட்டவணை ஒன்றை வெளியிடுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப், பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் வரும் நெருக்குதல்களுக்கு பணிந்துபோவாரா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருந்துவருகிறது.

பாகிஸ்தானில் ஜனநாயக நடைமுறைகளை மீண்டும் கொண்டுவரப் போவதாக ஜெனரல் முஷாரப் திரும்பத் திரும்ப கூறிவருகிறார். ஆனால் அதற்கான காலஅட்டவணை ஒன்றை அவர் வெளியிடத் தயங்குவதே அவரின் நோக்கங்களில் சந்தேகம் ஏற்படக் காரணம் ஆகும்.

1977ஆம் ஆண்டு அப்போதைய சிவிலியன் பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோவை பதவி நீக்கம் செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஸியா - உல் - ஹக் 90 நாள்களில் மீண்டும் ஜனநாயக நடைமுறைகளை அமுல்செய்யப்போவதாகவும் தேர்தல்களை நடத்தப்போவதாகவும் அறிவித்திருந்தார். ஆனால் தனது வாக்குறுதிகள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு பதினொரு வருடங்கள், அதாவது 1988 ஆம் ஆண்டு நடுவானில் அவரது விமானம் வெடித்து அவர் கொல்லப்படும்வரை அவரது ஆட்சி நீடித்தது.

கடந்த ஒக்ரோபர் 12ஆம் திகதி இடம்பெற்ற இரத்தம் சிந்தாப்புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட நவாஸ் ஷெரீப்மீது கொலை முயற்சி, கிரிமினல் சதி, விமானக் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு நவாஸ்ஷெரீப்புக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது. ஜெனரல் முஷாரப் பயணம் செய்த விமானத்தை தரை இறங்க விடாது தடுத்தது மூலம் முஷாரப்பைக் கொலைசெய்யச் சதி செய்ததாக நவாஸ்ஷெரீப் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமக்கு நம்பிக்கையானவர் என்று கருதியே ஸியா - உல் - ஹக்கை சேவைமூப்பு நடைமுறைகளையும் புறக்கணித்து இராணுவத் தளபதியாக சுல்பிஹார் அலி பூட்டோ நியமித்திருந்தார். ஆனால் புரட்சி மூலம் அகற்றப்பட்ட பூட்டோ நீதிமன்ற விசாரணை என்ற பெயரில் இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் 1979ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்.

தற்பொழுது பாகிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ஜெனரல் முஷாரப் கடந்தஆண்டுதான் நவாஸ் ஷெரீப்பினால் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டவர்.

எவரை தனது நம்பிக்கைக்குரியவர் என்று நவாஸ்ஷெரீப் கருதினாரோ அவராலேயே சிறைப்பிடிக்கப்பட்டு நீதிமன்ற விசாரணையையும் மரணதண்டனையையும் எதிர் நோக்கியுள்ளார்.

### பொதுநலவாய நாடுகள் கவலை

தென்ஆபிரிக்காவின் டேர்பன் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் இம்முறை விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்களில் பாகிஸ்தான் பிரச்சினையும் ஒன்றாகும். பாகிஸ்தானில் ஜனநாயக நடைமுறைகள் ஒழிக்கப்பட்டிருப்பது குறித்து பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கவலை தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் மீண்டும் ஜனநாயக நடைமுறைகளுக்குத் திரும்புவதற்கு இரண்டுவருடகால அவகாசமும் வழங்கப்பட்டது. இவற்றைக் கண்காணிப்பதற்காக 8 நாடுகள் அங்கம் வகிக்கும் குழு ஒன்றும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் அமைக்கப்பட்டது.

இந்தக் குழு, ஜனநாயக நடைமுறைகளை மீண்டும் அமுல்செய்ய பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கிறதா என்பதை அவதானிக்கும். அப்படியான பட்சத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக சில தடைகளைக் கொண்டு

## முஷாரப்பின் பிடி இறுகுகிறது

வருவது குறித்து சிபார்சு செய்யும்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் தீர்மானத்தை பாகிஸ்தானின் புதிய இராணுவ ஆட்சியாளர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

பொதுநலவாயநாடுகள் யதார்த்த நிலையை உணரத் தவறிவிட்டன என்று ஜெனரல் முஷாரப் குற்றஞ்சாட்டி உள்ளார்.

பாகிஸ்தானில் முதல் வேலை





யாக ஊழல்களையும் மோசடிகளையும் ஒழிக்கவேண்டும் என்றும் -

பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் - அதன்பின்பே ஜனநாயக நடைமுறைகளை அமுல்செய்வது குறித்து சிந்திக்கமுடியும் என்றும் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் பிரச்சினையைவிட ஊழலை ஒழிப்பதும் பொருளாதாரத்தை மீளவும் கட்டி எழுப்புவதும் பெரும் சிரமமான பணிகளாக கருதப்படுகின்றன.

### மீளச்செலுத்தப்படாத வங்கிக் கடன்கள்

பெனாஸிர் பூட்டோவின் ஆட்சிக் காலத்திலும் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக் காலத்திலும் இவர்களின் ஆதரவாளர்களுக்கு இவர்களின் வற்புறுத்தல் காரணமாக பாகிஸ்தான் வங்கிகள் பெரும்அளவு பணத்தைக் கடனாக வழங்கி இருந்தன. ஆனால் இந்தப்பணம் மீளச் செலுத்தப்படவில்லை. வங்கிகளில் பணத்தை கடனாகப் பெற்றுவிட்டு மீளச்செலுத்தாதவர்களின் எண்ணிக்கை மட்டும் 4லட்சத்து 83 ஆயிரத்து 94 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அத்துடன் 14 கோடி மக்கள் கொண்ட பாகிஸ்தானில் 16 லட்சம் பேர் மட்டும் வரி செலுத்துகின்றனர். இத்தகைய ஊழல், மோசடிகள் காரணமாக வருடாவருடம் 200 கோடி டொலர்வரை பாகிஸ்தான் இழந்து வருகிறது.

இந்தோனேசியாவில் சுஹார்ட்டோவின் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு குடும்ப ஆதிக்கம் ஓங்கி நின்றதோ அதே நிலைமைதான் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக்காலத்திலும் இருந்தது. நவாஸ் ஷெரீப்பின் உறவினர்களும் நண்பர்களும் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். 1997 தேர்தலில் பெரும் வெற்றி ஈட்டிய நவாஸ்ஷெரீப் சர்வாதிகாரி போன்று செயற்பட்டு வந்தார்.

அரசமைப்பை மாற்றி பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் ஜனாதிபதியின் அதிகாரத்தை ரத்துச் செய்தார். பிரதம நீதியரசரைபதவியில் இருந்து நீக்கினார். பத்திரிகையாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்த நாடுகள் பட்டியலில் பாகிஸ்தானும் இடம்பெற்றுள்ளது. எனினும்ஆப்கானிஸ்தானிலும் சோமாலியாவிலும் இருந்தது போன்று யுத்தப் பிரபுக்கள் ஆட்சி பாகிஸ்தானில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. அணு ஆயுத நாடான பாகிஸ்தான் ஒரு தோல்வி அடைந்தநாடாக மாறுவது உபகண்டத்துக்கு மட்டும் அல்ல உலக சமாதானத்துக்கே பேராபத்து விளைவிக்கும்.

### பின்லேடன் விவகாரம்

வல்லரசுகளுக்கிடையில் பனிப்போர் நிகழ்ந்த காலத்தில், அமெரிக்க மத்திய உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் படைகளுக்கு எதிரான போராட்டத்தில் பாகிஸ்தான் ஊடாகவே ஆயுதங்களை அனுப்பியது.

அமெரிக்காவினால் தேடப்பட்டுவரும் இஸ்லாமிய தீவிரவாதியான ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் தஞ்சம் அடைந்திருப்பது ஆப்கானிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவை மட்டுமல்ல பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள உறவையும் பாதித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கென்யாவிலும் தன்ஸானியாவிலும் அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்படுவதற்கும் 250ற்கு மேற்பட்டோர் உயிர் இழப்பதற்கும் பின்லேடனே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

சவூதி அரேபியரான பின்லேடனை தன்னிடம் ஒப்படைக்கும்படி ஐ.நா. ஒரு மாதகால காலக்கெடு விதித்திருந்தது. அந்தக் காலக்கெடு கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த நிலையில் ஆப்கானிஸ்தான் மீது ஐ.நா. தற்பொழுது தடைகளை அமுல் செய்துள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க மற்றும் ஐ.நா. அலுவலகங்கள் மீது ரொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஐ.நா. தடைக்குப் பழி வாங்கும் முகமாக பின்லேடனே இந்த தாக்குதல்களின் பின்னணியில் செயற்பட்டதாக அமெரிக்கா கருதுகிறது.

உலகில் ஹெரோய்ன் போதைப் பொருள் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் தொடர்ந்து முன்னணியில் இருந்துவருவதும் பாகிஸ்தானில் பெருமளவில் போதைவஸ்து புழக்கத்தில் இருப்பதும் அமெரிக்காவுக்கு புதிதாக நெருக்கடிகளை ஏற்படுத்திவருகிறது. பாகிஸ்தானின் கராச்சி நகரத்திலேயே போதைவஸ்துப் பாவனை அதிகமாக இருந்து வருகிறது.

கராச்சி நகரில் மட்டும் வருடம் 2 ஆயிரம் பேர்வரை கொலை செய்யப்படுகின்றனர். பின்லேடன் பெருமளவு பணம்சம்பாதிப்பதற்கு போதைப் பொருள் கடத்தலும் காரணமாக இருக்கலாம் என்று அமெரிக்கா தெரிவிக்கிறது. சர்வதேச பயங்கரவாதியான பின்லேடனை ஒப்படைக்குமாறு ஐ.நா.வும் அமெரிக்காவும் கோருவதில் எந்தவித அரசியல் பின்னணியோ அல்லது சமயப் பின்னணியோ கிடையாது என்று அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பின்லேடனை ஒப்படைக்க ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் மறுப்பதால் கடந்த ஞாயிறு முதல் அமுலுக்கு வந்துள்ள தடைகளின் கீழ், வெளிநாடுகளில் உள்ள தலிபானின் சொத்துக்களை முடக்கப்போவதாகவும் தலிபான் விமானங்கள் ஐ.நா. உறுப்பு நாடுகளுக்கு மேலாகப் பறப்பதற்குத் தடைவிதிக்கப் போவதாகும் ஐ.நா. அறிவித்துள்ளது.



பதவி நீக்கம் செய்யப்பட்ட நவாஸ் ஷெரீப்

### ஜனநாயக நடைமுறை மீண்டும் ஏற்படுமா?

பாகிஸ்தானின் புதிய இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் முஷாரப் இந்தியாவில் பிறந்தவர். அவரது உறவினர்கள் இன்னும் இந்தியாவில் உள்ளனர். இவர் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இந்தியாவுடன் மோதல் ஏற்படலாம் என்று உலக நாடுகள் எதிர்பார்த்தன. ஏனெனில் கார்கில் ஊடுருவலின் பின்னணியில் செயற்பட்டவர் ஜெனரல் முஷாரப்தான்.

அதுமட்டுமல்ல கடந்த பெப்ருவரி மாதம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் லாகூருக்கு பஸ்பயணம் சென்றபோது அவரை வரவேற்க ஜெனரல் முஷாரப் செல்லவில்லை.

அப்படி இருந்தும் பதவி ஏற்று ஐந்து நாள்களில் காஷ்மீர் எல்லையில் இருந்து படைகளை அவர் வாபஸ் பெற்றார்.

தற்பொழுது பாகிஸ்தானில் அமுலில் இருப்பது இராணுவச்சட்டம் அல்ல. ஜனநாயகத்துக்கான மற்றொரு பாதை என்று தெரிவிக்கிறார் ஜெனரல் முஷாரப்.

50 வருடகால வரலாற்றில் அயூப்கான், யஹ்யாகான், ஸியா-உல்-ஹக் போன்ற இராணுவ ஆட்சியாளர்களைச் சந்தித்த நாடு பாகிஸ்தான். இந்த வரிசையில்தான் தற்பொழுது ஆட்சிக்கு வந்துள்ளார் ஜெனரல் முஷாரப். ஆட்சியில் தனது பிடியை இறுக்கிவரும் அதே சமயம் தனது அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்ட அவர் விளைவது ஜனநாயக நடைமுறைகள் பற்றிய அவரின் வாக்குறுதிகளை அர்த்தமற்றதாக்கிவிடும் என்று கருதப்படுகிறது.

*





நவாஸ் ஷெரீப் பதவி கவிழ்ப்புச் செய்தி வெளியானபோது லாகூரில் பொதுமக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதிய நூற்றாண்டில்

# வங்கி வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புக்கள்

**'புத்தாயிரம் ஆண்டில் வங்கி வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள்' - என்ற தலைப்பில் இலங்கை நிதி நிறுவன ஊழியர்களுக்கிடையே - வங்கியாளர் பட்டய நிறுவனம் நடத்திய கட்டுரைப் போட்டியில் தமிழ்ப்பிரிவில் சிறப்புக் கட்டுரையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இக்கட்டுரையினை - 2000 ஆண்டு பிறக்கவிருக்கும் இத்தருணத்தில் பிரசுரிப்பது பொருத்தமானதே.**

**இப்பரிசைத் தட்டிக்கொண்டவர் மக்கள் வங்கி யாழ். பிராந்திய அலுவலக அதிகாரியும் - சஞ்சீவியில் அடிக்கடி உங்களைச் சந்திக்கும் எழுத்தாளருமாகிய மு.சிவநேசன்.**

தனது தேவைகள் அனைத்தையும் தனது முயற்சியால் மனிதன் நிறைவு செய்து கொண்ட காலத்தில் பணப் புழக்கம் ஏதும் நடைமுறையில் இருக்கவில்லை. அப்படி ஒரு தேவை எழவும் இல்லை.

காலப்போக்கில் அவனது தேவைகள் விரிவுபட்டபோதுதனக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இதர தேவைகள் அனைத்தையும் அவனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள இயலவில்லை.

சமூதாய அமைப்பில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட துறையில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொண்டனர். தமது தேவைகளை அடுத்தவருடன் பண்டமாற்றுமுறையில் அல்லது சேவைகள் மூலம் பரிமாறிக்கொண்டனர். இந்தமுறையில் பரிமாறப் பயன்படுத்தப்பட்ட பண்டமோ அனைவராலும் பொதுவாக ஏற்கப்படத்தக்கதாக அமையவில்லை.

இக்காலப்பகுதியில் தானியப் பொதிகளே முதலில் ஒரு பொதுவான பெறுமதிப் பொருளாக பரிமாறப்பட்டு வந்தது. இவ்வேளையில் முதலில் தங்கமும் பின்னர் வெள்ளியும் அளவில் சிறியதான - அதேவேளை பெறுமதியில் உயர்ந்த - இலகுவில் பரிமாறத்தக்க ஊடகமாக பயன்பாட்டுக்கு வந்தன. எல்லோராலும் விரும்பி இவை ஏற்கப்பட்டமையால் இவ்வுலோகங்கள் நாணயப் புழக்கத்துக்கு வழிகோலின.

அளவாக வெட்டப்பட்டுச் செப்பனிடப்பட்டு அழகுற அவை நாணயங்களாகப் பவனி வரத்தொடங்கின.

அரசுகள் நாணயங்களைப் புழக்கத்துக்கு விடத்தொடங்கும் போதே மக்களின் எதிர்பார்ப்புக்களை அவை நிறைவு செய்யவேண்டி இருந்தது. பணம் பெறுமதிமிக்கதாய், பயனுள்ளதாய், இலகுவில் எடுத்துச்செல்லத்தக்கதாய், பாவனைக்குத் தாக்குப்பிடிக்கத்தக்கதாய், ஒரே பெறுமதியுடையதாய், பிரித்துப்பகிர வசதியாய், இதர பாவனைப் பொருள்களின்றும் வேறுபட்டதாய், மாறாத பெறுமானம் உடையதாய் நிலைக்க வேண்டும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு ஆகும். இக்காலப்பகுதி கி.பி. 1500ஐ அண்மித்தது எனலாம்.

தங்கம், வெள்ளி என்பவற்றின் உலோகப் பெறுமதி அவற்றின் நாணயப் பெறுமதியைவிட அதிகமாகவே இருந்து வந்துள்ளது. எனவே நிறையில் குறைந்த பெறுமதி முத்திரையிடப்பட்ட நாணயங்கள் புழக்கத்துக்கு வந்தன.

பெறுமதியான உலோகங்களை வீட்டில் வைத்துவிட்டுத் தமது அலுவல்களுக்குச் செல்ல அஞ்சிய மக்கள் இரும்புக் காப்பறைகளை வைத்திருக்கும் பொற்கொல்லர்களிடம் பாதுகாப்புக் கருதி அவற்றை ஒப்படைத்தனர். இதற்கென பொற்கொல்லர்களினால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கள் ஒப்படைக்கப்பட்ட உலோகப் பெறுமதியைத் தாங்கி மக்களிடையே பரிமாறப்படவும் தொடங்கிவிட்டன.

தமது பற்றுச்சீட்டுக்களுக்குப் பெறுமதி இருப்பதை உணர்ந்த பொற்கொல்லர்கள் பணப்பெறுமதிக்காக அவற்றைக் கடனுக்கு எழுதிக் கொடுத்து வட்டியும் வாங்கத்தொடங்கினார்கள். இவ்வாறாக ஆரம்பமான பொற்கொல்லர் வங்கிகளின் நம்பிக்கையினைப் பெற்றிருந்தன.

17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாறான பணப்புழக்கம் பிரபல்யமடைந்தது எனலாம். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனில் சுமார் 400 வங்கிகள் தமது சொந்தப் பணத்தாள்களைப் புழக்கத்திற்கு விட்டிருந்தன.

1844ஆம் ஆண்டின் வங்கிச் சட்டம் இந்த வெவ்வேறு பணத்தாள் விநியோகத்தை இங்கிலாந்து வங்கியை நோக்கி ஒருமுகப்படுத்தியது எனலாம். அடுத்து வங்கித்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றம் காசோலைப் புழக்கத்திற்கு வழிகோலியது எனலாம். பல சந்தர்ப்பங்களில் பணத்தைவிடக் காசோலைகள் சௌகரியமாக இருந்தமையால் அவை பிரபல்யமடைந்தன. பல்வேறு வங்கிகள் காசோலைகளை வழங்கிவந்ததால் அவற்றைத் தீர்வையாக்கும் நடைமுறைகளும் வகுக்கப்பட்டன. வங்கிகள் விரைவாகத் தமது காசோலை வைப்புக்களைத் தீர்வையாக்கித் தரவேண்டும் என்றே அப்போதும் வாடிக்கையாளர்கள் எதிர்பார்த்தார்கள்.

சிறிய சிறிய வங்கிகள் இணைந்து பெரிய வங்கிகளை உருவாக்கின. இதனால் கிளைகளையுடைய வங்கித் தொழில் பிரிட்டனில் பிரபல்யமடைந்தது. வங்கிகள் தங்கத்தையும் வெள்ளியையும் பெறுமதிக்காக வைத்துக் கொண்டு தாள்களைப் புழக்கத்துக்கு விடும் நடைமுறை சாத்தியப்படாமல் போய்விட்டது.

ஆரம்பத்தில் வசதியானவர்களே வங்கிகளை நாடிவந்தாலும், பணத்தாள்களினதும் காசோலைகளினதும் புழக்கம் அனைவரையும் வங்கிகளின் அவசியம் பற்றி விழிப்படையச் செய்தது எனலாம். இதனால் பிரிட்டிஷ், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மக்கள் பெருமளவில் வங்கித் தொடர்புகளைக் கொண்டிருக்கப் பழகிவிட்டனர்.

நாளடைவில் வாடிக்கையாளர்களின் தொகையும் தேவைகளும் விரிவடைய விரிவடைய வங்கிகளும் தமது வளங்களையும் வசதிகளையும் பெருக்கிக்கொண்டே வந்தன எனலாம்.

மோசடிகள், நிர்வாகத்திறமையின்மை, முதலீட்டு இழப்புக்கள் போன்றவற்றால் பல வங்கிகள் முறிந்தும், மக்களின் நம்பிக்கையை இழந்தும் விட்டன. இதனால் வாடிக்கையாளர்கள் நட்டமடைந்து போயினர். தமது நடவடிக்கைகளுக்காகத் தரமான வங்கிகளை அவர்கள் நம்பிக்கையுடன் நாடிவரவேண்டிய நிலைமை எழுந்தது.

வங்கிகளின்ஸ்திரத்தன்மை, அவை வழங்கும் சேவைகளின் தரம் [illegible] பற்றி வாடிக்கையாளர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் தேவைகளுக்கேற்ப வங்கிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் சேவைகளும் விரிவடையலாயின.

பல வங்கிகளும், அவை பல கிளைகளைக்கொண்டு செயற்படுதலும் மக்களுக்கு வாய்ப்பாகவே அமைந்தன. ஆனால் பெருமளவில் காசோலைகள் புழக்கத்துக்கு வந்தபோது அவற்றைத் தீர்வையாக்குவதில் வங்கிகள் திணறித்தான் செய்தன. வங்கி நடவடிக்கைகள் விரிவுபட்டுச் செல்லும்போது நிர்வாக மற்றும் நடைமுறைச் சிக்கல்களும் விரிவடையவே செய்தன எனலாம். பெரிய வங்கிகள், பெரிய ஏடுகளுடனும் பெருமளவு பணியாளர்களின் துணையுடனும் ஏராளமான வாடிக்கையாளர்களின் தேவைகள் பலவற்றையும் செவ்வனே சமாளிப்பதென்பது மிகவும் சிரமமான காரியமே. வங்கிப்பணியாளர்கள் முதுகுமுறிய வேலைசெய்யவேண்டிய கட்டம் எழுந்தது. குவிந்துவரும் அலுவல்களை நாள் முழுவதும் பம்பரமாய்ச் சுழன்று செய்துமுடிக்கவேண்டிய அவசியம் எழுந்தது. இதே நிலைமைகள் இன்னும் சிலகாலம் தொடர்ந்திருந்தால் வங்கிகள் வாடிக்கையாளர்களை சமாளிக்கமாட்டாமல் திணறியிருக்கும்.

விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் வங்கிகளின் வேலைப் பழுவை இயந்திர சாதனங்களிடம் கையளிக்க வாய்ப்பளித்தது. கூட்டல் இயந்திரங்களைப் பாவித்த வங்கிகள் பின்பு கணக்குவைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கின. வெவ்வேறு கணக்குகளைச் செவ்வனே பதியவென வகைப்படுத்தப்பட்ட வசதியான இயந்திரங்கள் பாவனைக்கு வந்தன.

பணியாளர்களின் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளுக்குப் பதிலாக இயந்திரப் பதிவுடனான தெளிவான அறிக்கைகள் வாடிக்கையாளர்களைத் திருப்திசெய்யும் வகையில் அமையத் தொடங்கின.

கடந்த சில சகாப்தங்களில் இத்தகைய இயந்திர சாதனங்களில் முன்னேற்றம் காணப்பட்டாலும் அவற்றால் வளர்ந்து வரும் வங்கித்தேவைகளைச் சமாளிப்பது கடினமாகவே இருந்தது. வாடிக்கையாளர்களின்வைப்புக்களைச் சரிவரக் கணக்குவைக்கும் சிக்கலான வங்கியின் கணக்கு முறைகளைத் தினமும் சீர்செய்தே ஆகவேண்டியது அவசியமல்லவா?

பெருமளவு தகவல்களைப் பேணி வைத்திருக்கும் வசதிளைக் கொண்ட நவீன கணனிகள் வங்கியின் நாளாந்தத் தொழில்பாட்டில் பெரும் ஆறுதலைத் தரத்தொடங்கின. பல்வேறு வகையான புத்தகங்களைப் பதியவும், பேணவும், தேவைக்குத் தேடிப்பெறவும், வாடிக்கையாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் வேண்டிய தகவல்களைச் சமர்பிக்கவும் வங்கிகள் சிரமப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் கணனிப்பொறிமுறை வங்கிக்குள் புகுந்து கொண்டது. இதனால் இடப்பற்றாக் குறை, பணியாளர்களின்எண்ணிக்கைப் பெருக்கம், கணக்குகளில் ஏற்படும் தவறுகள், வாடிக்கையாளர் தமது கணக்குகளை அணுகுவதில் உள்ள தாமதம் போன்ற பல பிரச்சினைகள் சுமுகமாகத் தீரத்தொடங்கின.

நாளுக்குநாள் அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் விரிவடைந்துவரும் பல்வேறுபட்ட வங்கித் தேவைகள், கூட்டுறவு மற்றும் கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள் போன்ற பெறுமதியான பெரிய வாடிக்கையாளர்களின் கணக்குகளைச் செவ்வனே பேணுதல் போன்ற கருமங்களை ஓரளவுக்கேனும் இலகுபடுத்த இக் கணனிகள் பெருமளவில் கைகொடுக்கின்றன எனலாம்.

முன்னேறிவிட்ட நாடுகளில் வங்கிக் கணக்குகளை வைத்திராத தனி[illegible] தவர்கள் மிகமிக [illegible] நகரங்களில் செறிந்துவாழும் மில்லியன் கணக்கான மக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கணக்குகளை வங்கிகள் வைத்திருக்கவேண்டிய தேவை எழுகிறது என்றால் அந்தச் சிக்கலை எப்படிச் சமாளிக்கலாம்?

தவிர பெரிய கணக்குகளை வங்கிகளில் வைத்திருக்கும் கூட்டுத்தாபனங்கள், அரசதிணைக்களங்கள் போன்றவை தம்மகத்தே ஒரு பெரிய நிதிப் பிரிவையே கொண்டிருக்கும். அவை பெருமெண்ணிக்கையிலான காசோலைகளை வழங்கிக்கொண்டும் இருக்கும். தவிர வங்கிக் கணக்கின் மூலமே தமது பல்வேறுபட்ட நடவடிக்கைகளையும் செயற்படுத்த முனையும். இவ்வேளையில் அவர்களின் அத்தனை தேவைகளையும் வங்கி சமாளித்தாக வேண்டும்.

வங்கிகள் தமது நாளாந்த அலுவல்களோடு போராடிக்கொண்டிருக்கையில் அதன் சுற்றாடல் மிக வேகமாக முன்னேறி வருகிறது. வாடிக்கையாளர்களின் தேவைகள் விரிவுபட்டுச் செல்கின்றன. தொழில்நுட்பம் முன்னேறி வருதலால் புதிய புதிய சாதனங்களையும் நடைமுறைகளையும்புகுத்திக் காலத்துக்குக்காலம் மாற்றங்களை ஏற்றுச் செயற்படுத்தவேண்டிய அவசியம் எழுகிறது. புதிய போக்குகளுக்கு ஏற்ப தமது பணியாளர்களை பயிற்றுவிக்கவும் இசைவாக்கவும் வேண்டிய கட்டாயம் எழுகிறது.

வங்கி நடைமுறைகள், வங்கிச் சட்டங்கள், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஆழமான அறிவுடைய தேர்ச்சி பெற்ற வாடிக்கையாளர்களுக்குத் தரமான சேவைகளை வழங்குவதற்கு வங்கிகள் தம்மை எப்போதும் தயாராக வைத்திருக்கவேண்டும். உலகில்

## எவ்வாறு மாற்றமடையும்?

வேகமாக ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பத் தம்மையும் நடைமுறைகளையும் பணியாட்களையும் துரிதமாகத் தாயார் செய்துவிடல்வேண்டும். பல்வேறுபட்டதுறைகளில் இருந்தும் மேலதிகப்பற்றையோ கடனையோ கோரி வரும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பரிசீலிப்பதிலும் வங்கியின் மதிநுட்பம் மேலாண்மை வகிக்க வேண்டும். தனக்குத்தெரியாத அல்லது பரிச்சயமில்லாத ஒருதுறைக்குக் கடன் வழங்க வங்கிமுடிவெடுக்க இயலாதே.

முன்னேறிவிட்ட நகரமொன்றில் பழைய நடைமுறைகளை வைத்துக் கொண்டு ஒரு வங்கி எவ்வளவுகாலம் தாக்குப்பிடிக்க முடியும்? வாடிக்கையாளர்களின் தேவைகளை எப்படி ஈடு செய்யமுடியும்? கையால் எழுதப்படும் புத்தகங்களும் அறிக்கைகளும், கல்குலேட்டரையோ, இயந்திரங்களையோ, கணனிகளையோ பற்றி அதிகம் அறிவு இல்லாத பணியாளர்கள், சேகரிக்கப்பட்டுக் கையால் தரம்பிரக்கப்பட்டும். தபாலில் அனுப்பப்பட்டும் தீர்வையாக்கப்படும் காசோலைகள், அவை கொடுப்பனவு செய்யப்பட்டமைக்கான அறிவித்தல்கள்கிடைக்கும்வரை பணம் வரவு வைக்கப்படாத வாடிக்கையாளர்களின் கணக்குகள், பணியாளர்கள் விடுமுறையில் செல்லும்போது கவனிக்க ஆளின்றித் தேங்கிக்கிடக்கும் பணிகள், கடனையோ மேலதிகப் பற்றுக்களையோ வழங்கத் தயங்கும் நிர்வாகம் போன்ற பல குறைபாடுகளை இன்றும் கொண்டு பல வங்கிகள் முன்னேற்றமடையாத நாடுகளிலும் கிராமப் புறங்களிலும் இயங்கத்தான் செய்கின்றன.

அதேவங்கியின் பிறிதொரு கிளையினால் வழங்கப்பட்ட உண்டியலைப் பணமாக்கிக் கொடுக்கவே தாமதப்படுத்தும் நடைமுறைகள் வங்கி வாடிக்கையாளர்களை அதிருப்திக்கு ஆளாக்கும் நிலையில் பிறிதோர் வங்கிக் கிளையினது அல்லது பிறிதோர் நாட்டிலுள்ள வங்கியினது காசோலை ஒன்றை வாடிக்கையாளருக்குப் பணமாக்கித்தர அந்த வங்கி எவ்வளவு சிரமப்படும் அல்லது காலம் எடுக்கும் எனக் கற்பனை செய்யமுடியும். இப்படியாக வங்கியில் தேங்கும் பல மில்லியன் பணம் வாடிக்கையாளர்களின் வியாபார முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

வங்கிகள் பெரும் எண்ணிக்கையிலான காசோலைகளைத் தீர்வைக்குச் சமர்ப்பிக்கும் வேளையில் இயந்திரங்கள் மூலம் அவற்றை இனங்கண்டு கணக்குவைக்கும் தன்னியக்கத் தீர்வைமுறை நடைமுறைப்படுத்தப் பட்டது பெரும் வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது, இதனால் காசோலைகள் தீர்வையாகிப்பணம் கிடைக்க எடுக்கும் காலம் குறுகிவிட்டது.

ஒரு வங்கியின் காசோலையொன்றைப் பிறிதோர் வங்கிக்கிளையில் வைப்பில் இட்டால் பணம் கைக்கு வருவதை விரைவாக வங்கி செய்து தரும் என்றே எந்தவொரு வாடிக்கையாளரும் விரும்புவார். ஆரம்பகாலங்களில் இதற்கு மாதங்களோ வாரங்களோ கூடப் பிடித்திருக்கும். இன்று அவ்வாறு காத்திருக்க வாடிக்கையாளர்கள் தயாரில்லை.

வங்கிகள் தமது பிரதேசத்தில் வாடிக்கையாளரின் வாழ்க்கைமுறை, வசதிகள், தேவைகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டே அவர்களுக்கான சேவைகளை வழங்க முடியும். பின்தங்கிய நாடுகளில் அதுவும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் முற்றிலும் கணனிமயப்படுத்தப்பட்ட வங்கியொன்றில் சேவையை வாடிக்கையாளர்களால் பயன்படுத்தமுடியுமா என்ற கேள்வி எழத்தான் செய்யும். அங்கே பழைய வங்கிமுறைகளில் தேவைக்கு அளவான மாற்றங்களுடன் செயற்பாடுகள் இருந்தால் போதுமானது எனலாம்.

அப்பிரதேசங்களில் வாடிக்கையாளர்களிடம் தொலைபேசிகள், கணனிகள், மின்சாரம் போன்ற வசதிகள் இருக்கும் என எதிர்பார்த்து வங்கியின் செயற்பாடுகளை விஸ்தரிக்க இயலாது. அவர்களுக்கு உதவக்கூடிய கடன்கொள்கைகள் கூட நகரப்புறங்களை விட முற்றிலும் வேறுபட்டதாக - பாரம்பரியம் கலாசாரம் என்பவற்றின் அடிப்படையிலே - நிர்ணயிக்கப்படுவதாக அமைதல் வேண்டும்.

ஆனால் நகரங்களிலும் முன்னேறிவிட்ட நாடுகளிலும் நிலைமைகள் இதற்கு முரணானவை. வங்கியிடம் வேகத்தையே வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். வங்கியில் சென்று காசோலை ஒன்றைப் பணமாக்க முன்பெல்லாம் மணித்தியாலங்கள் பிடித்திருக்கும். இன்றோ நிலமை மாறிவிட்டது. தொழில்நுட்ப வளர்ச்சி இதற்கெல்லாம் கைகொடுத்து வருகிறது.

வங்கிகள் தமது கணக்குகளைக் கணனிகளுக்குள் புகுத்தத் தொடங்கின. இன்ரநெற் (சர்வதேச வலைப் பின்னல்), ஈமெயில் (இலத்திரனியல் தபால்) போன்ற கண்டுபிடிப்புக்கள் அறிமுகமானதுதான் தாமதம், உடனே வங்கிக் கிளையொன்றில் கணனிகள், ஏனைய கிளைகளுடனும் தலைமையகத்துடனும் இணைப்பைப் பெற்றுக் கொண்டன. இவ்வாறு கணனிகள் தமக்குள் இணைப்பைப் பெற்றுக்கொண்டதும் வங்கியொன்றின் நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களுக்குப் பெருவாய்ப்பாக அமைந்துவிட்டன.

எனினும் உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரந்துவாழும் அத்தனை வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் செல்லுமிடமெல்லாம் இத்தகைய துரித வங்கிச் சேவைகளும் வாய்ப்புக்களும் கிடைக்கின்றன என்று சொல்வதற்கில்லை. இச்சேவைகள் இன்னும் பல நாடுகளில் அதுவும் நாட்டுப்புறங்களில்

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தலையும் மதுவையும் விலக்கி எதிர்காலத்தை ஒளிமயமாக்குங்கள்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கருத்துப்படி உலகில் புகைப்பவர்களினதும், குடிப்பவர்களினதும் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரிக்கின்ற அதேவேளை, இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. மேலும் இலங்கை போன்ற வளர்முகநாடுகளிலேயேதான் இவற்றின் பாவனை மிக விரைவாக அதிகரிப்பதாகவும், அபிவிருத்தியடைந்த மேற்குலகநாடுகளில் இவற்றைப் பாவிப்போர் குறைவடைவதாகவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதற்கு ஒரு காரணம் சிகரெட், மதுபான உற்பத்தி நிறுவனங்களின் கவர்ச்சியான விளம்பரங்கள் எம் மக்களை சென்றடையும் அளவிற்கு இவற்றின் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள்பற்றிய மருத்துவ எச்சரிக்கைகள் அவர்களை சென்றடைவதில்லை. இதனால்தான் கல்வியறிவு குறைந்த குடும்பங்களில் தந்தை, மகன், மாமன், மச்சான் என ஒவ்வொருவரும் குடிக்கும், புகைக்கும் அடிமையாகி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே மாணவர்களாகிய நீங்கள் இவற்றின் தீய விளைவுகள் பற்றி அறிந்திருப்பதுடன் மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறவேண்டியது உங்கள் கடமையாகும்.

முதலில் புகைத்தல் பற்றிப் பார்ப்போமாயின், சிகரெட் (பீடி, சுருட்டு) இலையாவும் புகையிலையில் இருந்தே தயாரிக்கப்படுகின்றன. புகையிலையில் காணப்படும் நிகொட்டின் (Nicotine), தார் (Tar, (Nitroso Compound) எனப்படும் நச்சுப்பொருள்களும், அது எரியும்போது வெளிவரும் காபன்மொனொஒக்சைட்டும் எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கின்றன.

நிகொட்டின்:- இது மிக நச்சுத் தன்மையான பதார்த்தமாகும். ஒரு துளி தூய நிகொட்டின் அல்லது 40 மில்லிகிராம் நிகொட்டின் ஆனது இரண்டு சிகரெட்டில் உள்ள புகையிலையில் காணப்படுகின்றது. இந்த மிகச்சிறிதளவான நிகொட்டின் எமது இரத்தத்தில்நேரடியாகக் கலக்குமாயின் அது மிக அபாயமான விளைவை ஏற்படுத்தும். ஆனால் அதிஸ்டவசமாக புகையிலை எரியும்போது அதிலுள்ள நிகொட்டின் அழிக்கப்படுவதுடன் வெளிவிடும் புகையுடனும் பெரும்பகுதி வெளியேறிவிடுகின்றது.

உள்ளெடுக்கப்படும் புகையில் அடங்கியுள்ள நிகொட்டின் இரத்தத்தை அடைந்து இதயத்துடிப்பை தேவையின்றி அதிகரிப்பதுடன் மீண்டும் புகைக்க வேண்டும் என்ற ஆசையையும் தூண்டுகின்றது. புதிதாக புகைத்தலை ஆரம்பிப்பவர்களுக்கு இது தலைச்சுற்றையும், வயிற்றுக்கோளாற்றையும் ஏற்படுத்தக்கூடியது.

புகையிலையில் காணப்படும் தாரானது சுவாசபாதையிலும், சுவாசப்பை சிற்றறைகளிலும் சென்று படிவடைவதனால் நோய்களை ஏற்படுத்துகின்றது.

புகைத்தலின்போது வெளிவரும் காபன்மொனொக்சைட்டானது குருதி நிறப்பொருளான கீமோகுளோபினுடன் ஒட்சிசனைவிட விரைவாக இணைந்து கொள்வதனால் குருதியில் ஒட்சிசனின் செறிவு குறைவடைகிறது. இதனால் கலச்சுவாசம் பாதிப்படைந்து சக்தி (ATP) தொகுக்கப்படுதல் குறைவடைகின்றது. இதனால் உடல் இலகுவில் களைப்படைகின்றது.

மேலும் நீண்டகாலம் புகைப்பவர்கள் சுவாசபாதையில் கிருமிகளின் தாக்கத்திற்கும், தடிமன், இருமல், மூச்சிழுத்தல் போன்ற நோய்களால் அடிக்கடி பாதிக்கப்படுவார்கள்.

அத்துடன் இவர்களுக்கு இரைப்பைப் புண் (Peptic Ulcer), மற்றும் குணப்படுத்த முடியாத புண்கள் ஏற்படுவதுடன் சகிச்சையால் பலன் கிடைக்காது, உடல் உறுப்புகளை இழக்கவும் நேரிடலாம்.

மேலும் நுரையீரல் புற்றுநோயினால் இறப்பவர்களில் பெரும்பாலானோர் புகைப்பவர்களே, புகையிலையில் உள்ள வேறு பல இரசாயன பதார்த்தங்கள் நுரையீரல் கலங்களில் உள்ள நிறமூர்த்தங்களின் பரம்பரை அலகுகளில் (DNA) மாற்றத்தை ஏற்படுத்துவதனால் அவற்றுள் சில கலங்கள் கட்டுப்படுத்தமுடியாதவாறு பல்கிப் பெருகுவதாலேயே நுரையீரலில் புற்றுநோய் ஏற்படுகின்றது.

மற்றும் நுரையீரல் அழற்சி (Pneumonia) நுரையீரல் சிற்றறைகள் அழிவடைதல் (Emphysema) போன்ற நோய்களாலும், மாரடைப்பு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்பட்டும் புகைபிடிப்பவர்கள் இறப்புக்குள்ளாகின்றார்கள்.

இவ்வாறு இறப்பவர்களில் அதிகமானோர் - இளவயதினர்; அதாவது 40 தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவர்களே ஆவர்.

மேலும் புகைப்பிடிப்பவர்கள் தாங்கள் பாதிக்கப்படுவதுடன் மட்டுமல்லாது அருகில் இருப்பவர்களுக்கும் (Passive Smokers) மேற்குறிப்பிட்ட அபாயமான நோய்கள் உண்டாவதற்குக் காரணமாகின்றார்கள்.

இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் சிறுவர்களே. அதிலும் குறிப்பாக புகைபிடிக்கும் பழக்கமுள்ள பெற்றோரின் பிள்ளைகளே ஆவர்.

மேலும் புகைக்கும் பழக்கமுள்ள பெண்கள் கருவுற்றிருக்கும்போது கருச்சிதைவும், இரத்தப்போக்கு ஏற்படவும், நிறைகுறைந்த, பூரண முதிர்ச்சியடையாத, மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பதற்குக் காரணமாகின்றது.

(புகைப்பவர்கள் - தங்கள் சுவாசபைகளை தாங்களே சுட்டுக் கொள்பவர்கள்)

## மது அரக்கன்

அடுத்ததாக மதுவின் பாதிப்புகள் பற்றி பார்ப்போம். மதுவானது பல பெயர்களில் விற்பனை செய்யப்பட்டாலும் அவை எல்லாம் 'எதைல் அற்ககோல்' (எதனோல், Ethanol) எனப்படும் செயற்படும் திறன்மிக்க இரசாயன பதார்த்தத்தையே கொண்டுள்ளன.

இந்த எதனோல் (Ethanol) தான் வைத்தியசாலைகளில் புண்கள்சுத்தம் செய்யும் நுண்ணுயிர் கொல்லியாகவும், ஆய்வு கூடங்களில் விளக்குகள் எரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இப்படிப்பட்ட உயர்சக்தி கொண்ட தீங்கிளைக்கும் பதார்த்தத்தைக் கொண்ட மதுவைத்தான் எல்லோரும் குடிக்கின்றார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

ஒருவர் அருந்தும் மதுவானது இரைப்பையில் முழுமையாக அகத்துறிஞ்சப்பட்டு குருதியை அடைந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கும் எடுத்துச்செல்லப்படுகின்றது. இவ்வாறு குருதியில்எடுத்துச்செல்லப்படும் அற்ககோலானது உடனடியாக மூளையின் செயற்பாட்டையே பாதிக்கின்றது. இதனால் கண்பார்வை தெளிவில்லாமை, பேச்சில் தடுமாற்றம், நடையில் தடுமாற்றம், நடத்தையில் மாற்றம், தலையிடி, வாந்தி என்பன ஏற்படும். அதிகமாக குடிக்கும்போது இரத்தத்தில் அற்ககோலின் செறிவு மேலும் அதிகரித்து மயக்கமும் (Coma), மூளையின் சுவாச மையத்தின் செயற்பாடு தடைப்படுவதனால் சுவாசம் நின்றுபோய் இறப்பும் ஏற்படலாம்.

மிகப் பெரும்பாலான குடிப்பழக்கமுள்ளவர்கள் புகைத்தலுக்கும் அடிமையானவர்களே. இவர்கள் தங்களுக்கு தாங்களே மரணதண்டனை விதிப்பதோடு அது நிறைவேற்றப்படும் திகதியையும் தாங்களே தீர்மானிக்கின்றார்கள்.

நீண்ட காலம் மதுபானம் பாவிப்பவர்கள் அதாவது மதுவுக்கு அடிமையானவர்கள் பல்வேறு உடல், உள நோய்களுக்கும், குடும்ப, சமூகப் பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றார்கள்.

முதலில் உடல் ரீதியான பாதிப்புகளை எடுத்துக் கொண்டால், அற்ககோலானது ஈரலில் நடைபெறும் அனுசேப தொழிற்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதனால் ஈரலில் கொழுப்பு தேக்கமடைகின்றது. இதனால் ஈரல் கலன்கள் இறக்கின்றன. இறுதியில், இவை நார்த்தன்மையடைகின்றது. (Liver cirrosis) இவ்வாறு ஈரலின் தொழிற்பாடு குறைவடைவதால் மனிதன் இறக்க நேரிடுகின்றது.

ஈரல் பழுதடைவதாலும் குருதியில் கொலஸ்ரோலின் அளவு கூடுவதாலும் லிப்போ புரோட்டின் (Lipo Protein) சமநிலையில் மாற்றமேற்படுவதாலும் உயர்குருதி அமுக்கம், மாரடைப்பு போன்ற இருதய நோய்கள் ஏற்பட்டு இறப்பும் ஏற்படுகின்றது.

மேலும் இக்குடிப்பழக்கத்தால் வாய், உணவுக்குழாய், இரைப்பை, ஈரல் போன்ற பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுகின்றது. அத்துடன் இரைப்பை அழற்சி (gastritis), சதையி அழற்சி (pancreatitis) போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

**சீ.குணதாசன்**
**(மூன்றாம் வருடம் மருத்துவபீடம்)**

மேலும் அற்ககோலின் பல்வேறு தொழிற்பாட்டினால் அகச்சுரக்கும் தொகுதி பாதிப்படைந்து சில ஓமோன்களின் சமநிலை மாற்றமடைந்து விதைகளின் தொழிற்பாடு குறைவடையவும் ஆண்களின் மார்பு பருமனில் பெரிதாகவும் மாறுகின்றது.

மேலும் குடிப்பழக்கமுள்ள பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் முகத்தில், இதயத்தில் குறைபாட்டுடனும், மூளை வளர்ச்சிகுன்றியும் பிறக்க வாய்ப்புகள் உள்ளன.

இனி குடிப்பழக்கமுள்ளவர்களுக்கு ஏற்படும் உளப்பாதிப்புகள் பற்றி கருதுவோமாயின், அவர்களுக்கு மனத் தெளிவின்மை, மனப்பரபரப்பு, ஞாபக மறதிகள், ஆளுமை குறைதல், வெறியில் புலம்புதல், தற்கொலைக்கு முயற்சிசெய்தல் போன்ற உணர்வுகள் அடிக்கடி ஏற்படுவதுடன், இவர்களில் பெரும்பாலானோர் நிரந்தர மன நோயாளிகளாகவும் மாறுகின்றார்கள்.

மேலும் குடிப்பவர்களின் குடும்ப வாழ்க்கை, கணவன் -மனைவி உறவு பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படல், தொழில், வருமானம் இழத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு உள்ளாவதுடன் விபத்துக்கள், மற்றவர்களுடன் சண்டை பிடித்தல், குற்றசெயல்கள் புரிதல் போன்றவற்றால் சமூகத்திற்கு எந்நேரமும் ஒரு பிரச்சினையாக இருக்கின்றார்கள்.



குடிக்கு அடிமையானவர்கள் திடீரென குடியை நிறுத்தும்போது அவர்களுக்கு ஏற்படும் உணர்வுகள் விற்றோவல் சிம்ரம் (Withdrawal symptoms) என அழைக்கப்படும். அப்படிப்பட்டவர்களுக்கு இலேசான உடல் நடுக்கம், தலையிடி, தலைசுற்று, உடம்பு முழுக்க சோர்வடைந்தது போன்ற உணர்வுகள் ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் மீண்டும் குடிக்கவில்லையெனின் அவர்களுக்கு பெரியளவிலான கை, கால் நடுக்கம், நித்திரையின்மை, ஓய்வாக ஓர் இடத்தில் இருக்க முடியாத பரபரப்பானநிலை, கண்டபடி அலட்டுதல், பார்வையில் ஒரு மாயை நிலை அதாவது இல்லாத பொருள்கள் தன் கண்முன் நிற்பது போன்ற நிலை என்பன ஏற்படும்.

பெரும்பாலான குடிகாரர்கள் மேற்குறிப்பிட்டதாக நிலை ஏற்படும் போதே மீண்டும் குடித்துவிடுவார்கள். இதற்காக அவர்கள் தங்களிடம் உள்ள பொருள்களை விற்றோ, கடன் வாங்கியோ, அல்லது களவு எடுத்துக் கூட குடிக்க முனைவார்கள்.

இவர்களில் பலர் இனி குடியை விட நினைத்தாலும் அவர்களுக்கு மேற்படி withdrawal symptoms தோன்றுவதால் அவர்களால் குடியை விடமுடியாது. அதாவது 'கடவுள் விட்டாலும் பூசாரி விடமாட்டார்' போன்ற நிலையில் தொடர்ந்து குடிக்கின்றார்கள்.

இப்படி குடியை விட நினைப்பவர்களுக்கு நவீன மருத்துவ உலகில் பல மருந்துகள் உள்ளன. அவர்கள் தகுந்த வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றால் இக்குடிப்பழக்கத்தில்இருந்து விடுபடலாம் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அன்பான மாணவர்களே: நீங்கள் குடியால் பாதிக்கப்பட்ட பலரை கண்டிருப்பீர்கள். மேற்கூறிய கருத்துக்கள் அவர்களுக்கு மிகப் பொருத்தமானவையாக இருப்பதை அனுபவரீதியில் உணர்ந்திருப்பீர்கள்.

எனவே உங்களுக்கும் அப்படி ஒரு நிலை வரவேண்டுமா? அப்படி வராமலிருக்க என்ன செய்ய வேண்டும். சற்று சிந்தியுங்கள்?

மாணவர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாவதற்கான காரணங்கள்

* [illegible] பரங்களை பார்த்தும், மற்றவர்கள் (படித்தவர்கள் கூட) குடிக்கின்றார்கள் தானே நானும் அது என்னதான் என்று பார்ப்போம் என்ற மனத்தூண்டுதல்.

*நண்பர்கள், அல்லது வேறு ஒருவரின் தூண்டுதல்.

*பெற்றோரும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருத்தல்.

* தாழ்வுமனப்பான்மை, மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டு தான் தனிமைப்படுத்தப்பட்ட மன உணர்வு உடையவர்கள்.

*எதிர்பாராது நிகழ்ந்த துன்பத்தில் இருந்து விடுபடலாம் என்ற மூட நம்பிக்கை.

*சிறிது காலம் பாவித்தவர்கள், பின்னர் விட நினைத்தாலும் விட முடியாதிருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே மாணவர்களே முதலில் நீங்கள் நல்ல நண்பர்களை தேர்ந்தெடுங்கள். பொதுவாக மாணவர்கள் நண்பர்களுடன் ஒத்துப்போகவே விரும்புகின்றார்கள். அத்தருணத்தில் உங்கள் நண்பர்களின் செல்வாக்கு உங்களிடத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தலாம். உதாரணமாக உங்கள் எண்ணங்கள், செயல்கள்,நடத்தை, உடைகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இத்தாக்கமானது உங்களுக்கு நன்மையாகவோ சிலவேளை தீமையாகவோ இருக்கலாம்.

நன்மையாயின் நீங்கள் கல்வி, விளையாட்டு, தொழில் என்பவற்றில் முன்னேற்றமடைய வழிவகுக்கலாம்.

தீமையாயின் நீங்களும் புகை, குடிக்கு அடிமையாகி உங்கள் ஒளிமயமான எதிர்காலம் பாழடைய நேரிடலாம்.

மேலும் உங்கள் நண்பர்களோ, அல்லது பகிடிவதையின்போது உங்கள் சிரேஷ்ட மாணவர்களோ, உனக்கு இத்தனை வயதாகி விட்டது; அல்லது பல்கலைக்கழகத்திற்கும் வந்து விட்டாய்; இன்னும் குடிக்க தெரியாதா என்று கேட்டும் கேலி பண்ணியும் உங்களை உளவியல் ரீதியில் இத்தீய பழக்கங்களை செய்யத் தூண்டலாம்.

மேலும் சிலர் இவற்றை இலவசமாக தங்கள் செலவில் வாங்கித் தந்தோ, அல்லது விருந்துகளில் ஒரு சந்தோசத்திற்கு குடிக்குமாறும் கூறலாம்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நீங்கள் என்ன செய்யவேண்டும் - உங்கள் பதில் "என்னால் குடிக்க முடியாது" என்பது தான்.

நீங்கள் நண்பர்களுடன் இருக்க வேண்டி அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டியதில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களுக்கு புத்திமதி கூறுங்கள், அப்படியிருந்து அவர்கள் உங்களை வெறுத்தாலோ, தனிமைப்படுத்த நினைத்தாலோ அவர்கள் உங்கள் உண்மையான நண்பர்கள் அல்லர். எல்லாவற்றிலும் மேலாக உங்களை நீங்களாக இருக்கவிடுபவர்களே உண்மையான நண்பர்கள்.

எனவே மாணவர்களே எந்த விடயத்திலும் நன்றாக சிந்தியுங்கள், பெரியவர்களின் ஆலோசனை பெறுங்கள்; முடிவெடுங்கள்; செயற்படுத்துங்கள். நீங்கள் வாழ்க்கையில் வெற்றியடையலாம்.

*சுகநலனே மேன்மையான செல்வம்*

## உங்களுக்கு இடம் இல்லை!



பென்சிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்து எண்ணற்றவர்களுடைய உயிர்களைக் காப்பாற்றிய அலெக்சாண்டர் ஃப்ளெமிங் (Sir Alexander Fleming) 'பெல்ஃபாஸ்ட்' என்ற இடத்தில் சொற்பொழிவு செய்ய ஒப்புக் கொண்டார்.

சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அவருடைய பேச்சைக் கேட்க விரும்பினார்கள்.

அவர்கள் லண்டனிலிருந்து 'பெல்ஃபாஸ்ட்' செல்லும் விமானத்திலுள்ள இருக்கைகள் அனைத்திற்கும் பணம்கட்டி முன்பதிவு செய்துவிட்டார்கள்.

ஃப்ளெமிங் லண்டன் விமான நிலையத்திற்குச் சென்று 'பெல்ஃபாஸ்ட் செல்வதற்கு டிக்கெட் கொடுங்கள்' என்று கேட்டார்.

விமான நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி, 'ஃப்ளெமிங் என்பவரின் சொற்பொழிவைக் கேட்பதற்காகச் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லா டிக்கெட்டுகளையும் வாங்கிப் பதிவுசெய்து கொண்டு விட்டார்கள். ஆதலால் உங்களுக்கு இடம் காலியில்லை!' என்று கூறி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்



இதயப்பார்வையில்
உருக்கொண்டு
உதட்டு வார்த்தையால்
கருகி விடுவதுதான்
காதல்.

- புலோலியூர் பாரதி-

காதல் கல் எறிந்து
காயம் பட்டோர் பலர்!
காதலே எட்டாமல்
ஏங்குவோரும் உளர்!

- நல்லைக் கணபதி -

என் இ(னி/சை)யவளே!
புரிந்துணர்வற்ற உனது
உள்ளத்தால் என்றுமே
ஏற்றுக்கொள்ளப்படாத
எனது தூய்மையான
அன்பும் உனது
தீ - சுமந்த வார்த்தைகளால்
ரணமாக்கப்பட்ட
எனது இதயமும்...
இன்னமும் மெழுகு போல்
உருகியுருகி உயிர்
வாழ்ந்து கொண்டிருப்பது
உனது சாமரை விழிகளின்
அசைவினாலன்றோ?!?!

- ப. பிறேமலதா -

யாருடைய இதயம்
இங்கு குருதி சொட்டிக்கிடக்கிறது...?
யாருடைய தாஜ்மஹால்
உருகிஉருகி வழிகிறது!
குறுவாளை எறிந்து விட்டு
சாமரங்கள் வீசுவது
யாருடைய கொடுங்கரமோ..?
யார் இந்தத் துயர் விழியாள்...?
மும்தாஜா...? ஜூலியட்டா...?

- தாட்சாயணி -

அன்புள்ள காதலரே..!
ஆசையால் ஒரு வார்த்தை
சொன்னீரே அன்று..
நாலெழுத்தை நானுரைக்க
தேடுகிறேன் தேசமெங்கும்..
காணவில்லை! உன்னுருவம்
கண்டு கொண்டேன் உன்பெயரை
காணாமற் போனோரின்..
நீளமான பட்டியலில்.

- கோபி -
நெல்லியடி.

கண்களால் கதை பேசி,
சனிக்கிரகம் போல் என்னை
வளையத்துள் முடக்கியவளே!
உன் கல்யாணம் இன்று அங்கே.
என் இதயம் தீப்பந்தமாய் இங்கே!

- பிராதிகி -
பூநகரி.

கண்களில் தொடங்கிக்
கல்லறை கடந்து
கனிந்திடும் இதயமொழி-இன்று
சில்லறை மனிதரின்
சிலுவையில் தொங்கி
அனலிடை மெழுகென உருகுவதோ?
சொர்க்கத்தில் இணைந்தவற்றை
"ரொக்கங்கள்" பிரிப்பதுவோ?
இணைந்திட்ட இதயங்களே
இருளகற்றி வாழ்ந்திடுவீர்!

- இ.ஜெயக்குமார் -

உண்மையில்லா உலகிலே
உண்மையான அன்பைத்தேடி
உணர்வுகளை இழந்துவிட்டனவா
உன் கண்கள்!
உணர்வுகளை இழந்தது
நீ மட்டுமல்ல நானும் தான்!
வாழ்க்கையிலே வந்தன
ஆயிரம் வடுக்கள் - அவற்றிலும்
ஆழமாக என் இதயத்தை தைத்தது
உன் அன்பெனும் ஆயுதம்தான்.
பற்றி எரிவது என் சிந்தனை
மட்டுமல்ல உயிருடன் உடலும்தான்.
உன் இருளை நான் அகற்ற
மெழுகு திரியானேன்,
உருகும் திரியாகி உனக்காக
தேய்ந்துவிட்டேன் - ஆனால்
இன்னும் ஒளிருகிறேன் எனக்காக
அல்ல நாம் தோற்றுவிட்டோம்
என நினைக்கும் இந்த உலகிற்காக!
தோற்றது நாமல்ல; இந்த
உலகம்தான்!.

- எஸ்.ஆனந்தி -

சனிக்குப் போய் வந்தாலும்...
பனிக் குன்றை அடைந்தாலும்...
தனித்துவமாய் வாழ நிமிர்ந்தாலும்...
- பெண்ணிவளின்
மனக்கவலை 'காதல்' எனும்
சிறகுடைந்து போனதுவோ...?

- ச. ஜனனி -
சங்கத்தானை.

'ஐ லவ் யூ' சொன்ன உதடுகளால்
'ஐ அம் சொறி' சொல்லி விட்டாய்!
சாமரம் வீசிய கரங்களால்
சாட்சியன் இதயத்தை கிழித்து விட்டாய்!
ஆனந்த கண்ணீர் சிந்திய விழியை
ஆறாக் செந்நீர் சிந்த வைத்து விட்டாய்!
உலகையே கண்ணுள் தேக்கி
உனைத் தேடித் தேடியே - நான்
உருகும் மெழுகாகுவதை
உன் இதயம் என்றோ அறியுமா?

- க.வினோ -
கொடிகாமம்

விழியால் வித்தூன்றி
இதயத்து செந்நீருற்றி
மெய்யுருக வெளிச்சமிட்டு
வளர்த்த பயிர்தான் 'என்காதல்'
காதலிக்கு நாமம்
'கனியும் தமிழ்' என்றேன்.
கயவர் கத்தி தந்த
காயமதால்............
காவியமாய் வாழுகிறேன்.

- ஜெ.தாஸன் -
ஐயன்குளம்.

இதய வீணை குருதி சிந்தும்!
விழியெனும் ஓடை கண்ணீர் பெருக்கும்! - ஆனாலும்
காதல் மட்டும் சாமரம் வீசும்' ! - இந்த
பூமி சுற்றிக் கொண்டே இருப்பதற்காய்...

- ஜகந்தியா -

ஒளிரும் தீபம் அணைவதுண்டு.
வெண்ணிலவு மொளியிழந்து போவதுண்டு.
விருட்சமதும் வேரிழந்து சாய்வதுண்டு.
இணைந்திட்ட இதயங்கள் எதுவரினும் பிரிவதுண்டோ?
உயிருள்ள வரையுண்மை அன்பிங்கு அழிவதுண்டோ..?

- சு. க. சிந்துதாசன் -
பொலிகையூர்

பெண்ணே!
ஆணாதிக்கத்துள் புதைந்து
அறைக்குள் முடங்கி
அகப்பையுடன் போராடி - நெஞ்சம்
குமுறிய நாள்கள்
நினைவிருக்கிறதா? - இன்று
கல்லறையில் உன்
காவியம் எழுதப்படுகிறது
பெருமைப்படு!

- கனகராயனூரான் -

## மௌனமொழி-61



உங்கள் [illegible] யம் இது.

காதலே!
இன்றளநேற்றும்
இலத்திரனியலும்
காதலுக்கு
போட்டியிட
நான் மட்டும்
எச்சில் தடவி
முத்திரை ஒட்டி
உன் முகவரியை
தேடுகின்றேன்!

- க.இந்து -
கொடிகாமம்.

காதலனைக் களமனுப்பி
கண்பூத்து நிற்கின்றேன்
தேசம் மட்டுமல்ல
என்வாழ்வும் மலரும்
என்ற எதிர்பார்ப்புடன்....!

- வட்டு. சிவநேசன் -

உறக்கமின்றி
உண்மை வார்த்தைகளும்
உலகிற்கு ஒளியும் வழங்க
உருகி நின்றோம்...
உள்ளத்தீயை
உருட்டி விட்டோம்...
உரு மாறினாலும்
உறங்கிடா எம் குருதி!

- ஜோ. ஜெஸ்ரின் -
கொழும்புத்துறை.

நீலவிழி பேசும்
நில்லென்று மொழிபயிலும்
வியாழ சுகம் குறைய
விழிகள் அருவிதரும்
செவ்விதழ்கள் பேசும்
சிரித்து மொழிபயிலும்
சனியாள்வையிருந்தால்
சாஸ்திரங்கள் பொய்த்துவிடும்.
காலன் எறியும்
கட்டாரி பாய்ந்தபின்பு
சாமரந்தான் ஏதிங்கு?
உடலுருகி -
உயிர்கரைந்து -
உணர்வழியும் -
உண்மையிது!

- தனம் -
பூநகரி.

காதலுலகம்
கடைசி ஆள்வரை
தொடரும்!
அறுபது நாளிகையில்
உருகும் மெழுகு திரியாகும்!
இதழ்சிரிப்பால்!
விழி வீச்சால்!
புத்தி மழுங்கியதால் - இதயம்
கத்தி பட்ட காயமாகியதே!
காதலுக்கு புகைமூட்ட
சாதலின் தீப்பந்த மாகியதே!

- மாருதி -
ஆவரங்கால்

ஈன்றாள் பெரிதுவக்க
இதயம் சிந்தும் குருதியால்
ஈகைச் சுடரை ஏற்றுங்கள்.
சுழலும் உலகில் அழியாச்
சுவடு பதித்த உத்தமரை
தீயிலெரியாத தீபங்களை
திட சிந்தனையுடன் நேசியுங்கள!

- தி. கவிகலா -
கோண்டாவில் வடக்கு.

இதய வீணையின்
உணர்வுத் தந்திகள்
அறுக்கப்படுவதால்,
பாலைவனக் காட்டில் பூத்த
வெண்துகில் பூவாக
சோகத் தீக்குளிப்பில்
எரியும் மெழுகுவர்த்தியாக
அர்த்தமற்றுப் போனதுவோ
கன்னி உந்தன் வாழ்க்கை?

- நித்தியா -
நல்லூர்.

காதலென்னும்
புனித வார்த்தை
உதட்டால் காமத்தீயை
பரப்பிடவன்றோ....?
மேலுலக மோகத்தால்,
நல் இதயத்தைக் குத்தி
கிழித்திடவுமன்றோ....?
மெழுகுபோல் உருகும்
உண்மை அன்புருக்கம்
என்ற சாமரையை
வீசி நிற்பதற்காகவன்றோ!!

- ச.தியாகேஸ்வரசர்மா -
நுணாவில்மத்தி.

கொடுமையைக் கண்டு
கொதிக்காத இதயம்
அடிமையைக் கண்டு
அஞ்சாத இதயம்
இருந்து என்ன?
இழந்தென்ன?

- அ. பிரேமின் -
குருநகர்.

வண்ண விழியாளே!
வசந்த மலரவளே!
காதலுக்கு நீ போடும்
அத்திவாரம் இதுவென்றால்
கொஞ்சம் பொறுத்திரு - என்
சொந்த மண்ணைக்
காதலித்து விட்டு
வருகின்றேன்.....!

- எம்.சுயர்சன் -
கோண்டாவில்.

எத்தனை சோகங்கள்!.....
துன்பங்கள்... விரக்திகள்!.....
ஆறமுடியாத ஆழமான காயங்கள்....
உருகி உருகி
தேய்ந்துவிடும் நிலையிலும்
ஒளிர்கின்ற மெழுகுவர்த்திகளாய்
இறுதி மூச்சுவரை
தோற்றுவிடாது
வென்று முடிப்பதுதான்
உண்மை (காதல்) அன்பு.

- என்.சத்தியன் -

அவன்
என்னிடம்
பறித்தெடுத்த
இதயத்தை என்னிடமே
திருப்பித் தந்தான்.
இன்னோரிடத்தில்
இதயத்துடன்
இனாமாக
ரொக்கமும்
கிடைக்கிறதாம்!

- சாவையூர் சுகந்தி -

இதயம் இப்போது
விழிகளுக்கும்
உதடுகளுக்குமிடையே
எம்பிவிட்டது!
ஒருபுறம் சுடராய் எரிய
மறுபுறம் மெழுகாய் உருகும்
விந்(த்)தை!
சாமரம் வீசுவது போலும்
சனியன் பிடித்தது போலும்
ஒரே-நேர உணர்வுகள்!
அனைத்தும் நடக்கையில்
ஆழமாய் இறங்கும் கத்தி
இதயம் இறக்கும்
சுவாசம் மறக்கும்
சாதிச் சாகரத்துள்
காதல் மாளும்!

- சைதன்யன் -

அவனிற்கு அவள்
அழகாகத் தெரிந்தாள் - காதல்
கைகெடுத்தது!
எவருக்கும் நான்
அழகாக இல்லை - காதல்
எட்டிநின்று சிரித்தது!

- முத்துமாரி -

எம் இதயங்கள் கிழிக்கப்படும் போது
காதலாகிக் கண்ணீர் கசிகிறது.
எம் சகோதரர்கள் தீபமாய் எரியும் போது
காதலாகிக் கண்ணீர் கசிகிறது
பெண்மீது கொண்ட காதலால் அல்ல
மண்மீது கொண்ட காதலால்.

- ந. அருள்வேள் -
சங்கத்தானை.

இளையவர்களே!
காதலித்துப் பாருங்கள்
இத்தனை அர்த்தமும்
பொதிந்திருக்கும் உங்கள்
காதலர் முகத்தைப் பார்த்தவுடன்
பறக்க நினைத்து - வான்
பார்க்கும் உங்கள்
இளமை - பின்
புதைய நினைத்து
பூமியையும் பார்க்கும்!

- எம்.பிருந்தா -
கோண்டாவில்

காதலின் 'தீபம்' ஒன்றை:
இதயத்தினுள் ஏற்றிவிடு!
ஈதலினால் பெற்ற அன்பை
எண்ணையாக ஊற்றிவிடு!

- இ. றாஜ்குமார் -
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மாவிற்கு இரண்டு சந்ததியாய் நிறைய ஆடுகள் இருந்தன. ஆடுகள் என்பவை வெள்ளாடுகள். இவை வளர்ப்பதால் லாபங்களில் எருவும், கிடாய் விற்பதுவும் முக்கியமாய் இருந்தன. ஐம்பதிற்குமேற்பட்ட ஆடுகள் பட்டியில் நின்றன. ஒவ்வொரு காலையும் பப்பா ஆடுகள் மேய்க்கப் போவார். மிளகாய்த் தோட்டம் இல்லாத காலங்களில் சும்மா அவிட்டுத் துரத்தி விடுவார்கள். அவை மேயப்போய்விடும். மாலையில் பப்பாவும், அம்மம்மாவும் போய் மறித்துவந்து பட்டிக்குள் இருக்கும் கட்டையில் கட்டுவார்கள்.

மாலையில் ஆடுகட்டும் நிகழ்ச்சி ஒரு சடங்கு போல நடக்கும். பப்பா ஒரு வேதியன் போல நின்று "பெரியாடு கட்டியாச்சா?" "வெள்ளையாடு கட்டியாச்சா?" "புள்ளியாடு செம்மறி" (வெள்ளாட்டுப் பட்டியில் செம்மறி வடிவில் ஒரு ஆடு இருந்தது அதன் தாய் வெள்ளாடுதான்) என்று கத்திக்கொண்டிருப்பார். எல்லாம் சரிவரக் கட்டிய பின்தான் பப்பாவின் குரல் ஓயும்.

அப்போது நான் நாலாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். வீட்டுக்கு கிட்டத்தான் பள்ளிக்கூடம். மாலைப் பொழுது பெரும்பாலும் ஆடுகளுடன் கழியும்.

சில வேளைகளில் சனி, ஞாயிறுகளில் ஆடுமேய்க்கும் பொறுப்பு எனக்கும் றமணாவுக்கும் (எனது சின்னண்ணா) கிடைத்துவிடும். இது குதூகலமான தொழில் என்ற காரணத்தால் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுவிடுவோம். மற்றது பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மாடுமேய்க்கப் போடா என்று திட்டவும் முடியாது.

றமணா கொஞ்சம் முரண்டு பண்ணும் பேர்வழி. ஆடுகளை சமாளிப்பதைவிட அவனை சமாளிப்பதில் அக்கறையாய் இருக்கவேண்டும்.

றமணா இலகுவாய் மரத்தில் ஏறுவான். இதனால் இளநீர்ப் பஞ்சம் இல்லை. வாழ்நாள் முழுவதிற்கும் தேவையான இளநீரை சிலநாள்களில் குடித்துவிட்டோம்.

மற்றும் மேய்ச்சல் தளத்தில் நிறைய நட்புக்கள் கிடைக்கும். மாடு மேய்க்கும் பையன்கள், தோட்ட வெளி என்பதால் தோட்டக்காவல் பையன்கள்; இப்படிப் பலர்.

தோட்டவெளிக்கு அருகே வைரவர்கோவில், பெரியகுளம். அங்கு கும்மாளம். அரசுகைவிட்ட தென்னந்தோப்பு, நுங்கு, ஈச்சம்பழம், நாவல் பழம் என்று ஒவ்வொரு போகத்திற்கு ஒவ்வொரு பட்சணம் எமக்குக் கிடைத்துவிடும். ஒரு வானக வாழ்க்கை வாழ்ந்தோம் என்றால் அர்த்தம் நிறையவுண்டு. குளத்தில் மூழ்கி, சாரத்தை உரிந்து மேலே காட்டி....ஆனந்தம் தான். ஆடுகள், மாடுகள் தம்பாடு நாம் எம்பாடு. இடுப்புமட்ட தண்ணீரில் சாரத்தை உரிந்து, விரித்து, பார்த்து மீன்பிடிக்க, பொல்லாத கெளிறு கடிக்கக்கூடாத இடத்தில் கடிக்க, அப்பா... வேதனை சனியன் மூதேவி, நாய், பேய் என மீனைத் திட்டித்தீர்ப்போம்.

காட்டுப் பழங்கள் தின்ற எமக்கு இருந்தாற்போல் மரமுந்திரிப்பழம் ஆசைவர ஆடு மாடுகளை ஒதுக்கி விட்டு விட்டு, இராசாதோட்டத்து ஏழு பட்டு கம்பிக்கு கீழால் புகுந்தோம். ராசாதோட்டத்தில் ஒரு ஏக்கருக்கு மேல் முந்திரி நின்றது.

தோட்ட முதலாளி மகாநப்பி கழனித் தண்ணியைவிட்டு சோறு தின்பவன். யாழ்ப்பாணம் திருநெல்வேலி சொந்த ஊர். அவன் வீட்டு மதிலை எங்களில் ஐந்துபேர் ஒருவர்மேல் ஒருவர் ஏறிநிற்க வேண்டும் எட்டி பார்க்க என்று சிறுவர்கள் கதைப்பார்கள். தோட்டக் காவற்காரன் மானிப்பாய்க் கிழவன். சாடிக் கேற்ற மூடி முந்திரியப்பழத்தை பார்த்துவிட்டு தரலாம் என்றால் தராதவன்.

நாங்கள் ஐந்துபேர் ஒரே எட்டில் மரத்தினில் ஏறிவிட்டோம். ஐந்தாறு பழம் தின்றிருப்போம்.

கணக்கன் ஏதோ அசுமாத்தம் தெரிந்து எம்மை நெருங்கி வந்தததை நாம் பழருசியில் காணவில்லை. மரத்திற்கு கீழே வந்தபின்தான் இழவு கண்டோம். நாம் குழைகளுக்குள் மறைந்து கொண்டோம். நம்மபையன்கள் போல் நம்ம கெடுகாலம் எங்களுடன் முந்திரிக்கு வந்த ஒருவன் - மாடு மேய்க்க வந்த பொன்னையாப்பாவின் கடைசி வடி - செல்லன். பத்துமாடு மூன்று கன்று அதில் ஒன்று புலுட்டை. செல்வன் அடிக்கடி சொல்வான்.

"டேய் அதுக்கு சவாரி பழக்கப் போறன்"

"ஓமடா செல்லா கட்டாயம் பழக்கு எல்லா மாடும் சவாரி ஓடுதெண்டு செல்லன்ரை பட்டியில் நின்ற புலுட்டைக் கண்டும் சவாரி ஓடிச்சாம் என்று பழமொழி உன்ரை பெயரில் வரும். கட்டாயம் பழக்கடா"

"உதுக்கு சோடி கரவெட்டி இளையதம்பியிடம் அவுக்கலாமடா" என்றோம்.

பாவம், அடுத்தநாள் பெய்த அடைமழையில் அந்தப் புலுட்டைக் கன்று தூரவுப்படியில் குளிரால் இறந்துவிட்டது. அதோடு செல்லன் சவாரி பழக்கும் எண்ணத்தை கைவிட்டுவிட்டான்.

செல்லன் ஓர் ஓநாய் வயிற்றுப் பேர்வழி. ஒரு நாளைக்கு ஆறு, ஏழு தரம் சாப்பிடுவான். அதேயளவுதரம் வெளிக்கும் போவான். அடிக்கடி கர்மம்,வாயு பறிந்தபடி இருக்கும். 'சரார் சரார்' என்று. காதுமட்டுமல்ல மூக்கும் செவிடாகும். அவனுக்கு இதனால் காரணப்பெயர் ஒன்றும் பட்டமாக வைத்தோம். என்னவென்று உய்த்துக் கண்டுபிடியுங்கள்.

கணக்கன் நாமிருந்த மரத்துக்கு கீழே வரவும் செல்லன் 'சரார்' என்று ஒரு வெடி வைக்கவும் கணக்காய் இருந்தது. கணக்கன் அண்ணாந்து பார்த்தான். நாம் சரசரவென்று குதித்தோம். ஓடத்தொடங்கினோம் காற்றைக் கிழித்தபடி.

பன்றி பிரித்தது மாதிரி ஒவ்வொரு பொட்டு பிரித்துக்கொண்டு ஓடினோம். பாவம் வயதுபோன கணக்கரால் எம்மைத் துரத்திப்பிடிக்க முடியவில்லை. கஸ்ரகாலம் செல்லனின் சாரம் கம்பியில் கொழுவிக்கொண்டுவிட்டது.

"வாடா, வாடா" என்று நாம் கத்த...

"சாரமடா, சாரமடா" என்று அவன் கத்த...

"விட்டுவிட்டு வா, விட்டுவிட்டு வா எப்படியும் கணக்கனிடம் பிடிபடக் கூடாது"

ஒருமாதிரி சாரத்தை எடுத்துக் கொண்டு ஓடிவந்துவிட்டான். கணக்கனால் ஏழெட்டுக் கம்பியைக் கடக்க முடியவில்லை. நம்மைக் கடுமையாகத் திட்டினான். அதில் 'அந்தரங்கத்தினில் காஞ்சோண்டி பூச' என்றதை மட்டும் எம்மால் ஜீரணிக்க முடியவில்லை - இப்பவும்.

அம்மம்மாவிடம் கிரமமாய் ஆடு வாங்கும் ஆட்டு வியாபாரி ஆட்டுக்காரக் கதிரி - கதிரித்தம்பி. கதிரிக்கு சொந்தவிடம் இயக்கச்சி. பளையில் இருந்து ஒரு ஏழுமைல் கிழக்காகப் போகவேண்டும்.

கதிரி ஊருக்குள் வருகின்றார் என்றால் ஆடுகள் யாவும் காட்டுக்குள் ஓடிவிடும். ஆட்டுக்காரர்கள் யாவரும் றோட்டுக்கு வந்து விடுவார்கள். கதிரியின் வாசம் ஆடுகளுக்கும் மேய்ப்பவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

கதிரி ரொம்ப கட்டை. அதாவது குள்ளம். ஒரு முறை பெருவெள்ளம் போட்டது. வீதியை மூடி வெள்ளம் வழிய, கதிரி கடந்து [illegible] விடுவார். இதனால் மூன்று- கிழமை சந்தைப் பக்கம் வரவேயில்லை. அவ்வளவு கட்டை.

அந்நாளில் அதாவது 1982இல் மோட்டார்சைக்கிள் வைத்திருந்த ஒரே ஆள் கதிரிதான். 'சர்ரென்றபடி' அது ஓடும். நாம் புதினம் பார்ப்போம். கட்டையாய் குட்டையாய் கதிரி மோட்டார் சைக்கிள் ஓடுவதைப்பார்க்க கரடி சேர்க்கஸில் மோட்டார் சைக்கிள் ஓடுவதுபோல இருந்தது. சிறுவர்கள் "கரடி வருதடா கரடி" என்று தமக்குள் சிரிப்பார்கள்.

கதிரி ஆடுகளை வாங்கி கொழும்புக்கு ரயிலில் ஏற்றி அனுப்புவார். யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் ஓடும்வரை கதிரி இதனைச் செய்துவந்தார். நல்ல லாபம். கதிரிக்கு மூன்று மனைவி. நிறையப் பிள்ளைகள். ஆட்டுப்பட்டி மாதிரி விலாசமான ஆள்.

"நான் ஒண்டைச் சமாளிக்க படுறபாடு, இவன் பாவி மூண்டை எப்படிச் சமாளிக்கிறான்?" என செல்லன்ரை பொன்னையாப்பா அங்கலாய்ப்பார்.

ஆனால் பின்நாளில் நிறைய உழைத்த கதிரி பிள்ளைகளாலும், மனைவிமாராலும் கைவிடப்பட்டு ஒரு வாய் வெத்திலைக்கு வழியில்லாமல் அநாதையாக ஆஸ்பத்திரியில இறந்து போனது துயரமான கதை.

அம்மம்மாவின் கடைசி மகளுக்கு-



அன்றிக்கு - 1983இல் கல்யாணம் ஏற்பாடானது. எனக்கு 11 வயது. கல்யாணம் என்றால் எங்களுக்கு மகா கொண்டாட்டம். ஒருகிழமை பள்ளிக்கு மட்டம். அப்ப விசேட பலகாரம் பயிற்றம் பணியாரம். இரகசியமாய் அள்ளித் தின்னுவதும், மாட்டுக் குடிலுக்கு கொண்டுபோவதும் ஒரே செல்வாக்கு. ஒரு கட்டத்தில் அலுத்துவிடும். கல்யாணங்கள் முடிந்துவிட கொஞ்ச நாள்களில் எங்காவது மூலையில் ஒரு முறுக்குத்துண்டு கிடைக்காதா? என்று தேடியதும் ஞாபகம்.

அன்றிக்கு கல்யாண சீதனமாக பத்தாயிரம் கேட்டார்கள். அம்மம்மாவிட்டம் நகைகள் இருந்தன. பத்தாயிரம் இல்லை. இதனால் ஆட்டுப்பட்டியை விற்கலாம் என்று முடிவாயிற்று.

கதிரி வாயெல்லாம் காவிப்பல்லு தெரிய சிரித்தபடி வந்துசேர்ந்தார். அன்று நான் திட்டிய திட்டுத்தான் பின்னாளில் கதிரிக்கு பாரிசவாதம்வரக் காரணமாக இருக்கலாம். ஓர் ஆடு இருநூறாக விலைதீர்ந்தது. ஐம்பது ஆடுகள். எனவே பத்தாயிரம் கிடைக்கும். கதிரி காசு கொடுத்துவிட்டுப் போனார்.

பட்டியில் இருந்த புள்ளியாடு நாங்கள் முந்திரியப்பழத்திற்கு போன அன்று ஒரு குட்டி ஈன்றது. பால்போல வெள்ளையில் கறுப்பு மையை ஊத்தியதுபோல புள்ளியாக அதன் நிறம். கழுத்தில் இரண்டு மணிகள். இந்த மணி ஏன் வருகின்றது என்று யாருக்கும் தெரியாது. ஆனால் பார்க்க மிகவும் அழகாகஇருக்கும். அதற்கு நானும் றமணாவும் 'மணி' என்று பெயர் வைத்தோம். மணியிடம் விரலைக் கொடுத்தால் மளமளவென்று சூப்பும். அது ஒரு தனிசுகம். மணி இப்போது மூன்று மாதக் குட்டி. மணிக்கு 'மணி' என்று குரல் கொடுத்தால் போதும் பாய்ந்து வரும்.

கதிரி ஆடுகளை தூக்கி ஏற்றிய போது மணி அபாயமாய் அலறியது. கதிரி ஆடுகளுடன் குட்டிகளுக்கும் விலை போட்டிருந்தார்.

மணி அலறிய சத்தம் என் காதைக் கிழித்து மனதை நெருடியது. "பெயர் வைத்தாயே" "மடியில் கிடத்தினாயே" வெட்டக் கொண்டுபோகிறான்" "பார்த்து நிக்கிறாயேடா" என்பது போல இருந்தது.

மரக்குற்றியில் இருந்த நான் துள்ளி எழுந்தேன். அம்மம்மாவிடம் மணியை வாங்கித் தரும்படிகேட்டேன். பாவம் வளர்ப்பம் என்றேன். கதிரி மறுத்தார். "காசு தந்துவிட்டேன் தரேன்" என்றார்.

நான் முரண்டுபண்ணினேன். அழத் தொடங்கினேன். மண்ணில புரண்டேன்.

"மணியை வாங்கித்தாங்கோ... வாங்கித்தாங்கோ..."

கூச்சல் கேட்டு செல்லன் ஓடி வந்தான். றமணாவும் அம்மம்மாவிடம் சொன்னான். வீரிட்டு கத்தத் தொடங்கினேன்.

என் அரையண்டம் தாங்க முடியாமல் கதிரி மணியைப் பிடித்து என்னிடம் தந்து விட்டு,

"கண்டறியாத பொடி வளக்கிறியள்" என்று திட்டினார். மணி இப்போ என்வசம்.

ஐம்பது ஆடுகள் இருந்த இடத்தில் இப்போது மணிமட்டும். என்னுடைய தனிக் கவனிப்பில் வளரத் தொடங்கியது.

'மணி' ஆடாக மாறியது. அழகான மறி. இருபதுவயது இளங்குமரி போல்.

செல்லன் வீட்டில் ஒரு கறுப்புக் கிடாய் இருந்தது. செல்லன் ஒரு பெயர்ப் பைத்தியம். ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் பெயர் வைப்பான். சிவப்பி, புள்ளிச்சி, புலுனி (கொஞ்சம் சின்னமாடு) மொட்டச்சி, செல்லம்மா (மாமி பெயர்), பவளம் (மைத்துனி பெயர்), சூரன் (வீரமுள்ள மாடு) இப்படிப்பல.

**கோகுலராகவன்**

செல்லன் தன் கிடாய்க்கு வைத்த பெயர் வீரன். என்னுடைய மணிக்கு வீரன் மீது மையல். அடிக்கடி வீரன் வீட்டைப் பார்த்து கத்தும். அதாவது காதல் கீதம் பாடும். காதல் நாளொரு மேனி பொழுதொருவண்ணம் வளர்ந்தது. மணிக்கு மட்டும் - ஒரு பக்கம் காதல்-வீரனுக்கு மணியின் நினைப்பே இல்லை. ஆ... என்ன துயரம் ஏங்க வைப்பது ஆண்வர்க்கத்தின் இயல்போ? மணியின் கீதம் இப்போ துயரமாக ஒலித்தது. என்ன கர்மமோ எனக்கு அப்படித்தான்பட்டது. யாரைத்தான் தூதுவிடுவது?

ஒருநாள் மணியை காலையில அவிட்டு விட்டேன். இரண்டு நாளாய் வீட்டுப்பக்கம் வரவில்லை. இடையினில் செல்லனின் வீரன் கட்டை அறுத்துக்கொண்டு காணாமல்போய் விட்டதாகத் தகவல்.

நான் பொருத்திப் பார்த்தேன். கணக்கு சரி. காதலர்கள் ஓட்டம் பிடித்து விட்டார்கள். 'எங்கிருந்தாலும் வாழ்க' மனதார வாழ்த்தினேன்.

ஒரு கிழமை கழிய மணி, ஒரு மாலையில் வீட்டுப்பக்கம் வந்தது. அம்மா பிடித்துக் கட்டினார். கிட்டப் போய்ப் பார்த்தேன். மணியின் முகத்தில் ஒரு திருப்தி நிலவியது போலப் பட்டது. ஒரு கிழமையில் எல்லாம் தீர்ந்துவீடுமா?

ஆறுமாதம் கழிய மணி மகா கறுப்புக் குட்டிகள் இரண்டை ஈன்றது. சுரக்கொட்டை போட புடல் முளைக்குமா? ஒரு துளிக்கும் வெள்ளை இல்லை. பிறப்பில் எந்த சந்தேகமும் இல்லை. வீரன் வீரமுள்ள ஆண்தான். ஆனால் தாயைப்போல குட்டிகளுக்கு கழுத்தில் இரு மணிகள் இருந்தன.

* * *

மணியின் தொடக்கத்தினால் இப்போது எங்களுக்கு (1990 இல்) 50க்கு மேற்பட்ட ஆடுகள் வந்துவிட்டன. மேய்க்க ஒருபையன் இருந்தான். வீட்டில் நானும் அம்மாவும் அப்பாவும் தான்.

பெரியண்ணா யாழ்ப்பாணத்தில் கல்யாணம் பண்ணி அங்கேயே தங்கி விட்டான்.

றமணா வெளிநாடு போய்விட்டான். எனக்கு யாழ்ப்பாணத்தில் 1994 இல் வேலை கிடைத்தது. யாழில் வீடு எடுத்து இருப்பது இலாபமாகப்பட்டது. அம்மாவும் அப்பாவும் தயார். ஆடுகளை என்ன செய்வது? அப்பா "விற்கலாம்" என்றார். கதிரி இறந்து ஐந்தாறு வருடமாகிவிட்டது.

இதனால் -

யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆட்டிறைச்சிக் கடைக்காரரைப் பிடித்து விலைபேசிவிட்டேன். அவர்கள் அனுமதி எடுத்துக்கொண்டு வந்தார்கள். 48 ஆயிரமாக மொத்த விலை தீர்ந்தது.

ஆடுகளை லொறியில் ஏற்றினார்கள். தூக்கி தூக்கி வீசினார்கள். சாகும் ஆடு முறிந்தால் என்ன உடைந்தால் என்ன?

திடீரென்று மணி அலறியது போல ஒரு சத்தம். திரும்பிப் பார்த்தேன். ஒரு மூன்று மாதக் குட்டியைத் தூக்கி எறிந்தார்கள். உள்ளே மூலைக்குள் போய் விழுந்தது. மீண்டும் காசை எண்ணிப் பார்த்தேன். 48 ஆயிரம் ரூபா சரியாக இருந்தது. காசுடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

(யாவும் கற்பனை)

## குறள்வெள்ளம்

இந்தப் பரந்த உலகிலே தனக்கெனத் தனிப்பாதை அமைத்து வாழ வக்கில்லாத மனிதர்கள் அடுத்தவர் சோலிக்குள் மூக்கை நுழைக்கிறார்கள்.

உழைக்கப் பிழைக்கத் தெரியாவிட்டால் களவு, பொய்புரட்டு என்று காலம் கழிப்பது சுலபமாகப்படும். இதனால் அடுத்தவர்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல்கள் பற்றி இவர்களுக்கு கவலைப்பட நேரமேது?

இதுதான் அறியாமை - பேதமை! அறங்கருதி வாழ்பவர் - மெய்யான பொருளைக் கண்டவர் - தமக்குரியது அல்லாத துரும்புக்கும் ஆசைப்படார்; தூணுக்கும் ஏங்கார்.

பொருளும் அறிவும் அறமும் தனக்கெனத் தேடுதல் போன்றே ஒரு துணையையும் தனக்கெனக் கொள்ளுதல் அறிவுடையார் பண்பு. துணைதேடப் பஞ்சமிலாப் பரந்த இவ் உலகில் அடுத்தவன் துணையை பிறன் பொருளைப் - பெட்டொழுகும் பேதமை - ஆசைப்பட்டு அடையத்துடிக்கும் அறியாமை கொடியது; ஆபத்தானது.

இத்தகைய மனச்சஞ்சலம் இரண்டு குடும்பங்களில் சூறாவளி வீசச்செய்யும் அமைதியைக் குலைக்கும்.

எனவேதான் அடுத்தவர் துணையையோ - அடுத்தவர் துணையாக நாளை உருவாகப் போபவளையோ ஏறெடுத்தும் பார்க்கார் ஞாலத்து உயர்ந்தோர்.

**பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதமை**
**-ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல் -** 0141

-அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஸ்பியன் கடலுக்கு அண்மையில், ரஷ்யாவில் உள்ள ஓர் ஏரியில் கரண்டிச் சொண்டன்களும் (SPOONBILLS),சாம்பல் நாரைகளும் (GREY HEROMS) முன்னும் பின்னும் சாம்பல் நாரைகள், இடையில் கரண்டிச் சொண்டன்கள். சாம்பல் நாரைகள் நரை நிறமானவை, கரண்டிச்சொண்டங்கள் தூய வெள்ளை, சொண்டு கரண்டி போலவிருக்கும். இவை இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து மீண்டும் திரும்பும், சில யாழ்.குடாநாட்டிற்கும் வருவதுண்டு. சாம்பல் நாரைகள் நாகர்கோவில் பிரதேசத்தில் நிரந்தரமாகவும் வாழுகின்றன.



செங்கால் நாரை (FLAMINGO) பருவ காலத்தில் ஆயிரக்கணக்கில் யாழ். குடாநாட்டுக்கு வரும். உயரமான பெரிய பறவை. இதன் செஞ்சிவப்பு நிறம் நீரில் கரையக்கூடியது. (சாயம் போகும் துணி மாதிரி) அதனால் இது தரிக்கும் நீர் நிலைகளின் நீரும் செஞ்சிவப்பு நிறமாகவிருக்கும். 'நாராய், நாராய்' என்று புறநானூற்றுக் காலப்புலவர் விழித்துப் பாடியது இதனைத்தான்.



அலையும் அல்பற்றோஸ் (WANDERING ALBATROS). பறக்கும் பறவைகளிலேயே பெரியது இதுதான், முனைக்கு முனை செட்டையின் அகலம் 12 அடிகள், பறவையின் நிறை 16 இறாத்தல்கள். இது நாட்கணக்காக தரிக்காமல் பறக்கக்கூடியது. ஆண்டுதோறும் இருதுருவங்களையும் தரிசிக்கின்றதே, யாரும் இதை விஞ்ச முடியுமா?

# உலகத்தை வலம் வரும் அரசியல

அரசியல்வாதிகள்தான் உலகத்தை வலம்வந்துகொண்டிருப்பார்கள் என்றில்லை. சில அங்கிகளும் உலகத்தை வலம்வந்துகொண்டேயிருக்கும். ஆண்டுதோறும் பெரியஎடுப்பில் சுற்றுலாக்களில் ஈடுபடும். அரசியல்வாதிகள் பொதுமக்களின் வரிப்பணத்தில் 'ஓசி' பிரயாணங்களில் ஈடுபடுவர். அங்கிகளோ சொந்த முயற்சியில் பிரயாணங்களை மேற்கொள்ளும். அங்கிகளைப் பொறுத்தவரை அவற்றின் பிரயாணம் பெரும்எடுப்பில் மேற்கொள்ளப்படும் பாதயாத்திரைக்கு ஒப்பிடலாம். (அங்கியைப் பொறுத்து இது நீச்சல் யாத்திரையாகவோ அல்லது பறப்பு யாத்திரையாகவோ அமையவும் கூடும்.)

அங்கிகள் ஒட்டுமொத்தமாக ஓர் இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு ஆண்டுதோறும் புலம் பெயர்வது குடிபெயர்வு (MIGRATION) எனப்படும். குறிப்பிட்ட காலஎல்லையின் (சில மாதங்கள்) பின் இவை மீண்டும் தத்தம் பிறந்தகம் திரும்பும். (நாமும் புலம் பெயர்ந்தது உங்க

## குகன்

ளுக்கு ஞாபகம் வரலாம். அது குடிபெயர்வு தில்ல, போக்கிடமின்றி அலைந்தது. "ம்ம்" இதை நினைத்து ஏன் மனதைக் குழப்புவான்.)

அங்கிகள் புலம்பெயருவதற்கு பலகாரணங்களுண்டு. காலநிலை ஒரு காரணம். காலநிலை எப்பொழுதும் சீராக உள்ள இடங்களில் அங்கிகள் குடிபெயரவேண்டிய அவசியமில்லை. நெடுந்தூக்கம் நிகழ்த்தவேண்டிய அவசியமுமில்லை; உதாரணம் போதிய மழைவீழ்ச்சியுள்ள அயன மண்டலப் பிரதேசங்கள். காலநிலை சீரில்லாத காலங்களில் போதிய உணவும் கிடைக்காது. நீண்டகாலத்துக்கு வரட்சிநிலவும் பிரதேசங்களில், சில இன அங்கிகள் கோடை நெடுந்தூக்கம்(AESTIVATION) நிகழ்த்துவதன் வாயிலாக தகாத காலங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும். ஏற்றகாலம் திரும்பும்போது அதாவது மழைவீழ்ச்சியைத் தொடர்ந்து அவை துயில்நீத்து சாதாரணமாக இயங்க ஆரம்பிக்கும். நமது நாட்டில் விரால், பனையேறிமீன், கெளுறு போன்ற மீனினங்களும்; தவளை, தேரை போன்ற ஈருடக வாழிகளும்; நன்னீர்ப் பாம்பு மற்றும் சில பாம்பினங்களும்; பாலாமை, சருகாமை போன்ற நன்னீர் ஆமைகளும், நத்தை, மரஅட்டை, செட்டைப் பூச்சி, குசவட்டை போன்ற முதுகெலும்பில்லாத விலங்குகளும் கோடை நெடுந்தூக்கத்தில் ஈடுபடும். தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஆறுகளில் வாழும் சுவாசப்பை மீன்களும்(LUNG FISHES) கோடை நெடுந்தூக்கம் நிகழ்த்தும். மேற்படி மீனினம் வாழும் ஆறுகள் கோடைகாலங்களில் வற்றிப் போகும். மேற்படி மீனினங்கள் எல்லாம் பூக்கள் வாயிலாக நீருக்குரிய சுவாசம் நிகழ்த்துவதுடன், வளிக்குரிய சுவாசம் நிகழ்த்துவதற்கும் மேலதிக சுவாச உறுப்புக்களைக் (ACCESSORY RESTIRATORY ORGANS) கொண்டிருக்கும். மேற்படி அங்கிகள் எல்லாம் மண்ணிலோ, சேற்றிலோ புதைந்த நிலையில் நெடுந்தூக்கம் நிகழ்த்தும். தட்ப வெப்பப் பிரதேசங்களிலும், துருவப்பிரதேசங்களிலும் மாரிகாலம் மிகக் குளிரானகாலம், பிரதேசம் முழுவதும் துகள்பனியால் (SNOW) மூடப்பட்டிருக்கும். இக்காலங்களில் சில இனங்களுக்குரிய அங்கிகள் மாரி நெடுந்தூக்கம் (HIBERNATION) நிகழ்த்தும். ஏற்றகாலம்,அதாவது வசந்தகாலம் திரும்பும்போது, துயில் நீத்துஎழும். இங்ஙனம் மாரிநெடுந்தூக்கம் நிகழ்த்தும் அங்கியினங்களில் சில - சில இனப் பாம்புகள் மற்றும் நகருயிரிகள், சில இனப்பாலூட்டிகள் போன்றவை. சில இனங்களுக்குரிய அங்கிகள் குறுகியகால வாழ்க்கை வட்டங்களை உடையவை, ஏற்ற காலங்களிலேயே தமது வாழ்க்கை வட்டங்களை முடித்துக்கொள்ளும், உதாரணம் பெரும்பாலான பூச்சியினங்கள். (தாவரங்களும் கோடை நெடுந்தூக்கமோ அல்லது மாரி நெடுந்தூக்கமோ நிகழ்த்துவதுண்டு. இக்காலங்களில் அவை இலைகளை உதிர்த்தி தூக்க நிலையிலிருக்கும். அல்லது ஏற்ற காலத்திலேயே வாழ்க்கை வட்டத்தை முடித்துக்கொள்ளும்).




இங்கிலாந்திலிருந்தும், அண்டிய பிரதேசங்களிலிருந்தும் குடிபெயரும் பற
அவை செல்லும் பாதைகளும், சென்றடையும் இடங்களும்.

பல இனங்களுக்குரிய அங்கிகள்/தகாத காலங்களை - ஏற்ற சூழ்நிலை நிலவும் இடங்களை நாடிச்சென்று கழிக்கும். அவை குடிபெயர்ந்து செல்லுமிடங்களிலும் போதிய உணவு கிடைக்கும். பின் பிறந்தகம் திரும்பும்போது அங்கும் போதிய உணவு கிடைக்கும். இவற்றின் குடிபெயர்தலைக் கட்டுப்படுத்துவதில் காலநிலையும், உணவும் முக்கியமானவை. சில இனங்களுக்குரிய அங்கிகள் ஓரிடத்தில் வளரும், பின் இனப்பெருக்கம் செய்வதற்கெனப் பிறிதோரிடத்துக்குக் குடிபெயரும், உதாரணமாக விலாங்கு, றனற் (TROUT) சமன் (SALMON) போன்ற மீனினங்கள். ஆண்டாண்டு காலமாக, ஆயிரக்க

## குடிபெயர

ணக்கான வருடங்களாக குடி
பெயர்தல் இவ்வங்கிகளில்
கவே (INSTINCT) மாறிவிட்
உயிரியற் கடிகாரம் (BIOLO
இதைக் கட்டுப்படுத்தும்; அ
தலுக்குரிய காலம்வர அ
தீரும். கற்றுக்கொடுக்கவே
மில்லை. குடிபெயரும் அ
உதாரணங்கள்:- மீனினங்கள்

பறவைகள், சிலஇனப் பாலூட்
வில், ஓர் இனவண்ணத்துப்
எடுப்பில் குடிபெயருவதை அ
றிந்துள்ளார்கள். குடிபெயரும்
ஒன்றாகக்கூடும் பின் கூட்டமா

குடிபெயரும் அங்கிகளுக்
(BARRIERS) உண்டு; நீர் 
நிலம் தடையாகவிருக்கும், நி
அங்கிகளுக்கு நீரும் உயர்ந்
ளும் தடையாகவிருக்கும். ஆ
பறவைகளுக்கு இவையெல்ல
அதனால் குடிபெயர்தலைப்
வைகள்தான் மன்னர்கள்,
பெரும் அரசியல்வாதிகள்.



சிறகைகள் [illegible] (PINTAIL SNIPE) வர்ணம் பூசப்பட்ட சிறகையும் (PAINTED SNIPE). சிறகைகளில் பெரும்பாலானவை சைபீரியாவிலிருந்து (ரஷ்யா) இங்கு வருகை தருவனவாகும்.



அன்னப்பட்சிக் குடும்பம்.
தொடர்ந்து குடி பெயரும். கு
ஒருவகையான இயற்கைத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யல்வாதிகள் அல்லாத அங்கிகள்

## யர்வு -1

ளாக குடிபெயர்ந்ததால்; குடி கிகளில் ஓர் இயல்பூக்கமா மாறிவிட்டது அவற்றிலுள்ள (BIOLOGICAL CLOCK) த்தும்; அதனால் குடிபெயர் வர அவை குடிபெயர்ந்தே ாடுக்கவேண்டிய அவசிய பரும் அங்கிகளுக்கு சில னினங்கள் சில, பல இனப்



routes taken by some of Britain's
er visitors when they leave

ரும் பறவையினங்களும்,

ப பாலூட்டிகள். அமெரிக்கா ணத்துப் பூச்சியும் பெரும் வதை அண்மையில் கண்ட பயரும் அங்கிகள் முதலில் கூட்டமாகக் குடிபெயரும். கிகளுக்குச் சில தடைகள் டு; நீர் வாழ் அங்கிகளுக்கு க்கும், நிலவாழ்க்கைகுரிய உயர்ந்த மலைத்தொடர்க கும். ஆனால் குடிபெயரும் வயெல்லாம் தடைகளல்ல; நலைப் பொறுத்தவரை பற னர்கள், அங்கிகளிடையே திகள். பாஸ்போட், விசா

எதுவுமின்றி உலகெங்கும் விரும்பிய இடமெல்லாம் அலைந்துதிரிகின்றன. (உள்ளூரிலேயே நடமாடுவதற்கு நமக்கு எத்தனை வகையான அடையாளச் சிட்டைகளும் அனுமதிப் பத்திரங்களும் தேவைப்படுகின்றன). பறவைகளின் குடிபெயர்தலைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். பிறவற்றைப் பற்றி பின்னர் பார்த்துக்கொள்வோம்.

பறவைகள் எங்ஙனம் பாதையை அறிந்து தாம் செல்லவேண்டிய இடத்தைச் சென்றடைகின்றன? பின் தமது சொந்தஇடத்திற்கே திரும்பி விடுகின்றனவே எங்ஙனம்? முதல்முதலாக குடிபெயர்தலில் ஈடுபடும் குஞ்சுகள்கூட குறி தவறாமல் செல்கின்றனவே? சில பறவையினங்கள் பகலிலும், சில இரவிலும் குடிபெயர்தல் பறப்பில் ஈடுபடும்: ஆயினும் சில சமயங்களில் பகல் இரவாகப் பறக்க வேண்டியிருக்கும். உதாரணமாக சமுத்திரங்களைக் கடக்கும்போது பொதுவாகப் பறவைகள் தொடர்ந்து பறந்து குறிப்பிட்ட இடங்களிற்றான் தரிக்கும். கண்ட இடமெல்லாம் தரிப்பதில்லை.இவை எங்ஙனம் திசையையும் பாதையையும் கண்டறிகின்றன? உயர்ந்த தொழில் நுட்ப வசதியுடன் பறக்கும் விமானமே சிலசமயங்களில் திசைமாறி விடுகின்றதே?



ஈ பிடிப்பான்கள் (FLY CATCHERS) இந்திய சுவர்க்கத்து ஈபிடிப்பான் (INDIAN PARADISE FLY CATCHER), ஆணும், பெண்ணும். நெடியவாலுள்ளது ஆண். இனவிருத்திக்குரிய காலங்களில் வெள்ளை நிறம் பெறும். ஏனைய காலங்களில் கபில நிறம். இலங்கை சுவர்க்கத்து ஈபிடிப்பான் (CEYLON PARADISE FLYCATCHER) ஆண்; இது நிறம் மாறுவதில்லை. முன்னது இந்தியாவிலிருந்தும், பின்னது தென் இலங்கையிலிருந்தும் யாழ். குடாநாட்டிற்கு வருகை தரும்.

பறவைகளின் தொழில்நுட்ப இரகசியம் என்ன?

பல புரியாத புதிராகவே இருக்கிறது, ஆயினும் சில விளக்கங்களுண்டு. பகல் காலங்களில் பறக்கும்போது இடக்குறிப்புக்களையும் (LAND MARKS), இரவுவேளைகளில் நட்சத்திரங்களின் உதவிகொண்டும் (மாலுமிகளைப் போல) பறவைகள் திசையறிந்து - பாதையறிந்து - செல்லுகின்றன என்பது ஒரு விளக்கம். இதனாற்றான் போலும் மூடுபனி ஏற்படும்போது பறவைகள் தடுமாறிவிடுகின்றன, அதேபோல இரவுவேளைகளில் வெளிச்சவீடுகளின் ஒளியினால் கவரப்பட்டு திசைமாறி விடுகின்றன. (மின் விளக்குகளும் குழப்பத்தை ஏற்படுத்துவதுண்டு) ஆயினும், முதல்முதலாக குடிபெயரும் குஞ்சுகள் எங்கனம் அடையாளங்களைக் கண்டு தெரிந்துகொள்ளுகின்றன? பதில் இயற்கையன்னைக்குத்தான் தெரியும். பூமியின் காந்தத்தளத்தைப் (MAGNETIC FIELD) பயன்படுத்தி பறவைகள் குடிபெயருகின்றன என்பதும் ஒரு விளக்கம். ஆயினும் முழுமையான விளக்கம் இப்பொழுதும் ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கின்றது. (ஓடிப்பின் மீண்ட பொழுது அடையாளங்கள் அழிந்ததன் காரணமாக விளைவு எங்கே, வீடு எங்கே என்று அலைந்தவர்கள் பலர். இதனுடன் ஒப்பிட்டு பறவைகளின் சமார்த்தியத்தை எண்ணிப் பாருங்கள்).

### அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

குடிபெயரும்போது பெரும்பாலான பறவையினங்கள் இரண்டாயிரம் அடிக்குக் குறைவான உயரங்களிலேயே பறக்கும். ஆயினும் சில இனப் பறவைகள் இருபதாயிரம் அடிகளுக்கு மேலுள்ள உயரங்களில் பறப்பதுண்டு (இதனாற்றான் குடிபெயரும் பறவைகளினால் விமானங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு). குடிபெயரும்போது சில பறவையினங்கள் ஒரு சில நூறு மயில்களே கடப்பதுண்டு. உதாரணமாக ஐரோப்பாவிலிருந்து வடஆபிரிக்காவுக்கு அல்லது மத்தியகிழக்கு நாடுகளுக்கு சில இனங்கள் சில ஆயிரம் மைல்களையும், சிலவோ பல ஆயிரம் மைல்களையும் கடப்பதுண்டு. குடிபெயர்தலிலே சகல பறவைகளையும்விஞ்சியது அல்பற்றோஸ் (ALBATROS) என்ற கடற்பறவை. இது வடதுருவத்திலிருந்து தென் துருவத்திற்கும், பின் வட துருவத்திற்கும் குடிபெயரும் குடிபெயர்தல் ஒவ்வொரு ஆண்டும் நிகழும், அதனால் பறவைகள் கூட்டமாக முதலில் ஒரு திசையிலும் பின் எதிர்த்திசையிலும் செல்வதைக் காணலாம், அதாவது பிறந்தகத்திலிருந்து வெளிநோக்கிய பயணத்தையும், பின் பிறந்தகத்தை நோக்கிய பயணத்தையும் காணலாம். பறவைகள் குடிபெயரும் காலத்தையறிந்து அவற்றைக் கண்டு ரசிப்பதற்கென்று பறவை பார்ப்பவர்களும் (BIRD WATCHERS), அவற்றை ருசிப்பதற்கென்று பிறிதொரு கூட்டமும் கூடுவதையும் காணலாம், ஒரு கூட்டம் கமரா கொண்டு சுட, மற்றது துவக்குக்கொண்டு சுடும். குடிபெயரும் காலங்களில் நிறைய பறவைகளை அவதானிக்க முடியும், நிறையப் பறவைகளைச் சுட்டுச் சட்டிக்கும் கொண்டுபோகலாம். இத்தகைய மனிதகைங்கரியத்தினால் பல இனப் பறவைகள் வெகுவாக்க குறைந்துவிட்டன, சில பறவையினங்கள் அழிந்துவிட்டன. உதாரணமாக அமெரிக்காவில் பிரயாணிப்புறா (PASSENGER PIGEON) என்ற புறாவும் (புரியாணிப் புறாவாகப் போய்விட்டது போலும்) எஸ்கிமோ கேர்லியூ (ESKIMO CURLEW) என்ற சிறகையினப் பறவையும்.

மழைகாலத்தில் பல பறவையினங்கள் யாழ். குடாநாட்டிற்கும் வருவதுண்டு, இவற்றுள் சில இனவாத்துக்களும், சிறகைகளும் சைபீரியாவிலிருந்து வருகின்றன, செங்கால் நாரை(FLAMINGO),கூழைக்கடா (PELICAN) போன்றவைதென்னிலங்கையிலிருந்து வருகின்றன. குயில், புலுனி, சுவர்க்கத்து ஈபிடிப்பான்(PARADISE FLY CATCHER), சேவல் குருவி(HOOPOE) போன்றவை வசந்தகாலத்தில் இந்தியாவிலிருந்து வரும். மாரிகாலத்தில் தொண்டமனாறு, உப்பாறு ஏரிகள் பறவைகளின் சொர்க்கமாக அமைவதுண்டு.

*



நரைத்தலை அல்பற்றோஸ் (GREY HEADED ALBATROS) ஆணும் பெண்ணும், காதலாடலில் ஈடுபட்டுள்ளன.



சிறகைகள், பறக்கும்போது அவற்றின் தோற்றம். விசிறிவால் சிறகை (FANTAIL SNIPE), ஊசிவாற் சிறகை(PINTAIL SNIPE) கோட்டான் (WHIMBREL), கிழக்கத்தைய கேர்லியூ (EASTERN CURLEW ).



ஐரோப்பிய சேவல்குருவி (EUROPEAN HOOPOE) யாழ் குடாநாட்டிற்கு வருகைதரும் இந்தியசேவற் குருவியும் இதேபோன்றதுதான்.



பறவைகள் குடிபெயருமுன் கூட்டம் சேருகின்றன.



டும்பம். குஞ்சுகள் விரைவாக வளர்ந்து, இலையுதிர் காலத்தில் பெற்றோரைத் ரும். குடிபெயரமாட்டாத நேஞ்சான்கள் மரிக்க வேண்டியதுதான். இதுவும் கைத்தேர்வே; தக்கன தான் பிழைக்கமுடியும்.



கம்பித் தொடரில் பறவைத்தொடர், குடிபெயர 'ரெடி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந். | வியா. சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| செவ். கே | | | |
| | சூ | புத. | வெ |

# இந்த வார இராசி பலன்

**20 - 11 - 1999 இலிருந்து 26 - 11 - 1999 வரை**

*மாற்றம்: ரேவதி நட்ஷத்திரம், மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.*

*அரசியலில் மாற்றங்கள், யுத்த நிலை மாறிமாறி முழக்கங்கள், அயல் நாட்டின் ஆலோசனை, உலகநாடுகளின் கரிசனை என்பன ஏற்பட இடமுண்டு. தொழிலாளர்கள், மாணவர்களின் உரிமைக்குரல்கள் விட்டு விட்டுக் கேட்கும். தெற்கில் புதிய பிரச்சினைகள், மக்களின் இடம்பெயர்வு, மனக்குமுறல்கள் ஏற்படலாம்.*

*இந்தியாவின் வடக்கில் புதிய நெருக்கடிகள் தோன்றும். தெற்கில் தூதுவர்களின் பேச்சுகள் மறைமுகத்தில் நடக்கும். மேற்குநாடுகளில் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு. பொருளாதார நடவடிக்கைகள், மத்தியகிழக்கில் புதியயுத்த பயம், கிழக்குநாடுகளுக்கு உதவிகள்செய்தல், புதிய பிச்சினைகளை உருவாக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் உத்திகளை கையாளுதல் என்பன நடைபெறும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

என்னதான் இருந்தாலும் நிலை உயரும்பொழுது பணிவு இருப்பவர்கள் நிச்சயம் நன்மை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் அன்பாக இருந்து செயற்பட வேண்டும். எதையும் எதிர்கொள்ளும் நீங்கள் காணி, பூமி விஷயத்தில் கவனமாக இருங்கள். எதிர்ப்பாலாருடன் பிரச்சினைப்படாதீர்கள். பெற்றோர் வழியிலிருந்து உதவிகளும் ஆதரவும் கிடைக்கும். போராடி, அலைச்சலபட்டு காரிய அனுகூலம் பெறுவீர்கள். மனதில் என்ன யோசனை, சோகம்? எதையும் சமாளித்துக்கொள்ளுங்கள். உடல் களைப்பு, விஷபீடை, காயங்கள், மூட்டு நெஞ்சுநோ என்பன வரலாம். பத்திரிகைத்துறை, மின்சாரத்துறை, மருந்து, வியாபாரத்துறையினர்களுக்கு மாற்றங்களும் சிலருக்கு இலாபங்களும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## இடபம்

சிரித்தும், சி[illegible]ந்தும் வாழ்வதில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை? தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் சூடாக இருப்பீர்கள். மேலதிகாரிகளுடன் இசைந்துபோங்கள். யார் குற்றினாலும் காரியம் நடக்கவேண்டும் அல்லவா? இலாபங்கள் அதிகரிக்கும். சூரியபகவானின் பார்வை பல காரியானுகூலங்களைக் கொடுக்கக்கூடும். நெஞ்செரிவு, விஷபீடை, மனப்பயம், பிரயாணங்களில் தவறிவிழல், காயப்படல், பலவீனம் என்பன ஏற்பட இடமுண்டு. குடும்பத்தில் ஆஸ்பத்திரிச் செலவுகள் அதிகரிக்கும். தொல்லைகள் அதிகரித்தாலும் பணமும், புகழும் சிலருக்குத் தேடிவரும். வைத்தியம், ரீவி, செய்தி, நிர்வாகத்துறை போன்றவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும். உறுதியான நடவடிக்கைகளால் குடும்பத்தினருக்கு நன்மைகள் ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## மிதுனம்

நாட்டின் பணத்தை - ஊராரின் காசை - செலவழித்து எத்தனை பேர் சாப்பிடுகிறார்கள். இவர்கள் மற்றவர்களை அதட்டி, அதட்டி அதிகாரம் விடுவதைக்கண்டு பொருமியபடி இருப்பீர்கள். எதற்கும் தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருங்கள். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படுமோ என்ற பயம் ஏற்பட இடமுண்டு. குடும்பத்தில் விருந்துகள் இடம்பெறலாம். ஆயினும் சிலருக்கு விருந்தில் கலகமும், கலக்கமும் கொடுக்க இடமுண்டு. எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படாதீர்கள். பொருளால் யோசனை, அலைச்சல் வாய்வுத்தொல்லை அடிக்கடி பதற்றம் ஏற்பட இடமஉண்டு. குருத்துறை, பத்திரிகைத்துறை, கடற்றொழில், பிரயாணத்துறை தொடர்பானவர்களுக்கு முன்னேற்றம், பொருள் வரவு அதிகரிக்கும். இடமாற்றம் அடிக்கடி ஏற்படும். பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கடகம்

பாசமில்லாதவர் வாழ்வில் நேசமென்ன இருக்கிறது? தொழில் ஸ்தானத்தில் புதிய ஒளிவீசும். சில நரகாசூரர்களைக்கண்டு அவர்களிடம் இருந்து விலகி உங்கள் தொழில் பீடத்தில் ஒளிவீசச் செய்யுங்கள். எல்லாம் நன்மைக்கேயாகும். குடும்பப் பாசம் உங்களை திசைமாறச் செய்யும். எதிர்பார்க்காத நன்மைகள் வீடு தேடி வரும். எதிர்ப்பாலாருடன் வாக்குக்கலகம் ஏற்படலாம். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். சளி,

## சோதிட சஞ்சீவி

வாய்வுத்தொல்லை, வயிற்றுநோ, கைகால் உளைவு, சலவருத்தம் என்பன கொடுக்கும். அரசியலால் இலாபம் அடைவீர்கள். கடல், சட்டம், பத்திரிகை, கோயில்வேலை, குருத்துறை போன்றவற்றில் தொடர்புடையவர்களுக்கு லாபங்கள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்து நடவுங்கள். அல்லது எதிர்பாராத இழப்புக்களைச் சந்திப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## சிங்கம்

அக்கினி சாட்சியாகக் கலியாணமா? அல்லது வீடியோ சாட்சியாகத் திருமணமா? எனச் சிந்திக்கிறீர்களா? எல்லாம் சில்லறையால் வந்த நிலை. - நாட்டில் சில்லறை தட்டுப்பாடாகி விட்டது போலும். தொழில் ஸ்தானத்தில் கௌரவப்பிரச்சினை தலைதூக்கும். பொருளால் வேதனை வரச்செய்யும். எதற்கும் நியாயம் எனக் கண்டால் விடமாட்டீர்களே. தர்மம் உங்களுக்கு துணைவந்தபடி இருக்கும். தெய்வவழிபாட்டைத் தொடரவும். நெஞ்சுநோ வாய்வுத்தொல்லை, கைகால்விறைப்பு, அடிவயிற்றுநோ என்பன வரலாம். தொழில்நுட்பத்துறை,

# மகாதேவா ஜோதிடம்

வியாபாரத்துறை, கமிஷன்வேலைகள் குருத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் அதிக நன்மை அடைவார்கள். தூரதேசப்பிரயாணங்களைத் தவிர்த்து நடவுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கன்னி

வெறுத்தவர்கள், கோள் சொன்னவர்களை மன்னித்து உதவிகள் செய்து விடுங்கள். எல்லாம் சிலரின் அறியாமையால் சிலர் பலரை வருத்துகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் கலகலகப்பும், கண்டிப்பும் மாறிமாறி இருக்கும். போட்டி என வரும். சமாளித்துக் கொள்ளுங்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நாரிப்பிடிப்பு, குடல் வருத்தங்கள், வாய்வுத்தொல்லைகள், விறைப்பு, தோல் வருத்தம் என வருத்தலாம். நிர்வாகம், வியாபாரம், விவசாய வேலைகள் என்பவற்றில் தொடர்பானவர்கள் தொழில் நிலையில் மாற்றங்களும் முன்னேற்றங்களும் அடைவார்கள். பொருள் விஷயத்தில் அவதானமாக இருக்கவும். அல்லது இழப்புக்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## துலாம்

உண்மைகள் சரியானவைகளா? அல்லது சரியான செயல்களால் பல உண்மைகள் வெளிப்படுகின்றனவா? தொழில் ஸ்தானத்தில் பல உண்மைகள் வெளிவரும். ஒருசிலர் நல்லவர்களை நசுக்க எடுக்கும் முயற்சியை அறிந்து தடுக்க முற்படுவீர்கள். சத்தியம்தான் இறுதியில் வெற்றிபெறும். உங்கள் முயற்சிகளும் வெற்றிபெறும். புத்திநாதன் புதன் உங்கள் இராசியில் இருப்பதனால் பட்டென பல உண்மைகள் தெரிந்து நிச்சயம் செயற்படுவீர்கள். வாய்வுத்தொல்லை, நெஞ்செரிப்பு, கைகால்விறைப்பு என்பன கொடுக்கும். வியாபாரத்துறை, நிர்வாகத்துறை, புடைவைத்துறை, நகைவேலை செய்பவர்களுக்கு நன்மைகள் ஏற்படச்செய்யும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## விருச்சிகம்

உங்கள் உறுதியை எவரும் சோதித்துவிடமுடியாது. உலகம் ஒரு விதம், நீங்கள் ஒருவிதம். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்பட்டு அடங்கும். அது எப்படி இருந்தாலும் தர்மப்படி நடந்து செயற்படுங்கள். நெஞ்சுநோ, வாய்வுப்பீடை, வயிற்றுநோ என வரும். அடிக்கடி ஓய்வு முக்கியமாகும். கோயில் வேலைகள், நிர்வாகம், விவசாயத்துறை, வியாபாரத்துறை, தொழில் நுட்பத்துறை போன்றதுறையினர் நன்மை அடைவார்கள். சில சம்பவங்களை நம்பவும் முடியாது. சிலஉண்மைகளைச் சொல்லவும்முடியாது. காலம் கடந்து உண்மைகள் வெளிப்படலாம். அதன் பின் யாருக்கு என்ன லாபம்? இறை பக்தியால் ஆழ்ந்து போவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## தனுசு

பட்டினி கிடந்தாலும் உங்கள் படபடப்பு மட்டும் எக்காலத்திலும் போய் விடாது. உண்மைகளுக்காக போராடியபடி இருப்பீர்கள். இருப்பினும் தொழில்ஸ்தானத்தில் தெரிந்த உண்மைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி நீங்கள் பலவீனப்பட்டபடி இருப்பீர்கள். வாகனம், வீடு, தளபாடங்கள் எனப் பொருள் செலவு அதிகரித்தபடி இருக்கும். நாரிநோ, வயிற்றுநோ, கைகால்நோ, வாய்வுத்தொல்லை என்பன வருத்தும். குருத்துறை, சட்டத்துறை, நகைத்துறை, விவசாயத்துறையினர் நன்மையும் மாற்றங்களும் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## மகரம்

மறைமுகத்தில் செய்தவை வெளிப்படும்பொழுது வரும் மனப்போராட்டம் உங்களை மிகவும் பாதிக்கச் செய்யும். தொழில்ஸ்தானத்தில் வேண்டா வெறுப்புக்கள் ஏற்படச் செய்யும். இடமாற்றம், பழைய பாக்கிகள் வசூல், களவுபோதல் சகோதரங்களுடன் மனக் கருத்து ஏற்படல் என்பன ஏற்படும். முழங்கால்பிடிப்பு, சமியாக்குணம், கைகால் தாக்கம், வயிற்று வருத்தம், நரம்புச்சோர்வு என்பன ஏற்படச் செய்யும். தலைவலி விட்டு விட்டுக் கொடுக்கும். விரும்பியதை மற்றவர்கள் மூலம் செயற்படுத்த முனைவீர்கள். சமயவேலைகள், இரும்பு, மருந்து வேலைகள், எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை என்பனவற்றில் தொடர்பானவர்கள் அதிகஇலாபங்கள் அடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்:- திங்கள் மத்தியானம், வியாழன் மத்தியானம்.

## கும்பம்

யுத்த காலத்தில் தட்டுப்பாடுகள் வருவது சகஜம்தானே. அதற்காக பொருள்களை அளவுக்கதிகமாக வாங்கிவைக்கமுடியுமா? தொழில் ஸ்தானத்தில் வீண்பழி சுமத்துவார்கள். 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை' ஏற்படும். இனஜன விரோதம் சகஜமாகும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். பொருள்கள் கைதவறிப்போக இடமுண்டு. கைகால்வலி, நெஞ்சுப் படபடப்பு, நாரிநோ, மறதி, அலைச்சல், உடல்களைப்பு என்பன ஏற்படும். வாய்வுப்பிடிப்பு சிலருக்கு வரலாம். விஷபீடைகள் கொடுக்கலாம். அரசியல் துறை, குருத்துறை, வியாபாரத் துறை, தொழில் நுட்பவேலைகள் என்பனவற்றில் தொடர்பானவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள் மத்தியானம.*

## மீனம்

உலகமே அழிந்தாலும் நான் மட்டும் அசையமாட்டேன் என அடிக்கடி மார்புதட்டியபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள், புதியதிட்டங்கள் பலஏற்பட்டு நன்மைகள் கொடுக்கும். மேலதிகாரிகள் அடிக்கடி உதவிசெய்வார்கள். கோயில், அல்லது அழகிய இயற்கைவளம் நிறைந்த இடங்களை நாடுவீர்கள். பூந்தோட்டத்தை புதுப்பிப்பீர்கள். நகைச்சுவையான பேச்சு, குடும்பத்தில் அடிக்கடி கலகலப்பு, [illegible] சிலருக்கு பொருள்இழப்பு என்பன கொடுக்கும் காலமாகும். நரம்புச்சோர்வு, மறதி, வாத, வாய்வுத்தொல்லை பணப்பிரச்சினையால் யோசனை என்பன அடிக்கடி கொடுக்கும். அடிக்கடி சூழலில் முறுகல்நிலை ஏற்படும். உறவினர் நண்பர்களுக்காக - அவர்களின் நன்மைக்காக - ஓடி, ஓடி உதவி செய்வீர்கள். ஆசிரியத்துறை, வியாபாரத் துறை, கடல்துறை, விவசாயத்துறையினர் அதிக இலாபங்களை அடைவார்கள். பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள் மத்தியானம், வியாழன் மத்தியானம்.*

# சான்றோர் நாடும் செல்வர்

### தேன்கூடு

வாழ்வில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் மேலான இடத்தினை வகிக்கின்றன. பொருளும் இன்பமும் அறத்தின்அடிப்படையில் வளரவேண்டும். பொருளை எடுத்துக்கொள்வோம்:- தமிழ் மாந்தர் கல்வி, செல்வம் என்னும் இரண்டினையும் பொருள் என்றே கொண்டனர்.

கல்வி என்பது கற்றற்குரிய நூல்களைக் கற்றலும் கற்றபடி ஒழுகுதலுமாகும். வள்ளுவப்பெருந்தகையார் கேள்வியினையும் கேடற்ற விழுச் செல்வம் என்பர். கல்விச் செல்வம் தாயத்தார், கள்வர், வலியோர், ஆட்சியாளர் என்றின்ன பேர்களினால் அபகரிக்கப்படமாட்டாது. பொருள் செல்வம், பொன்னும் பொருளும் மற்றும் வளங்களுமாம். பொருள் செல்வம் இன்றி தனிமனிதனோ அரசுகளோ மேம்படுதற்கு வழியில்லை. மேம்படவும் முடியாது. பொருள் செல்வத்தை சம்பாதிக்கும் போதும் அதைக்காக்கும் போதும் பாதுகாப்புக் குறைந்த போதும் துன்பம் உண்டாகும். ஏன்? அஃது அழிவடைந்தாலும் கூட துன்பம் எய்தும்.

பொருள் செல்வம்இன்றி வாழ்தல் இயலாது; முற்றும் துறந்த முனிவர்களும் கூடப் பொருள் செல்வத்தை நாடுகின்றனரே! 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்பது பெரியோர் வாய்மொழியாகும். 'செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும் நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்' என்று மணிவாசகப் பெருந்தகையர் செல்வத்தைத் துன்பம் என்கிறார்.

செல்வத்துப் பயன் ஈகையாகும்; ஈதல் இசைபட வாழ்தல் இரண்டுமே மக்கட் பிறப்பெடுத்தவர் செயற்பால செயலாம். 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதும் நாம் அறிந்ததே. நல்ல உடைகளை உடுக்காமல், நல்ல உணவுகளை உண்ணாமலுமே தமது உடலைவருத்தி நல்ல தருமங்களைச் செய்யாமலும் ஏழைகளுக்குக் கொடாமலும் மேலும் மேலும் பொருள் ஈட்டுவோர் நிச்சயமாய்த் தாம் தேடிய செல்வத்தை இழந்து விடுவர். தேனீக்கள் தேனை வைத்து இழந்து விடுவதைக் காண்கிறோம் அல்லவா? வேறு யாரும் தானே அனுபவிக்கின்றனர்.

இனி உண்ணும் பொருளும் உணவு வெரு மெய்ச்சுகமும் தன தானியங்களை பிறருக்குக் கொடுத்து மகிழ்ச்சி அடையும் திண்ணிய நிலையையும் ஒருவன் பெற்றுக் கொள்ள பெருமாதவம் வேண்டுமாம்.

சான்றோராயினார், எல்லாச் செல்வரிடத்தும் பொருள் வேண்டிச் செல்வதில்லை. 'பெட்பின்றி ஈதலை யாம் வேண்டேம்' என்று புகழும் பெரியோர்களும் உளர். தக்காரிடமே செல்வர் தகவிலரிடம் செல்லார்.

புறப்பாட்டில் இருந்து ஒரு செய்தி; கொங்கண நாடு என்று ஒரு பிரதேசம் உண்டு. அங்கு கொங்கணங்கிழான் என்னும் பெரியோன் ஒருவன் இருந்தான். அவன் பெருஞ் செல்வம் படைத்தவன் அல்லன். பிறர்க்கும் கொடுத்து அவர் மகிழும்போது தானும் மகிழும் திண்மையாளன். ஒரு சமயம் மோசிகீரனார் என்னும் பெரும் புலவர் அவனிடம் பரிசில் வேண்டி வந்தார். கொங்கணங்கிழான் எண்ணுகின்றான் 'இவரோ பெரும் பேராளர் இவருடைய தகுதிக்குத் தக இவருக்கு கொடுப்பதற்கு பெருவளம் இலனே' என்று கவன்றான். அதனை உணர்ந்த மோசி கீரனார் கூறுகிறார்:-

### சிந்திப்போம் செயற்படுவோம்

''மகிப, திரை அலைக்கும் கடலினது கரைக்கண் சமீபித்துச் செல்லின் அங்கு உள்ளார் யாரிடமாவது உண்ணும் நீர் எங்கு கிடைக்கும் என்று பெரியோர் வினவுவர். அதுபோல அரசர் பக்கத்திருப்பவும் குற்றந்தீர்த பெரியோரையே தேடி வந்தேன். யான் பெற்றது சிறிதளவாயினும் யான் இகழ மாட்டேன். நின்னையே நினைந்து வந்தேன்'' என்று கூறினார்.

இனி நாங்கள் நாலடியாருக்கு வருவோம். அங்கு நன்றியில் செல்வம் என்னும் ஒரு பகுதி வருகின்றது. நன்றியில் செல்வம் என்றால் என்ன? சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுத்தல் இல்லாததும் கேடுதருவதுமான செல்வம், அதனது இயல்பு அங்கு கூறப்படுகிறது.

கடலில் நிறைந்த நீர் உதவாது விடுகின்றது. காரணம் உவர்ப்பாயிருத்தலாகும். அதுபோலக் கீழ் மக்கள் செல்வம் பெரிதாயினும் உதவாமைக்கு காரணம் உலோபத்தனமாகும். உலோபிகளிடம் பெரியோர் செல்லார்

இனி, பாடலை நோக்குவோம்

மல்கு திரைய கடற்கோட்(டு) இருப்பினும்
வல்லூற்(று) உவர்இல் கிணற்றின்கண் சென்றுண்பார்
செல்வம் பெரிதுடையர் ஆயினும் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

ஆம்! மிகுந்த அலைகளையுடைய சமுத்திரத்தின் கரையில் தாம் இருந்தாலும் மனிதர்கள் வலிமையான நீர்ச் சுரப்பையுடைய உப்புத் தன்மையில்லாத கிணற்றினிடத்திலே சென்று நீரைக்குடிப்பர். அதுபோல அயலிலுள்ள கீழோர் செல்வம் பெரிது உடையராயினும் பெரியோர் அவரை அணுகாமல் தொலைதூரம் சென்று நன்னீரை உண்ணவே விளைவர்.

நாமும் அயலில் இருக்கின்றாரே என்று துச்சனை அணுகி உதவிபெறாமல், உதவி சிறிதளவாயினும் தொலைவில் உள்ள சர்ச்சரிடத்தே உதவி பெறுதல் சிறப்புடைத்தாம்.

(தொடரும்) - *சிகண்டியார்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எழுத்துக்கள்

இப்போதிருக்கும்...
எந்தக் கண்ணும்
காணாத காலத்திலேயே
நாங்கள்...
கர்ப்பமாகிவிட்டோம்!
ஆனாலும்... இன்னும்
பிறந்துகொண்டேதான்
இருக்கிறோம்!

எங்களுக்கு;
உயிரும் உண்டு – ஏன்
மெய்யும் உண்டே!
உயிர், மெய் வந்தால் தானே
உண்மையான நிறைவு!
அதுவும் உண்டு!

இலக்கியம் தான் எங்கள்
இலக்குகள்!
அங்கே தான் – நாம்
எழுகின்றோம்
ஏன்? சில வேளைகளில்
அதற்குள்ளேயே
அழுகின்றோம்!
நாங்கள்...
எழுவதும் விழுவதும் – அந்த
எழுத்தாளனைப் பொறுத்தது!
காகிதக் கப்பல் கொண்டு
எங்களை...
கரை சேர்ப்பவன்
அவனல்லவா!?
நாங்கள் இன்னும்
காலமாகாதிருப்பதும் கூட
அவனால் தான்!

கவிதை...
எம் தரணித் தாஜ்மகால்!
பட்ட பொழுதுக்கு;
வட்ட நிலா எப்படியோ
அப்படித்தான் – எமக்கு
கவிதை!

மரபுக் கவிதையில்
எங்கள்...
இதய அடிப்புக் கேட்கும் – அதில்
கற்ற வருக்குத்தான்
எங்கள்...
கருத்துக்கள் தெரியும்
மற்றவருக்கு – வெறும்
'லப்' டப் மட்டுமே!
குழந்தையின்
கொஞ்சலைப் போல
ஒப்பனை இல்லாத
புன்னகையை – நாங்கள்
புதுக்கவிதையில் தான்
புரிகின்றோம்!

அப்பட்டமான
ஆனந்தத்தையும் – ஏன்
புழுக்கத்தையும் கூட
அதிலே தான் பூட்டுவோம்!
எப்படி ஆயினும்
நாங்கள்... எழுத்துக்கள்! – ஆமாம்
இறந்த காலத்தை
எதிர்காலத்திற்கு காவிச் செல்லும்
எறும்புகள் நாங்கள்!

- நா. மயூரன் -

## ஆசைதான்!

உண்மை பேச ஆசைதான்
உயர்வாய் வாழ ஆசைதான்

பஞ்சம் தீர்க்க ஆசைதான்
பண்பாய் வாழ ஆசைதான்

பதவி ஏற்க ஆசைதான்
பணிவாய் நடக்க ஆசைதான்

செவ்வாய் செல்ல ஆசைதான்
செலவின்றிச்செல்ல ஆசைதான்

கவிதை எழுத ஆசைதான்
காதல் கொள்ள ஆசைதான்

இன்னும் எழுத ஆசைதான்இது
உதயனில் வர ஆசைதான்.

இ.யாதன்

## கவிதை முற்றம்

## வருகிறதாம்..... வருட மழை!

விரைந்தொருக்கால் மீண்டும் 'விசர்' மழை எம் நாடெங்கும்
வரப்போவதாக
வானலையில் அறிவிப்பு.
"இந்த முறை மழை வருங்கால்...
எங்கும் குளிர் பொங்கும்.
வெந்த தரையினிலே வெள்ளம் சுடும்... பங்கம்.
வெண்தாமரை தாங்கும். வெறும் வயிறை வாட்டும்
துன்பப் பசியகலும்.
துடக்ககலும்.
நோயகலும்.
காயங்கள், கண்ணீரைக் கரைத்திந்த மழைபோகும்."
என்று... மழையை
வரவேற்போர் பாடுகிறார்.

மீண்டும் ஒருக்கா... விரைந்து, மழை... நாடெங்கும்
தோன்றுதற்கு அறிகுறிகள்
துலங்கத் தொடங்கிற்று!

மழையினிலே மாற்றமில்லே...
மழையென்றால் மழைதானே...
"போனமுறை" மழைநினைவில் என்புத்தி நனைகிறது...

போனமுறை மழையும் புதுமையாய்த்தான் தொடங்கியது.
ஆமாம்... 'பளீர்' மின்னல்
கண்ணின் விருந்தாச்சு.
நாதம் பிரளாத 'இடி' நமையும் ஆட்டியது.
சாமரையை வீசுவதாய்த்
தூவானம் வருடுகையில்
ஈரநிலம் பூவாச்சு; வாசம் பரப்பியது.

ஆனால் மழைதொடர...
ஆரம்ப இதம், பதங்கள் –
போய்ச்சின்னஞ் சிறுதூறல் புயல்வடிவம் பூண்டது; ஆம்
தொட்டணைத்த துளி பின்போ சடசடத்துக் கொட்டிற்றெம்
வேர்பெயர...
வெள்ளம் விறுவிறென்று பரவி நம்மூர்
நிலத்தைச் சிறைப்பிடித்து
நிம்மதியில் நெருப்புவைத்து
வயல்களினைப் புசித்து, உயிர்ப்பிருந்த புற்றுகளைக்
கரைத்து உண்டு,
குளங்களிலே கடல் செய்து, 'நாம் நடுங்கிக்
கிடப்புவே வாழ்வாய்' க்
கீழ்நிலையை அடையவைத்துப்
போனமுறை...
மழைபொய்த்துப் பேய்க்காட்டிப் போயிற்று.

இம்முறையும் மழைவருதற் கறிகுறியாய் அதோ... முகில்கள்
வந்து "வரந்தருவோம்"
என்றறெம்முன் காத்துள்ளன.
மெல்லக் குளிர்காற்று மேனியுடன் கைகுலுக்கி
"நல்ல சுகமா" என்று நலங்கேட்டும் போகிறது.
உயரப் பறந்திருந்த வெண்பறவை
நம்தலைமேல்
சொரிகிறது பூவை.
சந்திரனைச் சுற்றிவர
ஒளிவட்டந் தெரிகிறது. ஓரிரண்டு எறும்பணிகள்
இருப்புக்களை காக்க இளைத்துத் திரிந்துளன.
அந்தோ மழைக்குருவி...
மழையின் வருகை பற்றிச்
சிந்தியற்றிப் பாடித் தெருத்தெருவாய்ப் பரப்புகிறது!
இடைக்கிடை அயலில்
இடிமுழக்கம் கேட்கிறது.
திடீர் மின்னல் 'பிளாஷ்' அடித்தித் திசையைப் படமெடுத்து
"அட அழகைப் பார்" என்றுங் கிளுகிளுப்பு மூட்டுகிறது!

இம்முறையும் மழைவருதற் கறிகுறியாய்க் "கருமுகில்கள்"
வந்து... "வரந்தருவோம்"
என்றெம்முன் தவமிருக்கு!

வருகிறதாம் மழை் எங்கள் வாசலுக்கு அணிவகுத்து
வருகிறதாம் மழை
என்ன வரவேற்க நாம் தயாரா?

- த.ஜெயசீலன் -

## சீர் பெறவேண்டும்

வாழ்வினில் வசந்தம் வந்திட வேண்டும்.
வையகம் போற்ற வந்திட வேண்டும்.
இல்லறம் செழித்து ஓங்கிட வேண்டும்.
இனிமையாய் என்றும் இருந்திட வேண்டும்.

துன்பங்கள் இங்கே தூள்பட வேண்டும்.
தூய்மையாய் யாவரும் வாழ்ந்திட வேண்டும்.
தவறினை யுணர்ந்து திருந்திட வேண்டும்.
தாயகம் தன்னை நினைந்திட வேண்டும்.

நேர்வழி யதனில் சென்றிட வேண்டும்.
நேர்மையாய் இங்கே உழைத்திடல் வேண்டும்.
நாதிக ளற்றவர்க் குதவிட வேண்டும்.
நலமுடன் ஒன்றாய் இருந்திட வேண்டும்.

- பொலிகையூர் சிந்துதாசன் -

## தாய்மொழி - ஓர் சுகம்!

ஓலைக் குடிசையிலே ஒழுக்கிற் கிடந்தாலும்
வாழ வழியின்றி வறுமையில் புரண்டாலும்
பாழும் வயிறிங்கு பசியிற் துடித்தாலும்
நாளும் நந்தமிழின் நலம்நாடி நிற்பதுவே
நல்லதோர் தனிச் சுகமே!

'வாடா தடிமாடு வழிதெருவில் வாய்பார்த்து
வம்பளந்து திரிகின்ற தெருப்பொறுக்கி நாயேநீ
திருந்தி வாழ்கின்ற தொருநாளும் வாராதோ?' – என
வருந்தி என்தந்தை தாய்மொழியில் திட்டுவதும்
திகட்டாத ஓர் சுகமே!

வண்ண மயிலொருத்தி வாடாத 'முல்லைமொட்டு
சின்ன இடையினொடு சித்திரமாய் வருகையிலே
மின்னல் கண்வெட்டில் சித்தம் பறிகொடுத்து,
கன்னல் தமிழெடுத்து காதல்மொழி பேசுவதும்
கணக்கில்லா ஓர் சுகமே!

கப்பல்ஏறிக் கடல்பலவும் கடந்தாலும்
அப்பால் ஆங்கிலத்தை அழகாய் கற்றாலும்
தாய்ப்பால் ஊட்டியவள், 'தம்பி நீசுகமா?'
தொலைபேசி அழைப்பினிலும் சொந்த மொழியானால்
சொல்லொணா ஓர் சுகமே!

வாடி வதங்கி வாழ்வு முடிகையிலும்
நாடி நம்பரனை நற்றமிழால் நயந்தேத்தி
பாடிப் பண்ணோடு தெவிட்டாத தேவாரம்
தேன்தமிழ் வாசகமும், ஓதுகையில் உயிர்பிரியின்
உலகிதிலே ஓர் சுகமே!

- உமா செல்லத்துரை-

## நாளையும் மரபு தொடரும்

நீண்ட நெடு வரிசையில்
கால் கடுக்க நிற்கின்றேன்
ஒரே ஒரு றாத்தல்
பாண் வாங்குவதற்கு.

காத்திருந்த அலுப்பினால்
பின்னே திரும்பிப் பார்க்கிறேன்
புதிதாய் ஒரு பூ
என் பின்னே
சுடு புழுதியிற் போட்ட
செந்தாமரை மலராய்
இடப்பெயர்வின் கொடுமையை
படமெழுதிக் காட்டியது
அந்தப் பிஞ்சு முகம்.
யார் பெற்ற பிள்ளை?
எத்தனை நாள் பட்டினி?
பொருளிழந்து இடம்பெயர்ந்த
போதும்
அருள் இழந்திடாத இதயத்தில்
நீர் கசிந்திட
சின்னவனை முன்னே விட்டுப்
பின்னால் நின்றேன் நான்.

முன்னே நின்று வாங்கியவர்
தெருவோரத்திலும் தெரிந்த மனிதர்
தாழ்வாரங்களிலும் தங்கியிருக்கும்
தம்முறவுகளுடன் சாடி வயிறுகழுவ
விரைகின்றார்.

வரிசையில் அந்தச்
சிறுவன் வாங்கினால்
அடுத்தது எனது முறை
அந்தோ,
அவனோடு பாண் முடிந்துவிட்டது.

'ஐந்நூறு றாத்தலும் சரி
இனி நாளைக்குத்தான்'
அனுதாபங் கலந்த குரலிற்
கூறினார் வெதுப்பகர்.
திறமையாய்ப் பரீட்சை எழுதியும்
ஒரு புள்ளியாற் தட்டுப்பட்ட
மாணவன் போல் திரும்பிவருகிறேன்.

மீண்டும் நாளை வருவேன்
நாளையும் எனக்குப் பாண்
இல்லாமற் போகலாம்.
என்றாலும் நான் மகிழ்வேன்
பிறவுயிர் பார்த்திருக்க
மருந்தும் உண்ணா
மரபுதித்தோர் நாம்.

- தி. உதயசூரியன் -
வன்னி.

## நீ தமிழ் நான் கவி

நீ விழி நான் இமை
ஒட்டிக்கொள்வேன்
நீ வானம் நான் நீலம்
பற்றிக்கொள்வேன்.
நீ புவி நான் ஈர்ப்பு
தொற்றிக்கொள்வேன்.
நீ விதி நான் வினை
தொடர்ந்துசெல்வேன்.
நீ கடல் நான் அலை
தவழ்ந்துசெல்வேன்.
நீ பகல் நான் ஒளி
பற்றிக்கொள்வேன்.
நீ பால் நான் வெண்மை
பரவிநிற்பேன்.
நீ உண்மை நான் "உதயன்"
எட்டிநில்லேன்.
நீ வேதம் நான் வேதியன்
ஓதிக்கொள்வேன்.
நீ தமிழ் நான் கவி
நீந்திச்செல்வேன்.
நீ மூச்சு நான் உயிர்
நீ இருக்கும்வரை தான்
நானிருப்பேன்.

- வதிரி வாசன் -

## காதலித்துப்பார்!

காதலித்துப்பார்!
நீளமான நிம்மதிகள் கூட
நிர்மூலமான மாதிரி
உணர்வு உன்னுள்
உனக்கே உணவாகும்.
காதலித்துப்பார்!

வருடக்கணக்கில் நீ
அறிந்திராத
வருடல்கள் உன்னை
வசப்படுத்தி வழிந்தோடும்.
காதலித்துப்பார்!

எழுது கோலுக்கும்
உனக்கும் நடந்த
இல்லறத்தில் பல
காகிதங்கள் கன்னி கழிந்திருக்கும்
காதலித்துப்பார்!

உன் நினைவுகளில்
கழிவுகள் என்று
ஒன்று கூட எஞ்சாது
காதலித்துப்பார்!

அவளை நினைக்கையில்
நரம்புகளும் நாணம் கொண்டு
தம்முள் உனை
நையப் புடைக்கும்
காதலித்துப்பார்!

உனது யோசனைகளுக்குக்
கட்டுப்பாடே இராது
கட்டில்கள் கதிரைகளாகும்
கதிரைகள் கட்டில்களாகும்
காதலித்துப்பார்!

உடலெங்கும்
உணர்ச்சிகள்
ஊர்வலம் போகும்
உனக்கான உறவில்
ஒன்று வரவாகும்
காதலித்துப்பார்!

- தெய்வீ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலங்கள் யார் கையில்...?

வாசலில் அரிசிமா பூக்கோலமாய் மலர்ந்திருந்தது. கூட்டிச் சாணமிட்டு நீர்தெளித்த தரை. புது விதமான ஒரு வாசனையோடு சின்ன வயதிலிருந்தே அந்த வாசனை அவனுக்கு ஞாபகமுள்ள ஒன்று போலத் தோன்றிற்று. அந்தக்காலம் குழப்படி மட்டுமே செயலாய் அவனும் அண்ணன்களும் அறிந்திருந்தகாலம். அந்த வாசனையைப்போல மனிதர்களும் எப்போதும் ஒரேமாதிரி இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

முன்னரெல்லாம் அவன் அண்ணன்களுடன் சண்டைகூடப் போட்டதுண்டு - அந்த வாசனை கோலத்தில் மலர்ந்திருக்கும் பூவினுடையதுதானென்று பிறகு யாராவது சொன்னார்களா? அல்லது அவனே அறிந்தானா என்று ஞாபகமில்லை. வாசனையின் உண்மையான காரணம் அவனுக்கு விளங்கியிருந்தது.

சிலவற்றை, இல்லை பலவற்றை, மிகப்பலவற்றை அவன் தானாகவே விளங்கிக்கொண்டிருக்கிறான். அல்லது யாரேனும் விளக்கம்சொன்னாலும் அவன் ஏற்றுக்கொண்டதுண்டு. இப்போதோவெனில் தன் விளக்கமும் மற்றவர்களின் செயலும் அடிக்கடி மாறுபட்டுக்கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறது. நேற்றிரவு அண்ணா சொன்னது கூட விளங்கிக்கொள்வதற்கல்ல, கேட்பதற்குக் கூடப் பிடிக்காததாயிருந்தது அவனுக்கு.

விழிகளை வெளியே திருப்பிய போது மீண்டும் கோலம் கண்களுள் காட்சியாயிற்று. கொஞ்சநேரத்திற்கு முன்னர்வரை அந்த இடம் வெற்றுத் தரையாய் இருந்தது. இப்போது காலகாலமாய் ஜீவனுள் ஊறியிருக்கும் தெய்வீகம் பற்றிய உணர்வைப் பார்த்த கணத்திலேயே எழுப்பவல்லதாயிருக்கிறது.

ஆனால்......ஆனால்.....முப்பத்தைந்து வருடங்களாக அண்ணாவைச் சுற்றியுள்ள சூழல், சமயத்தின் சாரங்கள் எல்லாமே தீபனின் கண்ணீர் சார்பாய் அவர் நெஞ்சில் இரக்கத்தின் ஒரு கீற்றையேனும் எழுப்பத் தவறிவிட்டனவே!

'அண்ணனால் எப்படி இது மாதிரி நடந்துகொள்ள் முடிகிறது.....' கசப்பான வினா. விடைதான் இதுவரை எதுவுமில்லை.

"என்ன புத்தகத்தையும் வைச்சுக் கொண்டுபடிக்கிறநேரத்தில கனவோ..?" அண்ணாவின்குரல் பதிலை எதிர்பாராததாய்த் தேய்ந்து மறைந்தது. சோபாவின் மேலால் விழிகளை நிமிர்த்திப் பார்த்தபோது அண்ணாவின் முகம் மறைந்து விட்டிருந்தது.

அவன் படிக்கத்தான் வேண்டும். இன்னும் சிலநாள்களில் பரீட்சை வந்து விடும். இறுதிப்பரீட்சை. அவன் நிறையப் படிக்கத்தான் வேண்டும்.

புத்தகத்தை, கொப்பியை விரித்தால் எழுத்துக்கள் கண்களுள் தெரியவேயில்லை. நேற்றைய, தீபனின் கண்ணீர் முகம்தான் சித்திரமிடுகிறது கண்களுள். அவன் கண்ணீரில் தன் முகம் கரைந்து விட்ட வேதனையாய் இருக்கிறது.

அவனால் செய்ய முடிந்தது எதுவுமில்லை என்பது தீபனுக்கும் தெரியும். 'வளர்ந்த ஆம்பிளை' என்பதை மறந்து அழுவதற்கு ஓரிடம் வேண்டும். அதற்காக மட்டும்தான் தீபன் அவனிடம் வந்திருந்தான்.

நிறைய நேரம் இருவரும் மௌனமாயிருந்தனர். கண்ணீர் உலர்ந்து போயிருந்தவேளைகளில் இடையிடையே தீபன் நினைத்து நினைத்துக் கோவப்படுத்துவதுபோல் சிலவார்த்தைகள் சொன்னான். அந்த வார்த்தைகள் இவனுக்கு எல்லா வார்த்தைகளையும் மறக்கடித்து விட்டாற்போலிருந்தது.

வழமை போலவே ஏதோகணக்கை வைத்து இருவரும் மண்டையை உடைத்துக் கொள்கிறார்கள் என அம்மா நினைத்திருக்கவேண்டும். பக்கத்து வீட்டு மாமி வந்தபோது "அங்கால இருந்து கதைப்பம், அவங்கள் ஏதோ படிக்கிறாங்கள்...." என்று சொன்னது அவர்களுக்குக் கேட்டது.

அவனுக்குத் தீபனின் முகத்தைப் பார்க்கமுடியாமலிருந்தது. வெள்ளைத் தாள்களில் வட்டம், கோடு, முக்கோணம் எல்லாமும் பலதடவைகள் போட்டாயிற்று. கடைசியில் கிறுக்கியஒற்றைகளைப் பார்க்கப்பிடிக்காமல் கசக்கி... பந்துபோல உருண்டையாக்கி...தீபன் நீர்த்துளிகள் கன்னங்களில் வழிந்தோடாதவாறு அடிக்கடி கண்ணீரைச் சுண்டி எறிந்துகொண்டிருந்தான். நாலைந்து கடதாசி உருண்டைகள் மேசைமீது பரவியிருந்தன.

அவனும் அண்ணாவிடம் பல தடவை கேட்டுவிட்டான். அவரும் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார்.

"நான்என்ன செய்யலாம் இதுக்கு...? முதல் வந்த லிஸ்டில தீபன்ர அக்



கான்ரை பெயரும் இருந்தது. அது தான் வந்து உங்களிட்ட சொன்னனான்..."

"அப்ப பிறகு ஏன் லெற்றர் வரேல்ல....?"

"அதுதானே சொல்லுறன்.... பிறகு அங்க இருந்த 'லிஸ்ட்' வேற. சில பெயர்கள் அதில புதிசாய் சேத்திருந்தது......."

"நீங்கள் முதல் பாத்தனீங்கள் தானே....?"

"ஓம்.....!"

"அப்ப நீங்கள் ஏன் கதைக்கக் கூடாது இந்த நியமனங்களில அநியாயம் நடந்திருக்கெண்டு....?"

"..............."

"ஏனண்ணா பேசாமல் இருக்கிறியள்?"

"நீ நினைக்கிற மாதிரி இல்லைத் தம்பி உலகம்......"

அண்ணா தொடர்ந்து ஏதோவெல்லாம் சொல்லிக்கொண்டுபோனார். அவனுக்கு எதுவும் விளங்கியதாய் நினைவில்லை ஒன்று மட்டும் தெரிந்தது. அம்மா சின்னவயதில் சொல்லித் தந்த நீதிக்கதைகள் - கேட்கும்போதெல்லாம் இவனுள் ஒரு புதிய மனிதனைக் கிளர்ந்தெழ வைத்துக்கொண்டிருந்த அப்பாவின் வார்த்தைகள் - இவனுக்குத் தோழர்களாய்த் தெளிவு தந்த நூல்கள் - எல்லாமும், எல்லாமுமே அண்ணாவைப் பொறுத்தவரை வீணாகப் போயினதாய்த் தோன்றிற்று.

நேற்றுப் பின்னேரம் தீபன் வந்து போனபிறகு அவன் எதுவும் செய்யப் பிடிக்காமல் படுத்திருந்தான். எல்லோரும் சாப்பிட எழுந்தபோது நித்திரை கொள்வதாய்ப் பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

பிறகு அம்மா வந்து காதருகே "தம்பி..."என்று மென்மையாய் அழைத்தபோது இயலாமை அவன் குரலில் சீற்றமாய் வெடித்தது.

"எனக்குப் பசிக்கேல்லை......"

அம்மாவுக்கு எல்லாம் புரிந்திருக்க வேண்டும். பேசாமல் தளர்வாய் அவள் நடந்து வெளியேறுவதை அவன் வருத்தத்துடன் போர்வைக்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'அம்மா என்னசெய்வாள்... பாவம்..?' அவனுக்குக் கற்றுக்கொடுத்த எல்லாவற்றையும் அண்ணனுக்கும் கற்றுக் கொடுத்திருப்பாள், நிச்சயமாய். அம்மா எப்போதாவது, தான் இளந்தாயாயிருந்த காலத்தை நினைவு கூர்வதாய்ச் சொல்கின்ற கதைகள் அண்ணாவை மென்மையானவனாய், இரக்கமானவனாய்தான் சித்தரித்திருக்கின்றன.

பின்னே எது அவரை இப்படி மாற்றி விட்டது? தான் இந்த உலக ஓட்டத்துள் அமிழ்ந்துவிடாது தொடர்ந்து மிதக்கவேண்டும் என்ற ஒரே எண்ணம் இதயத்தின் மெல்லிய ஓரங்களையெல்லாம் கூட மரமாக்கி விட்டதா? மரத்துப் போன இதயத்தையே தன் தெப்பமாகக்கொண்டு மிதக்கின்ற முயற்சியா இது? தலையை வலிப்பது போலிருந்தது.

'நானுங் கூட இப்படி மாறிவிடுவேனோ..... தேவைகளில் முகமிழந்து போய் 'வாழ்ந்திருத்தல்' என்ற ஒரே நோக்கங் கொண்ட மனித கூட்டத்துள் நானுந் தொலைந்து விடுவேனோ......?'

தன் நினைவே தனக்குக் கசப்பாயிருக்கத் தலையைக் குலுக்கிக் கொண்டான். விழிகளில் எதிரே சுவரில் தொங்குகின்ற சித்திரம் காட்சியானது.

அவன் என்றோ ஒரு கண்காட்சிக்கென வரைந்த ஓவியம். இது நாள் வரை பார்க்கும்போதெல்லாம் அவனுடைய ஓவியத்திறமை பற்றி அவனுக்கு ஒரு கர்வமான உணர்வை எழுப்பிக்கொண்டிருந்த ஓவியம்.

முகம் தெளிவற்ற ஒரு மனிதன்..... கரங்களில் கழுத்து நெரிக்கப்படுகின்ற குழந்தை...... அம்மனிதனின் உடலும் கரமும் குழந்தையை நோக்கியிருக்க.... தலை எதிர்த்திசையாய் அந்தக் கொடூரத்தைக் கவனியாதது போலத் திரும்பியிருக்கிறது.

இன்று ஏனோ அந்த முகம் அண்ணாவினுடையதுதானென்று எண்ணத் தோன்றியது.

இரவுங்கூடத் தீபன் கனவில் இவனிடம் ஓடி வந்தான். மாதுரி அக்கா நஞ்சு குடித்துச் செத்துப் போனதாய்ச் சொல்லி அழுதான். இவனுக்கு அதன் பிறகு தூங்க முடியாமற் போயிற்று.

படிக்கவும் முடியவில்லை. வட்டங்களும் சதுரங்களுமாய் வெள்ளைத் தாள்களை நிரப்பிக்கொண்டிருந்தான். காலையில் எழுந்ததுமே எதுவும் செய்யப் பிடிக்காமல் சோபாவினுள் வந்து முடங்கிக் கொண்டான். கையில் ஏதோ ஒரு புத்தகம் போகின்ற நேரத்தை நியாயப்படுத்துவதாக விரித்தபடி இருந்தது.

அண்ணா நேற்றைய விடயங்கள் எல்லாவற்றையும் மறந்துபோனவர் போலத் தோன்றினார்.

தீபனின் குரல் காதினுள் இப்போதும் எதிரொலிப்பதுபோல இருந்தது.

"நான் படிப்பை விடுகிறதெண்டாலும் அக்காக்குச் சம்மதமில்லை. அப்பாவுக்கு மருந்துச் செலவுக்கே சமாளிக்க ஏலாமக் கிடக்குது.... வேலை கிடைச்சிட்டுது எண்டஉடனேயே ஏதோ எல்லாப் பிரச்சினைக்கும் ஒரே நேரத்தில தீர்வு கிடைச்ச மாதிரி இருந்தது......."

இவனுக்கு மௌனம் மட்டுந்தான் ஞாபகமிருந்தது. தன்னால் செய்யக் கூடிய ஒரே செயலாய்.

"அக்காக்கு வேலை கிடைக்கேல்லை எண்டதைக் கூட எனக்குப் பெரிசாத் தெரியேல்லை.... ஆனா கிடைச்சிட்டு எண்டு நம்பினபிறகு அவ ஏமாந்ததைத்தான்தாங்கமுடியேல்லை..." தீபன் பிறகு அழுதுகொண்டேயிருந்தான், கொஞ்சநேரமாய்.

அவனால் என்ன செய்யமுடியும்? அண்ணா இவனை விளங்காதவர் போல வேலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தார். அம்மாவுக்கு இவனின் கனல் தணியவில்லை என்பது புரிந்தது.

அவன் மௌனமாய்ப் புள்ளிவைத்துக் கோடிழுத்துக் கொண்டிருந்தான். எப்போது மாறியது என்று தெரியாத பொழுதில் புள்ளிகள் பூவாகியிருந்தன.

இந்தப்பூவைப் பொறுத்தவரை அதன் மலர்தலுக்கு அம்மாதான் எஜமானி. புள்ளிகளை அவள் சரியாய்ப் போடுகின்ற வரைக்கும் பூ மனத்துக்கினியதாய் மலர்ந்து கொண்டிருக்கும்.

மாதுரி அக்காவின் சாந்தமான முகம் நெஞ்சுள் எழுந்தது. அவள் வாழ்வை மலரவைக்கின்ற புள்ளிகளுக்கு யார் பொறுப்பானவர்? அநீதியுள் உழல்கின்ற கரங்களே, அவளின் மலர்தலுக்கான புள்ளிகளைத் தடுத்தனவெனின், அந்தக் கருமை படிந்த கரங்கள் ஒரு வாழ்வை நிர்ணயிக்கின்ற வலிமைபடைத்த கரங்கள் என்று ஆகிவிடாதா?

இந்தக் கரிய கரங்கள் ஒரு வாழ்வை மாற்றும் வலிமை உடையனவெனின், அவனிடத்து உலகம் பற்றிய, அதன் நிலைத்தலுக்கு காரணமான ஆத்மார்த்தமான உண்மையின் இழைகள் பற்றிய, சிந்தனைகளை இதுவரை காலமும் போதித்திருந்த எல்லாமும் பொய்யாகிப் போய்விடுமா?

ஆயாசமாய்க் கண்களை மூடிக் கொண்டான். மாதுரி அக்கா இனி என்ன செய்வாள்?

விதி ஒரு கதவை மூடும்போது நம்பிக்கை இன்னொரு கதவைத் திறப்பதாய் எங்கோ வாசித்த ஞாபகம் வந்தது. விதி என்பது கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒன்றாக இருக்குமட்டும், இயற்கை நியதிப்படி, சக்கரம் சுழலும் ஒளிக்கதிர்கள் வாழ்வைத் தொடும் என்று நம்பலாமோ என்னவோ! விதியே மனிதர்களுள் சிக்கியுள்ளபோது நம்பிக்கையின் சாரங்கள் இற்றுப் போய் விடுமோ என்று தோன்றியது.

அண்ணா போய்விட்டதாய் நிசப்தம் சொல்லிற்று. தான் இன்று வகுப்புக்குப் போகவில்லையென அவன் சன்னமாய் அடிக்குரலில் அம்மாவிடம் சொல்லியிருந்தான். அம்மாவின் மேல் இனந்தெரியாத கோபம்பரவிற்று. நடைமுறைக்குப் பொய்யாகின்ற எல்லாவற்றையும் நெஞ்சில் பதிய வைத்தவள் அவள்தான்.

தீபனும் பாடசாலைக்குப் போயிருக்கமாட்டான் என்றே தோன்றியது. மாதுரி அக்காவின் நியமனம் பற்றிய தகவலை அவன்தான் தீபன் வீட்டுக்குச் சென்று சொல்லியிருந்தான்.

அகல்விளக்கை ஞாபகப்படுத்துகின்ற புனிதமான ஏதோ ஒன்று மாதுரி அக்காவிடம் எப்போதும் நிரந்தரமாகி இருப்பதாய்த் தோன்றுவதுண்டு. அன்று அவனது வார்த்தைகள் புதிதாய்த் திரியிட்டு நெய்யூற்றிய மஞ்சட் பிரகாசத்தை அகல் விளக்கில் ஏற்படுத்தியிருந்தன.

தீபன் வீட்டுக்குப் போகலாம்தான். பேசுவதற்குத்தான் வார்த்தை ஏதும் இல்லாமற் போய்விடும்.

படித்ததைச் சரியான முறையில் பிரயோகித்துக்கொண்டுபோக விடை வருவது கணிதத்தில் மட்டும்தானா? வாழ்க்கைக்கு இது ஒத்துவராதெனின் பிழையான பிரயோகங்களும் நல்ல விடையை அளிக்குமெனின்....... மேலே யோசிக்கப் பிடிக்காமற் போயிற்று.

கண்களைமூடிச் சோர்வாய் அமர்ந்திருந்தான். வாசலில் பதற்றமான குரலின் அழைப்புக்கேட்டது.

அம்மாவும் அண்ணியும் பின் கட்டில் நிற்பது தெரிந்தது. இவன் தோற்றம் தெரிந்தவுடனேயே வாசலில் நின்றவர் ஏதோ சொல்லத் தொடங்கிப் பின் சடுதியாய்த் தயங்கியது புரிந்தது. அண்ணாவின் அலுவலக ஊழியர்.

**ச.ஆனந்தி**

"அண்ணா அலுவலகத்திற்குப் போட்டார்........"

"..................."

"அண்ணாட்டத்தானே வந்தனீங்கள்........?"

"இல்லை தம்பி....... ஏதோ மீற்றிங் எண்டு போகேக்கே தவறுதலா வாகன அணிக்கு வைச்ச குண்டில எங்கட ஒவ்வீஸ் வான்....."

"அண்ணா......அண்ணாக்கு......"

"அண்ணாக்கு கொஞ்சம் காயந்தான்...... பயப்படுறமாதிரி ஒண்டும் இல்லை...... எங்கட மேலதிகாரிதான் அந்த இடத்திலேயே......" அவர் குரல் நடந்த பயங்கரத்திலேயே இன்னும் ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

அம்மாவைக் கூப்பிடுங்கோ தம்பி..... அவை பயந்துபோவினம்... பக்குவமாய் உண்மையைச் சொல்லவேணும்......"

"இல்லை..... நான் அவையிட்டச் சொல்லுறன்...... அவையையும் கூட்டிக் கொண்டு ஹொஸ்பிட்டலுக்கு வாறன்... தாங்ஸ்......" இவன் குரலில் ஒரு சாதாரணத் தன்மை இருந்தது. வந்தவரின் முகத்தில் 'என்ன இவன்' என்பதாய்ச் சிந்தனை கோலம் போட்டது தெரிந்தது.

உள்ளே திரும்பும்போது அண்ணா பற்றிய செய்தி தோற்றுவித்திருந்த துன்பத்தின் சாயையைக் கிழித்துக் கொண்டு திடீரென ஒரு சந்தோஷச் சாரல் எழுவது போலிருந்தது.

அந்தச் சந்தோஷத்தின் வேரைக் கண்டறியவேண்டும் என்பதாய் ஆவல் பிறந்தது. ஒரு கணம்....ஒரு கணம், நெற்றியை அழுத்தி விழிகளை மூடிய போது....... படித்ததைச் சரியான முறையில் பிரயோகித்துக்கொண்டு போக விடை வருகின்ற சந்தோஷம் அது என்பது புரிந்தது.

உள்ளே திரும்பும்போது கோலம் கண்களில்பட்டது. இதன் புள்ளிகளுக்கு அம்மாதான் எஜமானி காதோடு மெலிதாய்ச்செல்லும் காற்றில் கோலம் சொல்லும் செய்தி கலந்திருப்பதாய்த் தோன்றிற்று. *

---

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## சில குறிப்புகள்

**28**

தகழி சிவசங்கரப் பிள்ளை ஏறத்தாழ இருபது நாவல்களும் அதே அளவு எண்ணிக்கையான சிறுகதைத் தொகுதிகளையும் எழுதியுள்ளார். 'செம்மீன்' தவிர, அவருடைய 'கயிறு', 'ஏணிப் படிகள்', 'ரண்டிடங்கழி', 'தோட்டியின் மகன்' போன்ற நாவல்களும் மிகுந்த புகழ் பெற்றவை. இவைதவிர, நாடகம், பயணநூல் மற்றும் சுயசரிதம் போன்றவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

சமூகத்தின் அடித்தள மக்களது வாழ்க்கையையும், புதிய கருத்துக்களின் பிரதிநிதிகளாக வரும் பாத்திரங்களையும் வைத்து புனைகதை படைத்த மற்றொருவர், கேசவதேவ். அவருடைய 'சாக்கடையிலிருந்து', 'அழகியின் சுயசரிதை', 'அண்டை வீட்டார்', ஆகிய படைப்புகள் மலையாள இலக்கியத்தில் தனியிடம் பெற்றவை.

அடுத்து முக்கியமாகக் குறிப்பிடப் பட வேண்டியவர், வை.மு.பஷீர் என்றறியப்பட்ட வைக்கம் முகம்மது பஷீர். மலையாளப் படைப்புலகில் என்றைக்குமே மறக்கப்படமுடியாத ஒருவர். நீண்ட வாழ்வும், நிறைந்த அநுபவங்களும் கொண்டிருந்த பஷீரின் படைப்புகள் இலக்கிய மைல்கற்களாக மதிக்கப்படுபவை. அவருடைய 'பாத்தும்மாவின் ஆடு','இளம்பருவத்துத் தோழி', 'என் அப்பப்பாவுக்கு ஒரு ஆனை இருந்தது' போன்ற நாவல்கள் அவை. சிறுகதைகள், நாடகம் போன்றவற்றையும் எழுதிய பஷீரின் 'மதிலுகள்' என்ற குறுநாவலும் மிகுந்த புகழ்பெற்றது.

இம் மும்மூர்த்திகளுடன் சேர்த்தெண்ணப்படத்தக்கவர்கள், பொற்றக்காடு, உறூப் இருவரும். இவர்களை அடுத்துவந்த தலைமுறையில், பாறப்புறத்து, மலையாற்றூர் ராமகிருஷ்ணன், வாசுதேவன் நாயர், கோவிலன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாய் விளங்கினர். மத்தாய் என்ற இயற்பெயர்கொண்ட பாறப்புறத்து, சிறந்த நாவலாசிரியராக அறியப்பட்டவர். நாட்டிற்காகத் தம்முயிரைப் பலியிடும் துணிவு கொண்ட இளைஞர்களின் உணர்வுகளையும் கனவுகளையும் இலக்கியமாகப் படைத்தவர் என பாறப்புறத்து குறிப்பிடப்படுகிறார்.

அவருடைய. 'அரைநாழிகை நேரம்', 'பணிதீராத வீடு' ஆகிய நாவல்கள் புகழ்பெற்றவை.

இவர்களைத் தொடர்ந்து வந்தோரில், ஓ.வி.விஜயன், ஆனந்த், முகுந்தன், பத்மநாபன், சுகுமாரன், மாதவிக்குட்டி முதலியோர், சிறந்த புனைகதைப்படைப்பாளிகளாக இனங்காணப்பட்டு, மலையாள இலக்கியத்தைச் செழுமைப்படுத்தலாயினர்.

**சாந்தன்**

தென்னிந்திய மொழிகளுள் கன்னடத்திலும், கடந்த சில தசாப்தங்களாகக் குறிப்பிடத்தக்க கலை இலக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அறுபதுகளில் வெளியான யு.ஆர்.அனந்தமூர்த்தியின் 'ஸம்ஸ்காரா' மிகவும் பிரபலமடைந்த ஒரு கலைப்படைப்பாகும். அது நாவலென்று கூறப்பட்டாலும் கன்னடத்திலிருந்து ஆங்கிலத்திற்கு அதனை மொழி பெயர்த்த ஏ.கே.ராமானுஜன், 'குறுநாவல்' எனவே குறிப்பிடுகிறார். கர்நாடகக் கிராமமொன்றில், சிதிலமடைந்துபோகிற ஒரு பிராமணக் குடியிருப்புப் பற்றிய - சமய? - நாவல், 'ஸம்ஸ்காரா' -

'ஸம்ஸ்காரா' என்ற சொல்லுக்குக் கன்னட மொழியில் பல அர்த்தங்களுள எனக் கூறப்படுகிறது. முழுமையாக்கல், மெய்யுணர்வு, தயாராதல், தூய்மைப்படுத்தல், சடங்கு, இறந்தோருக்கான கிரியைகள் - எனப்பல அர்த்தங்கொண்ட இச்சொல், இந்நாவலுக்குத் தலைப்பாயமைவது மிகவும் கனதியைக் கொடுக்கிறது. உண்மையில் கதையின் பாதியை தலைப்பே கூறுவதாகவும் படுகிறது. இந்து மதத் தத்துவங்களை - கதையோட்டம் மூலமாகவே - அலசும் இந்நாவல் பல கேள்விகளை எழுப்புகிறது. நாரணப்பா. பிராணேசாச்சார்ய - ஆகிய இரு பாத்திரங்களுமே சமூகத்தினதும் அதன் மாறுபடும் வளர்ச்சிப் போக்குகளினதும் குறியீடுகளாய்க் கொள்ளத் தக்கவர்களே. இப்படியான ஒரு பின்னணியிலன்றி வேறொரு பின்னணியில் இவ்விரு பாத்திரங்களும் முழுமை கொள்ளுமா என்ற கேள்வியும் வாசகருள் எழுவது தவிர்க்கமுடியாதது.

வெளியான வேளையில் விமர்சகர்களாலும் வாசகர்களாலும் ஒருசேர வரவேற்கப்பட்ட இந்நாவல் ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாகவே, சர்ச்சைக்குரிய ஒரு திரைப்படமாகவும் வெளியாகி, பரிசில்களையும் பெற்றது. இந்நாவலின் தமிழ்மொழி பெயர்ப்பொன்று சில ஆண்டுகட்கு முன் வெளியான போதிலும் அதன் நடைகாரணமாக மனமொப்பி வாசிப்பதைக் கடினமாக்கி விடுகிறது. இக்குறைபாடு ஆங்கில மொழிபெயர்ப்பில் தெரியவில்லை. இரண்டு மொழிகளை அறிந்திருப்பது மட்டுமே ஒரு மொழிபெயர்ப்பாளனுக்குரிய தகுதியாகக் கொள்ள இயாலது தான்; அது ஆக்க இலக்கியமாக இருந்தாலென்ன; அறிவியில் விஷய

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ச்சி உடைகளை அணிவது ஆண்களை திருப்திப்படுத்தவா?

**குருநகர். யேசுதாசன்.**
வித்துவான் ஐயா! நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகக் கேள்வி: உண்மையா?
☺**நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டாலும் நூறு வாக்குகளுடன் எம்.பி. ஆகிவிடலாம்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். பி. சூட்.**
வித்துவான் ஐயா ஏமாறுபவர்கள் இருந்தால்...?



☺**ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்.**

❀ ❀ ❀

**கல்வயல். மது.**
வித்துமாமா ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் எந்தக் கட்சி?
☺**நான் வித்துவாட்டி கட்சி.**

❀ ❀ ❀

**நல்லூர். சுமதி.**
பெண்கள் புதிய உடைகளை அணிந்து கொள்வது ஆண்களைத் திருப்திப்படுத்துவதற்காகவா? அல்லது மற்றைய பெண்கள் பொறாமையுடன் பார்க்க வேண்டும் என்பதற்காகவா?
☺**நிச்சயமாக மற்றைய பெண்கள் பொறாமையுடன் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான். ஆண்களைத் திருப்திப்படுத்த அவர்கள் எதனையுமே அணியத் தேவை இல்லை.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். நளினி.**
வித்துவான் சேர் நல்ல பெண்ணுக்கும்கெட்ட பெண்ணுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?
☺**நல்ல பெண் வெளியே போய்விட்டு வீட்டுக்கு வந்து படுக்கைக்குப் போகிறாள். கெட்ட பெண் வெளியே கிளம்பி படுக்கைக்குப் போய்விட்டு வீட்டுக்கு வருகிறாள்.**

❀ ❀ ❀

**இருபாலை. குமரகுரு.**
எனது நண்பன் நல்ல சீதனத்துடன் பெண் தேடுகிறான். அத்தோடு அழகான பெண்ணும் வேண்டுமாம்.
☺**சீதனம் பெட்டியில் பூட்டி வைக்க; அழகு வெளியே கூட்டிச் செல்ல.**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. புஷ்பராணி.**
என்னைப் போன்று அழகான பெண் இந்த உலகத்திலே வேறு எவரும் இருக்க முடியாது என்று எனது காதலர் சொன்னார். அதனால் அவரையே திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன்.
☺**கொஞ்சமாவது உண்மை பேசக் கூடிய ஒருவரைப் பார்த்து நீர் திருமணம் செய்து கொள்ளக்கூடாதா?**

❀ ❀ ❀

**இருபாலை. நடேசன்.**
வித்துவான் ஐயா எனது மாமியார் வந்தால் மாதக் கணக்கில் வீட்டில் தங்கி விடுகிறாரே!
☺**பரவாயில்லை. எனது மாமியார் நாள் கணக்கில் கூட வெளியே போகமாட்டேன் என்கிறாரே.**

❀ ❀ ❀

**ஆனைக்கோட்டை. தர்ஷினி.**
ஆண்கள் ஒரு காதால் கேட்டு மறுகாதால் விட்டு விடுவார்கள். அப்படி என்றால் பெண்கள்...?
☺**பெண்கள் ஒரு காதால் கேட்டு வாயால் விடுவார்கள்.**

❀ ❀ ❀

**கொக்குவில். பி.சாந்தி.**
ஓயாத அலைகள் எப்பொழுது ஓயும்?
☺**சமுத்திரம் உள்ள வரை அலைகள் ஓயப்போவதில்லை.**

❀ ❀ ❀

**மட்டுவில். ரமணன்.**
இலக்கிய உலகில் பாரதிக்கும் கல்கிக்கும் ஏன் தனி இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது?
☺**அவர்கள் இருவரும் மொழியில் எளிமையைப் புகுத்திச் சாதாரண மக்களுக்கு இலக்கியத்தை எட்டச் செய்தவர்கள்.**

❀ ❀ ❀

**கரவெட்டி. என்.கார்த்திக்.**
ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிட்டு முழுத் தமிழர்களின் வாக்குகளும் அவருக்கு கிடைத்தால் என்ன நடக்கும்?
☺**பிறகு தமிழர்களே இருக்க மாட்டார்கள்.**

❀ ❀ ❀

**கலட்டி. ஆர்.ரமா.**
வித்து ஐயா பெண்களில் எத்தனை வகையினர் உண்டு?
☺**இரண்டு வகைகள் உண்டு. ஆண்கள் செய்யும் தவறை சுட்டிக் காட்டும் பெண்கள் ஒரு வகை. ஆண்கள் செய்யும் தவறுகளாக இருக்க விரும்பும் பெண்கள் இரண்டாவது வகை.**

❀ ❀ ❀

**சங்கானை. பி.சுதன்.**
ஸ்கூட்டரில் பின்னால் இருக்கும் எனது மனைவி தோளைப் பிடிக்கட்டுமா? இடுப்பைப் பிடிக்கட்டுமா? என்று உபத்திரவம் கொடுக்கிறாளே?
☺**எதையாவது பிடித்துத் தொலை என்று விட்டு விடுங்களேன்.**

❀ ❀ ❀

# நுளம்புகள் யாரை விரும்பிக் கடிக்கின்றன?

**அளவெட்டி. சுதன்.**
வயதுகுறைந்த பெண்ணைக் காதலிக்கிறேன். பெற்றோர் சம்மதம் இல்லாமல் கூட்டிச் சென்றால் சட்டப்படி ஐந்து வருடம் உள்ளே தள்ளுவார்களாம். மெய்தானா?
☺**வீரமுள்ளவன்தான் காதலிக்க வேண்டும். உள்ளே தள்ளுவதற்கு பயந்தவர்களுக்கு ஏன் காதல்?**

❀ ❀ ❀

**சுழிபுரம். வனிதராணி.**
திரைப்படத் தயாரிப்புத் தொழில் எப்படி?
☺**சிலர் குன்றில் நிற்பதைப் பார்த்து பலர் படுகுழியில் விழுவதே திரைப்படத் தொழில்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். லஷ்மன்.**
'வீட்டைக் கட்டிப்பார் கல்யாணத்தைக் கட்டிப்பார்' என்று சொல்லுகிறார்களே எதற்காக?
☺**இரண்டுமே அத்திவாரம் பலம் இல்லாவிட்டால் இடிந்து விழுந்துவிடும்.**

❀ ❀ ❀

**சாவகச்சேரி. புனிதா.**
வித்துவான் சேர்...நீங்கள் காதலில் தோல்வி அடைந்திருக்கிறீர்களா?
☺**இரண்டு தடவைகள். முதல் பெண் என்னை ஏமாற்றிவிட்டாள்; இரண்டாவது பெண் என்னைத் திருமணம் செய்து கொண்டாள்.**

**கோப்பாய். லதா.**
நுளம்புகள் ஆடவர்களையா பெண்களையா கூடுதலாகக் கடிக்கின்றன?



☺**நுளம்புகள் ஆடவர்களைத்தான் அதிகமாக விரும்பிக் கடிக்கின்றன என்று பிரிட்டிஷ் டாக்டர்கள் கூறுகின்றார்கள். முதியோர்கள், குழந்தைகளில் கூட அவற்றுக்கு நாட்டம் அதிகம் இருப்பதில்லை.**

❀ ❀ ❀

**கொம்மாந்தறை. எம்.ரஷிகா.**
வித்துவான் ஐயா, பெண்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவீர்களா?
☺**பெண்கள் எப்பொழுதுமே கணிதத்தில் கெட்டிக்காரர்கள். அவர்களது வயதை இரண்டால் பிரிப்பார்கள். தங்கள் ஆடை விலையை இரண்டால் பெருக்குவார்கள். கணவனின் சம்பளத்தை மூன்றால் பெருக்குவார்கள். தமது சினேகிதிகளின் வயதில் ஐந்தை எப்பொழுதும் கூட்டியே சொல்லுவார்கள்.**

❀ ❀ ❀

**ஆனைக்கோட்டை. என்.மோகன்.**
எனது மனைவி இரவில் திடீர் திடீரெனக் கத்துகிறாள் என்ன செய்யலாம்?
☺**நீர் பேசாமல் தூங்கும் பிரச்சினையே வராது.**

❀ ❀ ❀

**உடுப்பிட்டி. ஆர்.சிவக்கொழுந்து.**
ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்கிறார்கள். ஆனால் ஆவது ஆணால்தானே?
☺**ஆவது ஆணால்தான்! ஆணை ஆட்டிப்படைப்பது பெண்தானே.....!**

❀ ❀ ❀

**நீராவியடி. தே.தங்கன்.**
வித்து நீர் சைவமா? அசைவமா?
☺**வீட்டில் சைவம் வெளியில் அசைவம்.**

❀ ❀ ❀

**உடுவில். பா.சதீஸ்.**
ஒரு தைரியசாலி எப்பொழுது கோழையாகிறான்.
☺**திருமண நாளில் இருந்து.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். முரளி.**
பணக்காரப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு ஏதாவது வழி சொல்லித் தாருங்களேன்!



☺**அவளுடைய இருபத்தியெட்டாவது பிறந்தநாளுக்கு பதினெட்டு மெழுகுவர்த்திகள் கொண்ட கேக்கைப் பரிசளியுங்கள். எல்லாம் சரிவந்து விடும்.**

❀ ❀ ❀

**நுணாவில். பி.சத்தியமாலா.**
ஆலமரங்கள் விழுதுகளை நம்பி இருக்கலாமா?
☺**பாசம் குறைந்து வரும் இந்தக் காலத்தில் ஆலமரங்கள் விழுதுகளை நம்பக் கூடாது. தங்கள் மூலவேரைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.**

❀ ❀ ❀

**கல்வியங்காடு. ரி.மீரா.**
வித்து மாமா கல்யாணம் ஆனவர்களுக்கும் கல்யாணம் ஆகாதவர்களுக்கும் என்ன வித்தியாசம்?
☺**கல்யாணம் ஆகாதவர்கள் ஒரு பெண் வேண்டும் என்று நினைக்கிறார்கள். கல்யாணம் ஆனவர்கள் இன்னொரு பெண் வேண்டும் என்று நினைக்கிறார்கள்.**

❀ ❀ ❀

**கல்வயல். பி.தனுஷா.**
ஓர் ஆண் தவறு செய்து விட்டால் "சரியான முட்டாளாக இருக்கிறானே?" என்று சொல்லும் உலகம் ஒரு பெண் அதே தவறைச் செய்து விட்டால் என்ன சொல்லும்?
☺**'பெண்கள் சரியான முட்டாள்கள்' என்று சொல்லும்.**

❀ ❀ ❀

**இருபாலை. ஆர்.சற்குணம்.**
காலையில் எழுந்து "ஷேவ்" செய்து கொண்டவுடன் பத்து வயது குறைந்து விட்டது போன்று இருக்கிறாரே எனது கணவர்?
☺**அப்படியா....! இனிமேல் இரவு நேரத்தில் 'ஷேவ்' செய்து கொள்ளச் சொல்லுங்களேன்....!**

❀ ❀ ❀

**நாவாந்துறை. ஆர்.கிறிஸ்தோபர்.**
வித்து மாமா 13 அதிர்ஷ்ட எண்ணா?
☺**1996 இல் இந்தியாவில் பதவிக்கு வந்த வாஜ்பாய் அரசு 13 நாள்கள் மட்டுமே ஆட்சியில் இருந்தது. அதன் பின்னர் 1998 இல் நடைபெற்ற தேர்தலில் 13 மாதங்கள் ஆட்சியில் இருந்தது. இந்த ஆண்டு தேர்தலில் அமோக வெற்றியீட்டிய வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசு பதவி ஏற்றதும் ஒரு 13ஆம் திகதியே. வாஜ்பாய்க்கு 13 அதிர்ஷ்ட எண்ணாக இருக்கலாம். இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் 13 வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுகின்றனர். இவர்களில் ஒருவருக்குத்தான் 13 அதிர்ஷ்ட எண்ணாக இருக்கப் போகிறது.**

❀ ❀ ❀

**இருபாலை. தி.நிஸ்வி.**
ஒருவன் தினமும் தொலைபேசியில் எனக்குத் தொல்லை கொடுக்கிறானே.....!



☺**அது தொலைபேசி அல்ல. தொல்லை பேசி.**

❀ ❀ ❀

# வித்துவான் பதில்கள்

**சுதுமலை. ஆர்.சின்னத்துரை.**
ஈழத்துக் கவிதை வளர்ச்சி எப்படி இருக்கிறது?
☺**புதுக்கவிதை மிக வேகமாக வளர்கிறது.**

❀ ❀ ❀

**மானிப்பாய். எப்.கோவிந்தராஜன்.**
கவிஞர்களில் பாரதிதாசனும் சிறுகதை ஆசிரியரில் ஜெயகாந்தனும் தலைக்கனம் பிடித்தவர்களா?
☺**தலைக்கனத்தை விடுங்கள். அவர்கள் இருவர் படைப்பிலும் இலக்கியக் கனம் இருப்பதை இலக்கிய உலகு ஏற்றுக் கொண்டுள்ளதே.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். க.சுரேந்திரன்.**
வித்து ஐயா, சினிமா உலகில் கையாளப்படும் ஆடை அலங்காரம் பற்றி சிறிது சொல்வீர்களா?
☺**முதலில் சரியாக அளவு எடுத்துக் கொள்ளச் சொல்லுவார்கள். பிறகு ஒவ்வொரு இடத்திலும் அதைப்பாதியாக குறைத்துத் தைக்கும்படி கூறுவார்கள்.**

❀ ❀ ❀

**ஊர்காவற்றுறை. ச.புஸ்பராணி.**
காதல்கள் எல்லாம் கல்யாணத்தில் முடியுமா?
☺**மலர்கள் எல்லாம் காயாவதில்லையே. காய்களிலும் சிலவே கனியாகின்றன.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். எஸ்.கணபதி.**
வித்துவான் ஐயா எய்ட்ஸுக்கு தமிழ் மருந்து உண்டா?
☺**திருவள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே மருந்து கண்டு பிடித்து விட்டாரே! ஒருவன் - ஒருத்தி என்ற தமிழ் வாழ்வே மருந்து.**

❀ ❀ ❀

**தொல்புரம். வே.ஆனந்தரூபன்.**
வீதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பவர்கள் ஏன் கட்டாக்காவாலிகளைப் பிடிப்பதில்லை? அவர்கள் தொல்லைதானே அதிகம்.
☺**கட்டாக் காவாலிகளைப் பிடிக்கலாம். ஆனால் அழித்துவிட சட்டம் இடம் கொடாதே.**

### இவ்வார ஜோக்

**கணவன், மனைவி இருவரும் ஓவியக் கண்காட்சியொன்றுக்குச் சென்றிருந்தனர். இலைகளாலான ஆடை அணிந்த ஒரு பெண்ணின் படத்திற்கு 'வசந்த காலம்' என்ற தலைப்புக் கொடுத்திருந்தனர். அப்படத்திற்கு அருகே வெகு நேரம் நின்றுகொண்டிருந்த கணவனை நோக்கி மனைவி எரிச்சலுடன், "என்ன, இலையுதிர் காலத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களா?" என்றாள்.**

# காதால் கேட்டு வாயால் விடுவது ஆண்களா? பெண்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலும் தமிழ்க் கட்சிகளும்; மக்களிடம் அதற்கான மனப்பாங்கு இல்லை!

நடமாடும் சேவை என்ற பெயரில் அரசாங்க அதிகாரிகளை மக்களிடத்தே அழைத்துச் செல்லும் முறை கொள்கையளவில் நல்ல திட்டமே. அரசாங்க அலுவலகங்களுக்குக் கடிதம் எழுதியும், நேரில் சென்றும் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத பொதுமக்களின் அலுவல்களைச் செய்து கொடுப்பதென்பதே நடமாடும் சேவையின் குறிக்கோள்.

ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமராக இருந்த காலத்திலேயே இந்த முறையை ஆரம்பித்து விட்டார். சிங்களப் பிரதேசங்களில் நடமாடும் சேவை பெரும் பயனைத் தந்ததமையை மறந்து விடுவதற்கில்லை. தமிழ்ப் பகுதிகளில் நடமாடும் சேவைகள் கணிசமாகவேனும் நடத்தப்பட்டதாக இல்லை.

பிரேமதாசாவின் நடமாடும் சேவையை "அதே இடத்தில் சேவை" என்று பெயர் மாற்றி இந்த அரசாங்கமும் நடத்தி வருகிறது. தமிழ்ப் பிரதேசங்களில் அந்தச் சேவையின் சேவை எண்ணளவானதே. ஜனாதிபதித் தேர்தல் அண்மிப்பதால் இந்தச் சேவை தென்னிலங்கையில் இப்போது பரவலாகவும் வேகமாகவும் நடத்தப்படுகிறது.

அந்தவகையில் கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கென்று, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை "அதே இடத்தில் சேவை" நடத்தப்பட்டது.

முற்பகல் 9.00 மணிக்கு இந்தச் சேவை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், அரசாங்க அலுவலகங்களில் ஆற்ற வேண்டிய ஆனால் செய்யப்படாத, நிறைவேற்றப்படாத பல விடயங்களுடன் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாழும் தமிழர்கள் நூற்றுக்கணக்கில் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே அங்கு கூடியிருந்தனர். ஆனால் ஜனாதிபதி அலுவலகத்தைச் சேர்ந்த உதவிச் செயலாளர் ஜெயசிங்காவும், கொழும்பு அரசாங்க அதிபரும் ஒன்றரை மணித்தியாலம் கழித்து மு.ப. 10.30 மணிக்கே வந்து சேர்ந்தனர்.

"அதே இடத்தில் சேவை" நிகழ்வில் கூடியிருந்தவர்கள் தமிழர்கள். ஆனால் ஜனாதிபதியின் உதவிச் செயலாளரும், அரசாங்க அதிபரும் அங்கு சிங்களத்திலேயே சேவையின் தன்மைகளை விளக்கிப் பேசினர். அங்கு கூடியிருந்தோரில் பலர், "தமிழில் பேசவேண்டும்; இல்லையேல் மொழி பெயர்ப்புச் செய்யவேண்டும்" என்று ஒருமித்துக் குரல் எழுப்பினர். அதன் பின்னர் அவர்களின் விளக்கஉரைகள் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டன.

கொழும்பு வாழ் தமிழ் மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்பட்டு பயன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அதே இடத்தில் சேவைக்குச் சென்றிருந்தனர். தெற்கின் ஏனைய இடங்களில் நடைபெற்ற அத்தகைய சேவைகளின் போது அவற்றில் கலந்துகொண்டோர் தமது அலுவல்கள் நிறைவேறிப் பயன் அடைந்ததைத் தொலைக்காட்சியில் பார்த்தும், வானொலியில் கேட்டும், பத்திரிகைகளில் படித்தும் அறிந்தவர்கள் அவர்கள். அதனால் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் தமது கருமங்கள் காரியமாகும் என்ற ஆவலுடன், எதிர்பார்ப்புடன் சென்றனர். ஆனால் மிகப் பலர் அதிருப்தி கவிந்த முகங்களுடனேயே திரும்பினர்.

பொலீஸ் சம்பந்தப்பட்ட அலுவலகளுக்காகச் சென்ற பலரும், அங்கு அமைக்கப்பட்டிருந்த பொலீஸ் நிலையப் பிரிவினால் திருப்பி அனுப்பப்பட்டனர். சிறுசிறு விடயங்களையே அங்கு கையாள முடியும் என்று பலருக்கும் தெரிவிக்கப்பட்டது.

துபாயில் இருந்து கொழும்பு வந்துள்ள தமிழர்கள் சிலர் தமது அடையாள அட்டை தொடர்பாக முறைப்பாடு செய்ய பொலீஸ் பிரிவு அதிகாரிகளின் உதவியை நாடினர். அது விடயமாக அங்கு எதுவும் செய்ய முடியாது என்று கூறி அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தங்களுக்கு பிரசாவுரிமை கிடைப்பதில் உள்ள தாமதத்தை எடுத்துச் சொல்லி அதனை விரைவுபடுத்த உதவுமாறு கேட்ட மக்கள் சில

## உள்ளும் புறமும்

குறுமுனி

ரின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. குடிவரவு - குடியகல்வுத் திணைக்களப் பிரிவின் சேவை மிகவும் அசமந்தமாக இருந்ததாகப் பலரும் கவலை தெரிவித்தனர்.

கொழும்பு வாழ் தமிழ் மக்களின் பல அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதே அதே இடத்தில் சேவையின் நோக்கம். ஆனால் ஆவலுடன் வந்த பலரும் இங்கு ஏன் நேரத்தை வீணடித்தோம் என்று கூறி அதிருப்தியும் ஏமாற்றமும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி தேர்தலை அண்டி நடைபெற்ற சேவையே இவ்வாறு அதிகம் பயனில்லாது போனதெனின், சாதாரண காலத்தில் அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மக்களின் தனிப்பட்ட விடயங்கள் எவ்வாறு கையாளப்படும் என்பதனை நினைத்தும் பார்க்கவேண்டியதில்லை.

பகலில் "அதே இடத்தில் சேவை" முடிந்தது, அதே கல்லூரியில் மாலையில் செய்மதிச் சந்திப்பு நடைபெற்றது. முதற் சனிக்கிழமை, ஆறாம் திகதி யாழ்ப்பாணத் தமிழ் மக்களைச் செய்மதி மூலம் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்திருந்தார் ஜனாதிபதி. அது குறித்து சென்ற வாரம் இப்பத்தியில் அலசியிருந்தோம். கடந்த சனிக்கிழமை கொழும்பு வாழ் தமிழ் மக்களை ஜனாதிபதி செய்மதி மூலம் சந்தித்து உரையாடினார்; கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

### பயணிகள் கப்பல்

யாழ்ப்பாணத்து மக்கள் குடாநாட்டுக்கான பயணிகள் கப்பற் சேவை குறித்துக் கேட்டதும், ஜனவரியோடு பயணிகள் கப்பல் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் என ஜனாதிபதி பதிலளித்ததும் தெரிந்தவையே. கொழும்புத் தமிழர்களுடனான சந்திப்பின் போதும் பயணிகள் கப்பல் விவகாரமே முதலாவது கேள்வியாக இருந்தது.

தாம் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்த அனுமதிக்கப்படாத பயணிகள் கப்பலை திருகோணமலை - காங்கேசன்துறை சேவைக்கு விட உதவுமாறு மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர்கள் சார்பில் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது.

அரசாங்கத்திடம் இருந்தே 'ரெண்டருக்கு' விற்கப்பட்ட கப்பலை 110 இலட்சம் ரூபாவுக்கு வாங்கினோம். அதனைப் பயணிகள் வசதி கருதித் திருத்தினோம். அந்தக் கப்பலுக்கு மொத்தம் 300 இலட்சம் ரூபா செலவிட்டோம் -

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இந்தக் கப்பலை, பயணிகள் சேவையில் ஈடுபடுத்த அனுமதி அளிப்பதாக அரசு உறுதி அளித்ததாலேயே நாம் அதைப் பெரும் பணச்செலவில் கொள்வனவு செய்தோம். ஆனால் நாம் தமிழர்கள் என்பதால் அரசு வஞ்சித்துவிட்டது - என்று பிரஸ்தாப நிறுவனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

உடனே ஜனாதிபதி குறுக்கிட்டு -

நாம் உங்களை வஞ்சிக்கவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே நாம் அந்தச் சேவைக்கு அனுமதிக்கவில்லை. - என்று சொன்னார்.

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் நிறுவனப் பிரதிநிதி விடவில்லை. அவர் தொடர்ந்தார். கப்பலைப் பெரும் பணச்செலவில் கொள்வனவு செய்து ஒரு வருடமாகப் பயன்படுத்த முடியாமல் வீணே வைத்திக்கிறோம். உங்களது கம்பஹா மாவட்டத்தில்தான் நானும் பிறந்தேன். அங்குதான் வளர்ந்தேன். இப்போதும் அங்கு வியாபாரம் செய்கிறேன். ஆனால் நான் தமிழன் என்பதால் கப்பற் சேவை நடத்த நீங்கள் அனுமதிக்கவில்லை - என்றார்.

இதன் பின்னர் -

கப்பலை எங்களிடம் தாருங்கள். நாங்கள் சேவையை நடத்துகிறோம். அதற்கான வாடகைக் கட்டணத்தைத் தருகிறோம் - என்றார் ஜனாதிபதி.

அரசாங்கம் நடத்தும் சரக்குக் கப்பற் சேவையில் கட்டணம் மிக அதிகமாக உள்ளதையும் மகாலட்சுமி நிறுவனப் பிரதிநிதி சுட்டிக்காட்டினார். அது மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் உயர் அதிகாரி ஒருவர் தொடர்பாகத் தம்மிடம் ஐம்பது குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் அவற்றுக்கான தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்றும், அவற்றைத் தம்மால் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

ஆனால் ஜனாதிபதியிடமிருந்து இவற்றுக்கான பதிலோ குறிப்புரையோ வரவில்லை.

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றிக் கைது செய்யப்படுவது குறித்தும் அதனைத் தடுக்க முடியாதா என்றும் ஜனாதிபதியிடம் கேட்கப்பட்டது.

### பயங்கரமான தகவல்

இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்த விவரம் பயங்கரமானதாக இருந்தது.

தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் கண்டபடி கைது செய்யப்படுகின்றனர். அரசியலுடனோ நாட்டு நடப்புடனோ தொடர்பில்லாத அப்பாவிகளைக் கூட அவர்கள் தமிழர்கள் என்பதால் கைது செய்கின்றனர். இரவுவேளைகளில் தேடுதல் நடத்திப் பெரும் தொந்தரவுகள் கொடுக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் கைது செய்யப்படுவோர் நிர்வாணமாக நிறுத்தப்பட்டுப் படம் பிடிக்கப்படுவதாகவும் எங்களுக்கு முறைப் பாடுகள் கிடைத்துள்ளன - என்று யோகராஜன் தெரிவித்தார்!

இது சம்பந்தமாக ஒட்டு மொத்தமாக ஜனாதிபதி பதிலளித்தார். விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் ஊடுருவுகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்கவும் கைது செய்யவும் தேடுதல் நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை. ஆனாலும் கைதுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்து படை, பொலீஸ் அதிகாரிகளுடன் பேசுவேன் - என்றும் அவர் சொன்னார்.

கடந்த திங்கட்கிழமை இது குறித்து படை அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். எனினும் அந்த மாநாடு நடைபெற்றதாக இப்பத்தி எழுதப்படும்வரை தகவல் இல்லை.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் கொழும்புத் தமிழ் மக்களுடனான செய்மதிச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன. யாழ். மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச்சங்கத்தின் சார்பாக அந்தக் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் ஜனாதிபதி அவற்றுக்குப் பதிலளிக்கவில்லை. செய்மதி சந்திப்பு நிகழ்வு 45 நிமிடங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மேற்படி நலம்புரிமைச் சங்கத்தின் கேள்விகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதியின் அதிகாரிகளால் பின்னர் பெறப்பட்டது.

அவற்றில் சில கேள்விகள் இவை:-

* அதிகாரப்பரவலுக்காகவே புதிய ஜனாதிபதித் தேர்தலை நடத்துகிறேன் என்று கூறும் தாங்கள் ஏன் இன்னும் பதவிக்கு வந்து 5 வருட காலமாகவும் கிராமசேவையாளரின் நிர்வாகம் போன்ற சாதாரண அதிகாரப்பரவலாக்கலையே மத்திய அரசின்கீழ் வைத்திருக்கிறீர்கள்? ஏன் அந்த நிர்வாகத்தை இன்னும் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்க வில்லை? ஆகவே அதிகாரப்பரவலாக்களின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினையை ஜனாதிபதித் தேர்தலில் வென்றால் தீர்த்து வைப்பேன் என்ற தங்கள் கூற்றை நாம் நம்புவது எப்படி?

* சிறந்த ஊழலற்ற நிர்வாகமொன்றைக் கொடுப்பேன் என்று கூறும் தாங்கள் இன்னமும் தகுதி அடிப்படையில் நியமனங்கள் வழங்காமல் நாடாளுமன்ற அங்கத்தவர்களின் சிபார்சுப் பட்டியலுக்கு நியமனங்கள் வழங்குவதை ஏன் தடுத்து நிறுத்தவில்லை? நேற்றும் யாழ். மாவட்டத்தில் 100 சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஈ.பி.டி.பி பட்டியலிலேயே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுவும் பிரதேசசபைத் தலைவர்கள் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட அரசாங்கத் தொழில் வங்கியில் 3 வருடங்களுக்கு முன்னர் பதிந்தவர்களுக்கு இன்னமும் எதுவித தொழிலும் வழங்கப்படவில்லை மேலும் தொழில் வாய்ப்பு வழங்கும்போது தகுதியடிப்படையில் வழங்கவேண்டும். இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பீர்களா?

* இணைந்த வடக்கு - கிழக்குத்தான், அந்த அலகுக்குள் மீளப்பெறமுடியாத அதிகாரங்களுடன் கொடுக்கப்படும் ஒரு பிரதேச சுயாட்சிதான் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின்

## கொழும்புத் தமிழர்கள் - சந்திரிகா செய்மதிச் சந்திப்புச் சோடைபோனது

பிரச்சினையைத் தீர்த்துவைக்கும். அப்படியிருக்க கிழக்கு மாகாணத்தை துண்டு துண்டாக்கும் தங்களது அதிகாரப் பரவலாக்கலை, பிடிவாதமாக அமுல்படுத்தவே இந்த ஜனாதிபதி தேர்தல் என்று ஏன் கூறுகிறீர்கள்?

பிரதானமாக கொழும்புத் தமிழ் மக்களைச் சந்திக்கவென்றே செய்மதி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அங்கு சிங்கள மக்களும் வந்திருந்தனர். கேள்விகளைக் கேட்டனர்.

தமிழ்மக்களில் பலர் கேள்விகளைக் கேட்கக் காத்திருந்தனர். எனினும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் முன்னேற்பாட்டின் பிரகாரம் தமது விருப்பு வெறுப்புக்கு இணங்கவே கேள்வி கேட்பவர்களுக்கு அனுமதி அளித்தனர் என்று தமிழ் வட்டாரங்களில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல தமிழர்கள் கேள்வி கேட்கக் காத்திருக்கையில் சிங்களவர்கள் தாமும் கேள்வி கேட்க வேண்டும் என்று கூறி ஒலிவாங்கியைப் பறித்ததால் நிகழ்வின்போது பரபரப்பு உண்டானது. அதனோடு நேரம் சரியாகவே, நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது; முடிவுற்றது.

கொழும்பு தமிழர்களின் வாக்கைத் தேடும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்ட செய்மதி சந்திப்பு நிகழ்வு தமிழர்களுக்கு அதிருப்தி தந்த நிகழ்வாக மாறியது; முடிவுற்றது. மொத்தத்தில் அது சோடைபோன சந்திப்பாயிற்று.

* * * * *

### ஆதரவு யாருக்கு?

நாட்டின் நான்காவது ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டன. முன்னர் இல்லாதவாறு பதின்மூன்று வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். இவர்களில் சந்திரிகா குமாரதுங்காவுக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையிலேயே கடும்போட்டி உண்டாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஊகம்.

தென்னிலங்கையில் இவ்வருட முற்பகுதியில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களின் பெறுபேறுகளை அவதானித்தால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையில் இறுக்கமான போட்டி இருக்கும் என்று எண்ணத்தோன்றுகின்றது. எனினும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் மக்கள் கவர்ச்சித் தன்மையும் சேரும் என்பதால் ஒருவரே இலகுவில் வெல்லுவார் என்று சொல்லுவது கஷ்டம்.

சந்திரிகா சென்றதடவை போட்டியிட்டவர். அதனால் தேர்தல் பிரசாரத்தில் பல புதிய உத்திகளை, அதாவது அடுத்தபக்கத்தாருக்கு உள்ள ஆதரவு கனத்தை வெட்டக்கூடிய தேர்தல் தந்திரோபாயங்களைக் கையாள்வார் என்று கருதப்படுகின்றது. எனினும் தென்னிலங்கை மக்களின் ஆதரவு அலை எந்தப்பக்கத்துக்கு அதிகமாகத் திரளும் என்று சொல்வது இந்த ஆரம்பவேளையில் கடினமே.

இலகுவான வெற்றிக்கு வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்களின் வாக்குகளும் தென்னிலங்கையில் வாழும் தமிழ்மக்களின் வாக்குகளுமே உறுதுணை செய்யும் என்பது இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் தெரியும். அதனால் இருவரும் தமிழர் வாக்குகளை கௌவிக்கொள்வதற்கான தேர்தல் உத்திகளையும் பிரசாரத் தந்திரங்களையும் வகுத்துச் செயற்படுவர் என்பதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் நிலையை உலகுக்கு வெளிப்படுத்தும் பொருட்டுப், பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது என்ற முயற்சி முளையிலேயே கருகிப்போய்விட்டது. தமிழ்த் தலைவர்கள் தாம் "சுத்த ஜனநாயக வாதிகள்", எந்த விவகாரத்திலும் வேறுபட்ட கருத்துடையவர்களாகப் பிளவுபட்டே நிற்பார்கள் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்துவிட்டார்கள்! அதாவது ஒன்றுபட்டு ஒரே அணியில் நின்று, ஒற்றுமையுடன் ஒருபோதும் செயற்படமாட்டார்கள் என்பதனை இன்னுமொருதடவை கல்மேல் எழுதிய தேற்றமாக எழுதியிருக்கிறார்கள். எந்த விடயமானாலும் ஏதோ ஒரு காரணத்தை நியாயப்படுத்தி, ஒவ்வொரு பக்கமாக இழுத்துக் கொண்டு கன்னை பிரிந்துநின்று அடிபடுவார்கள் என்பதனை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர்!

அது ஒருபுறமிருக்க -

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான சந்திரிகா, ரணில் ஆகிய இருவரில் யாரை ஆதரிப்பது என்பதிலும் தமிழ்க்கட்சிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் உள்ளன.

ஆளும்கட்சி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவையே முழுமையாக ஆதரிப்பதென ஈ.பி.டி.பி. கட்சி முடிவுசெய்துள்ளது. அதுகுறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டும் விட்டது. ஏன் குடாநாட்டில் நடந்த நிகழ்வுகளில் வைத்து சந்திரிகாவையே தமது கட்சி ஆதரிப்பதாகவும் அவர் ஒருவரால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் ஈ.பி.டி.பி. யின் உள்ளூர்த் தலைவர் ஒருவர் உரையாற்றியும் உள்ளார்.

ஜனாதிபதில் தேர்தலில் எவரையும் ஆதரிக்காமல் தமது கட்சி நடுநிலைமை வகிக்கும் என்று புளொட் தலைவர் த.சித்தாத்தன் தெரிவித்திருக்கிறார். தேர்தல் நெருங்கும்போது நிலைமை மாறக்கூடும். இது அரசியல்; ஆகையால் நிச்சயமாக எதனையும் சொல்லமுடியாது அல்லவா?

ஈ.பி,ஆர்.எல்.எப். மற்றும் ரெலோ ஆகியன இன்னும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தத் தரப்பை ஆதரிப்பதென இப்பத்தி எழுதப்படும்வரை தெரிவிக்கவில்லை.

மூத்த தமிழ்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியோ ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் பிளவுபட்டு நிற்பதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கட்சியின் செயலாளர் நாயகமான ஆர்.சம்பந்தன் ஆளுங்கட்சியின் வேட்பாளரான சந்திரிகாவையே ஆதரிக்கவேண்டும் என்ற கருத்துடையவராக உள்ளாராம். ஆனால் ஏனைய கூட்டணி எம்.பிக்களோ ஐ.தே.க கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்காவையே ஆதரிக்கவேண்டும் என விரும்புகிறார்களாம். அவர்களையே கட்சியிலுள்ள இளைய தலைமுறையினர் ஆதரிப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இதுவிடயத்தில் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாது கூட்டணி தலைமைப்பீடம் குழப்பமடைந்திருக்கின்றது. மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று கூட்டணியினர் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தனர். ஆனால் அரசாங்கம் அதனை காதில் விழுத்தாமல், வழுவல் நழுவல் தந்திரங்களைக் கையாண்டு காலத்தைப் போக்கியுள்ளது. அதனாலேயே கூட்டணியின் பெரும்பாலான பிரமுகர்கள் ஆளுங் கட்சியை ஆதரிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர் என்று அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு இடைக் காலநிர்வாகசபை உருவாக்கும் யோசனையை கூட்டணியினர் தொடக்கத்திலிருந்தே ஆட்சேபித்து வந்தனர். செயலாளர் சம்பந்தன், ஜனாதிபதியைச் சந்தித்து நேரிலும் கூட்டணியின் நிலைப்பாட்டை விளக்கியிருந்தார். வெளிநாடு செல்வதற்கு முன்னரும் இதுகுறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தார். ஆனால் அவர் வெளிநாட்டில் தங்கிய வேளையில், இடைக்கால நிர்வாகசபை அமைக்கும் வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டார்!

கட்சியின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காத ஆளும்தரப்புக்கு எவ்வாறு ஆதரவு வழங்க முடியும் என்று கூட்டணியின் இளந்தலைமுறையினர் கேட்கின்றனர். எதற்கும், அடுத்தமாதம் நான்காம் திகதி நடைபெறும் கூட்டணியின் செயற்குழுக்கூட்டத்தில் இது விடயம் அலசப்பட்டு முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் தமிழ்க்கட்சிகள் கருத்துச் செலுத்தினாலும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அதில் கருசனையோ ஆர்வமோ காட்டுவதாக இல்லை. தேர்தல் மனப்பாங்கு (MOOD) அவர்களிடம் இன்னும் பிறக்கவில்லை. போர்ச்சூழ்நிலையில் தேர்தலும் ஒரு கேடா என்ற எண்ணமே வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் மேலோங்கி நிற்கின்றது. இடையூறில்லாத அமைதியான தேர்தல் வடக்கு - கிழக்கில் எத்தனை சதவீதம் சாத்தியம் என்று சமன்பாட்டுக் கணக்குப் பார்க்கும் நிலையையும் அவதானிக்க முடிகிறது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ஆம் நூற்றாண்டில்...

( XIIஆம் பக்கத்தொடர்ச்சி)
மாக இருந்தாலென்ன.

தமிழ் மொழிபெயர்ப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில் சோவியத் நாட்டின் அந்திமகால தமிழ் வெளியீடுகள் பற்றியும் கூறவேண்டும். ஏற்கனவே சிறந்த தமிழ் மொழிபெயர்ப்புகளாக வந்த நூல்களை - அவற்றில் பல இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டவை - பின்னர் புதிய பதிப்புகளாக வெளியிட்ட வேளையில் அவற்றிற்கு மெருகூட்டும் பணி செய்யப்புகுந்த ஒருவரால் அந்த சுவை மிக்க செம்மை இலக்கியங்கள் பலவும் படிப்பதற்கியலாத தமிழாய் ஆக்கப்பட்டு விட்டமை பெரும் அவப்பேறேயாகும்.

இந்தக் கட்டுரைத் தொடரில் இது காலவரை குறிப்பிடப்பட்ட இலக்கியங்கள் - அவைதந்த அனுபவங்கள் அவற்றைப் படைத்தோர் பற்றிய தகவல்கள் - யாவுமே ஒரு தீவிர வாசகனின் மனப்பதிவுகளின்றும் குறிப்பேடுகளின்றும் எழுதப்பட்டவையே. கால, தேச, மொழி - வாரிப்பரிவுகளுக்கப்பாற்பட்டு நினைவோட்டத்தின் போக்கில் இத்தொடரில் அவை பதிவாகின. நான் படித்த அல்லது மிக நன்கறியநேர்ந்த படைப்புகள் பற்றி மட்டுமே இங்கு குறிப்பிடமுடிந்தது. அதற்கப்பால் செல்ல இயலாதிருந்த எல்லைப்பாட்டிற்கான காரணங்கள் பல.

மீள நோக்குகையில் படித்துப் பார்க்கையில் இன்னும் பலவற்றைக் கூறியிருக்கலாம் என்றும் சொல்லப்பட வேண்டிய பலவற்றை சொல்ல மறந்து விட்டேன் என்றும் தெரிகிறது. எந்தத் திட்டமுமின்றி மனம்போன போக்கில் எழுதப்புறப்பட்டதன் விளைவு இது. எனினும் அதிலும் ஒரு உயிர்ப்பையும் அழகையும் என்னால் உணரமுடிகிறது. உங்களுக்கு எப்படியோ? ஆறு அல்லது ஏழு வாரங்களுள் எழுத நினைத்தவை தம்பாட்டில் ஆறுமாதங்களைக் கடந்ததும் ஒருவிதத்தில் நிறைவே.

இந்த இலக்கியங்கள் யாவற்றையும் ஒரு சேர நோக்குகையில் மானுடத்தின் பொதுமை தெளிவாகப் புலப்படுகிறது. இப்போது நாம் வாழும் வாழ்வு எமக்கு முன் பலரால் பல வேளைகளில் வாழப்பட்டுள்ளது என்பதையும் எம்மால் உணரமுடிகிறது. இதனால் வருகிற ஆறுதலும் இதனால் வருகிற மனவிரிவும், விளக்கமும் தானே இலக்கியத்தின் பயன்பாடும்?

(முற்றும்)

## புதிய நூற்றாண்டில் வங்கி......

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)
அறிமுகமாகவில்லை. ஏன் வெறுமனே கணனிமயப்படுத்தப்படாத கிளைகளே பல நாடுகளின் பெருநகரங்களில் கூட இயங்கத்தான் செய்கின்றன.

வங்கிக்கரும பீடங்களில் காசாளர்களுக்குப் பதிலாகத் தன்னியக்கக் கரும பீட இயந்திரங்கள் (Automated Teller Machines) அறிமுகமாயின. இவை 24 மணிநேரமும் சளைக்காது சில வங்கிச்சேவைகளை வழங்கிவருகின்றன. எந்நேரமும் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தைக் காசாக்க இவை உதவுகின்றன.

சனநெருக்கடி கூடிய நேரங்களில் வங்கிக்கருமபீடங்களில் வரிசையில் நிற்க வேண்டிய அவசியம் அற்றுப் போய்விட்டது. பணம் தேவைப்படும் வேளை தேவைக்கு அளவாக நள்ளிரவில்கூடச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளும் இவ்வசதி தாம் செல்லுமிடமெல்லாம் அமைதல் வேண்டும் எனறே வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வாடிக்கையாளர் ஒருவர் தனது கணக்கிலுள்ள பணத்தை எந்தவோர் கிளையிலும் அல்லது இடத்திலும் உள்ள தன்னியக்க இயந்திரத்தில் காசாக்கும் வசதிகள் இன்னமும் சரிவர அமையவில்லை. துரிதமாக அறிமுகப்படுத்தப்பட்டு பிரபல்யம் அடைந்து வரும் இவ்இயந்திரங்கள் அனைத்துமே ஒரே கணனியில் இணைக்கப்பட்டுவிடல் வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக அமைகிறது.

இவ் எதிர்பார்ப்பை நிறைவுசெய்ய வங்கிகள் மேலும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியே ஆகவேண்டும். ஒவ்வொரு வங்கியும் தமக்குத் தமக்கெனத் தன்னியக்கக் கருமபீடங்களை உருவாக்கினால் மட்டும் போதாது. ஒரு குறிப்பிட்ட வங்கியின் எந்தவொரு கருமபீடத்திலும். அந்த வங்கியின் எந்தவொரு கிளையிலும் உள்ள கணக்கிலுள்ள தனது பணத்தைத் திரும்பப்பெறும் வசதிகூட வாடிக்கையாளருக்கு இன்னும் சரிவர அமையவில்லை எனலாம்.

இதற்குக் காரணம் பல வங்கிக் கிளைகளின் கணக்குகள் இன்னமும் கணனிகளுடன் தொடர்புபடுத்தப்படாமையே ஆகும். இதேவேளை வெவ்வேறு வங்கிகள் பல இணைந்து தன்னியக்கக் கருமபீடங்களை அறிமுகப்படுத்தி வருவது வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுகிறது. ஒரு வங்கியின் கிளையொன்றில் தனது கணக்கில் உள்ள பணத்தை பிறிதோர் கிளையில் மட்டுமல்ல, பிறிதோர் வங்கியின் கிளையிலுள்ள தன்னியக்க இயந்திரத்தில் பணமாக்கிவிடும் வசதிகளை வாடிக்கையாளர்கள் எதிபார்க்கிறார்கள்.

(தொடரும்)

## சச்சின் தலைமையில் பிரகாசிக்கும்.....

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டிய நிர்ப்பந்தம் நியூஸிலாந்து அணிக்கு ஏற்பட்டிருந்தது. இந்திய அணி குவித்த 376 ஓட்டங்களிற்குப் பதிலாக 202 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்த ஆட்டத்தின் மூலம் தலைமைப் பொறுப்பை சரிவர ஆற்றுவதில்லை என்ற சச்சின் மீதான குற்றச்சாட்டுக்கு சச்சின் மூலமே சாட்டையடி கொடுக்கப்பட்டது. ஆட்டமிழக்காது 186 ஓட்டங்களைப்பெற்ற சச்சின் டெண்டுல்கர் அன்றைய ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுமே தலா ஒவ்வொரு ஆட்டத்தில் வெற்றிபெற்ற நிலையில் அடுத்த ஆட்டம் குவாலியரில் ஆரம்பமானது. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் இருவரும் மாற்றப்பட்டிருந்தனர். ஸ்ரீநாத், பிரசாத் கூட்டணிக்குப் பதில் நீண்ட நாள்களின் பின் அஜித் அகார்கரும், தெபாஸிஸ் மொஹந்தியும் அணியில் இடம்பெற்றிருந்தனர். தொடர்ந்து அன்றைய ஆட்டத்திலும் டெண்டுல்கரின் சதத்தை எதிர்பார்த்த ரசிகர்களின் எதிர்பார்ப்பில் மண் போட்டாற்போல் 23 பந்துகளில் ஒரேயொரு ஓட்டத்துடன் சச்சின் ஆட்டமிழந்தார்.

இந்த இலக்கின் வீழ்ச்சி நியூஸிலாந்து அணிக்கு ஓர் புது உற்சாகத்தைக் கொடுத்த போதிலும் சௌரவ் கங்குலியின் நிதானமான ஆட்டம், அத்துடன் பின் வந்த ரொபின் சிங்கின் அடிதடி ஆட்டம் என்பவை இந்திய அணியை 261ஓட்டங்கள் என்ற எல்லை வரை கொண்டுசென்றது. தொடர்ச்சியாக 300 என்ற எல்லையைத் தொட்ட இரு அணிகளுக்கும் இது ஒரு வித்தியாசமான இலக்காக அமைந்தது. துணிச்சலுடன் எதிர்த்து ஆடிய நியூஸிலாந்து அணியில் அஸ்டில் பெற்ற 97 ஓட்டங்கள் மட்டுமே ஆரோக்கியமாக அமைந்தது. இருப்பினும் பரிதாபகரமாக நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 247 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. தேவையான நேரத்தில் நின்று, நிலைத்து ஆடி, ஆட்டமிழக்காது 153 ஓட்டங்களைப் பெற்ற சௌரவ் கங்குலி அன்றைய ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தத் தொடரில் 2-1 என்ற நிலையில் முன்னணியில் இருந்த இந்திய அணியை எப்படியாவது இந்த ஆட்டத்தில் வென்றால்தான் நடைபெறப் போகும் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் தங்களுக்கு மட்டுமல்லாமல் ரசிகர்களுக்கும் ஓர் எதிர்பார்ப்பை உண்டு பண்ணும் என்பதை நியூஸிலாந்து அணியினர் நினைத்தனரோ என்னவோ.

இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே தனக்கான ஓய்வைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள அவரது இடத்திற்கு சுனில் ஜோசியும், மொஹந்திக்குப் பதிலாக புதிய வீரர் திருநாவுக்கரசு குமரனும் களமிறங்கினார்கள்.

அணியினர் ஒத்துழைக்காத மாதிரியாய் குவஹாத்தியில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியினரின் துடுப்பாட்டம் ஆட்டம் கண்டது. ஆனாலும் நியூஸிலாந்து அணியினது மட்டுமல்லாது உலக அரங்கிலும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ன்ஸ், மற்றும் ரோஜர் த்வோஸ் அகியோரின் சிறப்பான இணை ஆட்டம் 50 ஓவர்கள் நிறைவில் 236 ஓட்டங்கள் எனும் நிலைக்கு அணியை உயர்த்தியது. ஸ்திரமான துடுப்பாட்டவரிசை கொண்ட இந்திய அணியினர் அன்று பதிலுக்கு ஆடிய ஆட்டத்திற்கு நியூஸிலாந்து அணியினரின் பந்துவீச்சு சிம்ம சொப்பனமாகவே அமைந்தது. வெற்றியை எதிர்பார்த்த இந்திய அணி வெறும் 188 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஆட்டத்தின் சிறந்த நாயகனாக கிறிஸ் கெய்ன்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

2-2 என்ற புள்ளிகளின் அடிப்படையில், நடைபெற்று வந்த தொடர் எவ்வளவு தூரம் பரபரப்பாக்கப்படலாமோ அவ்வளவு பரபரப்பிற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் நியூஸிலாந்து அணியினர் "இன்று போய் நாளை வா" என இந்திய அணியை அனுப்பினர்.

பரபரப்பான இறுதி ஆட்டம் புதுடில்லியில் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி இந்திய அணியின் பந்து வீச்சின் முன் மண்டியிட்டுக் கிடந்தது. குறிப்பாக தமிழ்நாட்டு வீரரான - அணியின் வேகப் பந்துவீச்சாளர் திருநாவுக்கரசு குமரனின் இரண்டாவது ஒருநாள் சர்வதேச ஆட்டம் மிகமிக அற்புதமாக அமைந்தது. வழமை போலவே நியூஸிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ன்ஸின் பொறுமையான ஆட்டத்துடன் ரோஜர் த்வோஸும் அற்புதமாக ஆடியபோதும் தூக்கி நிறுத்தப்பட்ட நியூஸிலாந்து அணியின் ஓட்ட விகிதம் குறைந்து 179 ஓட்டங்களுடன் முடிந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியதோ இந்திய அணியின் கங்குலி - காந்தி ஆரம்ப இணை. தனது முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் விளையாடிய காந்தி - கங்குலிக்கு சந்தர்ப்பங்களை வழங்கி அவ்வப்போது தன் கணக்கையும் பராமரித்து சிறப்பாக ஆடினார். அன்றைய ஆட்டத்தின் வெற்றி இலகுவாகவே இந்திய அணியின் கைகளுள் சரணடைந்தது. 86 ஓட்டங்களை தனக்கே உரிய பாணியில் ஆடிப்பெற்ற கங்குலி ஆட்டநாயகனாகவும், ஆட்டத் தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டார்.

உலகக்கிண்ணப் போட்டிகளில் அடைந்த தொடர்ச்சியான தோல்விகளாலும், சச்சினின் தலைமைப் பதவிக்குக் கிடைத்த மோசமான விமர்சனங்களாலும் தடுமாறியிருந்த இந்திய அணிக்கு டெஸ்ட் தொடரிலும், ஒரு நாள் போட்டித்தொடரிலும் தாய் மண்ணில் பெற்ற இந்த வெற்றி பெரும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. அத்துடன் அணியின் பயிற்றுநராக கபில்தேவ் வந்த அதிர்ஷ்டமும் இந்திய அணி ரசிகர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. நியூஸிலாந்து அணியைப் பொறுத்தவரையில் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு சிறப்பான அணி.

"அணியின் நம்பிக்கை மிக்க ஆட்டக்காரர்களான ஜெவ் அலொட், க்றெய்க் மக்மிலன் ஆகியோரின் வரவுடன் எமது அணி இனி மேற்கிந்தியத்தீவுகளுடன் சிறப்பாக ஆடும்" என அணியின் தலைவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போட்டித் தொடரை அடுத்து, இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறது. நியூஸிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுக்குச் செல்கிறது. நாம் அடுத்த வாரம் இலங்கை - ஸிம்பாப்வே அணியுடனான ஆட்டத்தைக் காண ஸிம்பாப்வே பக்கம் செல்வோம். *

## சிறுவர்சுடர் விடை

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'வார்த்தை என்ன?' வினாவுக்கான விடை:-

QUEUE

## மீண்டும் அதிகரிக்கும் காசநோய்

(சென்றவார சஞ்சிகையில் XIII ஆம் பக்கத்தில் வெளியான காசநோய் பற்றிய கட்டுரையின் தொடர்ச்சி)

சக்தியை அதிகரிக்க உதவும்.

(4) நோயாளி கண்ட இடங்களில் சளியை காறி உமிழக் கூடாது. பதிலாக மூடியுள்ள பாத்திரத்தில் துப்ப வேண்டும். உமிழ்ந்த சளியை லைசோல்(Lysol)இல் இட்டு தொற்று நீக்கி வெட்டிப் புதைக்கவேண்டும். அல்லது எரிக்க வேண்டும்.

(5) நோயாளி பாவிக்கும் உடை, பாத்திரங்களை மற்றவர்கள் பாவிக்கலாகாது. இவை நன்றாக சுத்தப்படுத்தல் வேண்டும். உடைகளை வெயிலில் காயவிடவேண்டும்.

(6) மக்கள் கூடும் இடங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

(7) கைக்குட்டைகளைப் பாவித்து இருமும் தும்மும் பழக்கங்களை கடைப்பிடித்தல் வேண்டும்.

எங்கள் சமூகத்தில் காசநோயாளி என ஒருவரை இனங்கண்டதும் அவரை ஒதுக்கிவிடும் பழக்கம் இருந்து வருகின்றது. இதன்காரணமாக பல நோயாளிகள் சிகிச்சைபெறச் செல்லப் பின்னடிக்கின்றனர். அவர்கள் நோயாளிகள் எனத் தம்மைக் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. காச நோயாளி ஒருவர் வைத்திய ஆலோசனைப்படி கிரமமாக மருந்துக்களை எடுத்துவரின் ஒரு வாரகாலத்திலேயே அவர் மற்றவர்களுக்கு தொற்று ஏற்படுத்தும் அபாயத்தினின்றும் நீங்கி விடுகின்றார்.

ஆனால் சிகிச்சை பெறாது சமூகத்தில் நடமாடுவதன் காரணமாக அது அவருக்கு ஆபத்தாக முடிவதுடன் சமூகத்திற்கும் தொற்று மூலமாக விளங்குவார்.

எனவே அயலிலுள்ள ஒருவருக்கு காசநோய் உண்டு எனின் அந்நபரை வைத்திய ஆலோசனை பெற அறிவுறுத்த வேண்டும். அவர் அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் அப்பகுதி பொதுச் சுகாதாரப்பரிசோதகரை (PHI) [illegible] அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறியத்தரவும்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.129



### சொற்சிலம்பம் இல. 129

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............இங்கே வெட்டுக..............

முடிவுத் திகதி:- 26 - 11 - 1999

### இடமிருந்து வலம்

1. உத்தமம். 4. இரண்டு. 6. உலா. 7. வடமராட்சியில் ஆஸ்பத்திரி உள்ள இடம். 9. விடிந்தவேளை. 11. பெருத்துப் போ!. 12. பிழைத்தல். 14. கடத்தும் ஊடகம். 16. அணி/தரித்துக்கொள்/நட்சத்திரம். 17.சாகுபடி செய்யப்படாத நிலம். 20. செய்தி. 22. ஒரு கீரை வகை. 24. மாத்திரை. 25. பெண் தெய்வம்.

### மேலிருந்து கீழ்

1. உதவி செய்வோன். 2. சிவப்புநிறத்தன்மை. 3. சொந்தப்பட 4.ஒரு பேரிகை. 5. விதிக்கப்பட்டது. 7. சிவனின் ஆயுதம். 8. கரம் கொடுத்தல். 10. இணைத்தல். 13. தடிமன். 14. விரைதல். 15. மூன்று. 16. ஒத்தாசை. 18. மங்களம். 19. பெரிய இல்லம். 21. பிடிப்பதற்கு வீசுவது. 23. திட்டி சாபம் கொடு.

### சொற்சிலம்பம் 127 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. ஆசுவாசம். 5. திதி. 7. சாத்திரி. 8. கருமி. 9. மிதி. 10. பாசி. 12. வெல். 13. யதார்த்தம். 16. அல்வா. 17. தன்பாடு. 18. ரசம். 20. பிரம்மா. 24. யாசி. 25. தினகரன்.

### மேலிருந்து கீழ்

1. ஆசாமி. 2. சுத்தியல். 3. வாதி 4. சரிபார். 5. திருவெம்பாவை. 6. திமில். 11. சித்தம். 14. தாவாரம். 15. தன். 16. அரேபியா. 19. சமாதி. 21. ரசி. 22. சக. 23. மான்.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** செ.சந்திரவதனா,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

**இரண்டாம் பரிசு:-** சண்முகராசா சண்முகப்பிரியா,
ஆண்டு 2,
யாழ்/சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை,
சண்டிலிப்பாய் வடக்கு.

**மூன்றாம் பரிசு:-** நவரட்னவேல் றஞ்சிதா,
14, அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 128 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: நம்பி

## மாயம் பார்! மந்திரம் பார்!!

அன்புக் குழந்தைகளே!

சென்ற வாரம் சிலேட்டைப் பயன்படுத்திச் செய்யக் கூடிய மந்திர வித்தையைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அதனைச் செய்து காட்டி உங்கள் நண்பர்களையும் பிரமிக்கச் செய்திருப்பீர்கள்.

இந்தவாரம் முட்டையைப் பயன்படுத்திச் செய்யக் கூடிய வித்தை ஒன்றை உங்களுக்குக் கற்றுத்தரப் போகின்றேன்.

அம்மாவிடம் கூறி கோழிமுட்டை ஒன்றை நன்றாக அவித்து (முழுஅவியல்) ஓட்டுடன் வாங்கிக் கொள்ளுங்கள்.

உணவுப் பொருள்களைப் பழுதாகாமல் பாதுகாத்து வைக்கப்பயன்படும் வினிகரில் (வினாகிரி) சிறிதளவை எடுத்து ரம்ளரில் மீதியுள்ள இடத்தில் ஊற்றுங்கள்.

ஒருநாள் இரவுமுழுவதும் முட்டையை அவ்வாறே வைத்து ஊறவிடுங்கள். காலையில் எடுத்துப் பார்த்தீர்களானால் முட்டையின் ஒடு மிக மென்மையானதாக ஆகியிருப்பதைக் காண்பீர்கள்.

முட்டையைக் கீழே போட்டாலும் அது உடையாது. பந்து போல அது குதிக்கும்.

நண்பர்கள் கூடியிருக்கும் இடத்தில் முட்டையைக் குதிக்கவிட்டு உங்கள் ‘மந்திர சக்தியைக் ’ காட்டுங்கள்!

- மஜிக்மாமா -

## அதிசய ஆறு

‘ஆறு’ என்ற சொல்லுக்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன. அவை:-

1) எண் 2) நதி 3) வழி
4) சமயம் 5) அறம் 6) இயல்பு

## வானத்தில் பறந்த கதை!



ஆர்வில் ரைட் என்பவரே முதலில் வானத்தில் பறப்பதற்கு வழிகண்டுபிடித்தவர். இவரது சின்னஞ் சிறு பருவத்திய வாழ்வு வறுமை நிறைந்தது. இவர் சிறுவனாக இருந்தபோது, தெருவில் கிடக்கும் துருப்பிடித்த இரும்புகளையும் எலும்புத்துண்டுகளையும் பொறுக்கி விற்று வாழ்வை நடத்திவந்தார். அதன் பின்னர், எத்தனையோ தொழில்கள் தொடங்கினார். அத்தனையிலும் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது.

ஒருநாள் இவர், நூல்நிலையம் ஒன்றிற்குச் சென்றிருந்தார். அங்கே இவர் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தில் ஒரு சுவையான கதை இருந்தது. அந்தக்கதையில், ஒரு மனிதன் தனக்கு இறக்கைகள் எதுவுமின்றி காற்றாடி போன்ற ஒன்றின் துணையால், வானத்தில் பறந்து சென்றதாக வர்ணிக்கப்பட்டிருந்தது.

இதைப் படித்ததும் ரைட்டின் உள்ளத்திலும், மனிதன் ஏன் வானத்தில் பறக்கக்கூடாதா? என்ற கேள்விக்குறி எழுந்தது. இதைக்குறித்தும் தம் சகோதரருடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

ஆலோசனை ஆராய்ச்சி ஆனது. பல சோதனைகளைச் சகோதரர் இருவரும் செய்துபார்த்தனர். முடிவில் பறப்பதற்கு ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இந்த இயந்திரத்தின் உதவியில் ரைட் 1903ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ஆம் நாள் வானத்தில் பறக்கலானார். இதுவே முதன் முதலில் பறந்த விமானமாகும். ரைட்டின் இடைவிடாத முயற்சியால்தான், இன்று நாம் வானத்தில் பறந்துகொண்டிருக்கிறோம்.

**அருமைச் சிறுவர் சிறுமியரே!**

‘சிறுவர் சுடருக்கான’ உங்கள் ஆக்கங்களை நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**‘சிறுவர் சுடர்’**
**சஞ்சீவி,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## பூனையார்

மியாவ் சொல்லும் பூனையார்
மீசை வைத்த பூனையார்
பாய்ந்து எலியை விரட்டிடும்
பாய்ச்சல் மன்னன் பூனையார்.

சன்னல் இடையே தாவுவார்
சத்தம் இன்றி ஓடுவார்
மின்னும் விழியைக் காட்டியே
மிரட்ட முயலும் பூனையார்.

அடுக்க ளைக்குள் தாவுவார்
அங்கும் இங்கும் பதுங்குவார்
மூடமறந்த பால் தயிர்
முழுக்கக் குடித்து ஓடுவார்.

## எடுத்துவராத கயிறு!

அனுமானைக் கயிற்றால் கட்டிப் போடும்படி இராவணன் ஆணையிடுகின்றான். இலங்கையில் பல இடங்களிலிருந்தும் பலவகையான கயிறுகளையும் கொண்டுவந்து அரக்கர்கள் அனுமானைக் கட்டுகிறார்கள்.

– அவர்கள் ஒரேயொரு கயிறு வகையைத்தான் விட்டுவைத்தனர். அது அவர்களது மனைவிமார்களின் தாலிக் கயிறுதான்.

## எல்லாம் ஒரு மணித்தியாலத்தில்!

ஒரு மணித்தியாலத்தில் நீங்கள் 2,500 வார்த்தைகளைப் பேசுகிறீர்கள் (அதாவது, விடாது பேச அனுமதிக்கப்பட்டால்). 500 தடவைகள் கண்களின் இமைகளை மூடித்திறக்கிறீர்கள். உங்கள் இருதயம் 2 தொன் இரத்தத்தைப் பாயச் செய்கின்றது. அதே சமயம் உங்கள் உடல் ஒரு லீற்றர் தண்ணீரைக் கொதிக்க வைக்கத் தேவையான அளவு சக்தியை இழக்கிறது. உங்கள் விரல் நகங்கள் ஓர் அங்குலத்தில் 327 பாகம் அளவிற்கு வளர்கின்றன.

ஆமாம்! சும்மா இருந்தாலும் நீங்கள் சுறுசுறுப்பானவர்கள்தான்!

## வார்த்தை என்ன?

ஒரு ஐந்து எழுத்து ஆங்கில வார்த்தை. அதன் கடைசி நான்கு எழுத்தையும் நீக்கினாலும் உச்சரிப்பு மாறாது.

இந்த வார்த்தை என்ன என்று தெரிகிறதா? மிகவும் சுலபமான கேள்விதான் இது. விடை தெரியாதவர்கள் XVஆம் பக்கத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்!

## பன்நாட்டுப் பழமொழிகள்

* தூண்டிலிலிருந்து தப்பியோடிய மீனே பெரிய மீனாகத் தோன்றும்.
– ஜப்பான்.

* கடவுள் ஒரு கதவை மூடினால், ஒரு சன்னலைத் திறந்து விடுகிறார்.
– இத்தாலி.

*உண்மையான அன்பு, முதல் பேரக்குழந்தை பிறக்கும்வரை தோன்றுவதில்லை.
– வேல்ஸ்.

* நரி கனவில் கூடக் கோழிகளை எண்ணிக் கொண்டே இருக்கும்.
– ரஷ்யா.

*பசியைத் தீர்க்கும் உணவே சிறந்த உணவு.
– சீனா.

## ஜோக்



“சாப்பிட என்ன இருக்கு?”

“இட்லி இருக்கு சட்னி இல்லை, சோறு இருக்கு கறி இல்லை, புட்டு இருக்கு சம்பல் இல்லை!”

“அப்படியா? பேசாமல் கடையை மூடிவிட்டுப் போக வேண்டியது தானே?”

“பூட்டு இருக்கு திறப்பு இல்லையே!”

## இடது கால்



உயரம் தாண்டுதல், தூரம் தாண்டுதல் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் இடது காலை ஊன்றியே எழுகிறார்கள். இது ஏன் தெரியுமா?

நாம் அழுத்தமாக மிதிப்பது, உதைப்பது போன்ற செயல்களுக்கு இயல்பாக வலது காலையே பயன்படுத்துகின்றோம். அப்போது உடலின் பாரத்தையும் எதிர்சக்தியையும் இடது காலே தாங்குகின்றது.

தாக்கும் சக்தி வலது காலுக்கும் தாங்கும் சக்தி இடது காலுக்கும் இருப்பதால், இடது காலை ஊன்றி எழும்போது மிக அதிகமான உந்து சக்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதால்தான் இடது காலை ஊன்றி எழுகிறார்கள்.

## அப்பனே இறங்கப்பா



துறவியாக வேண்டும் என்று எண்ணம கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தான் இளைஞன் ஒருவன். ஒரு நாள் சாது ஒருவரைக் கண்டு தன் எண்ணத்தைக் கூறினான்.

“உனக்கு இன்னும் பற்று,பாசம் விட்டுப்போனதாகத் தெரியவில்லை. ஆகவே சிறிதுகாலம் கழித்துவா”என்றார் சாது.

“இல்லை சுவாமி. எனக்கு பற்றுதல் ஏதும் இல்லை. என்னை உங்களோடு அழைத்துச் செல்லுங்கள்’ என்று மன்றாடினான் அவன்.

“சரி, புறப்படு என்னோடு” என்று கூறி அவனை அழைத்துச் சென்றார் சாது. அவனுடன் ரயிலேறினார்.

ரயில், வழியில் ஒரு கிராமப்புற தரிப்பு நிலையத்தில் நின்றது.

“சுவாமி, இதுதான் என்னுடைய ஊர்” என்றான் இளைஞன்.

“அப்படியா? உனக்கு இன்னும் ஊர்ப் பற்றே நீங்கவில்லை. நீ இங்கேயே இறங்கிக்கொள்” என்று அவனை இறக்கிவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தார் சாது.

## எல்லாம் நன்மைக்கே



முன்னொரு காலத்தில் தவசி என்ற பெயர் கொண்டஒருவர்வாழ்ந்து வந்தார். தனது வாழ்வில் எத்தகைய பெரிய துன்பம் நேர்ந்தாலும் “இறைவன் அருளால் எல்லாம் நன்மைக்கே” என்றே அவர் கூறுவார்.

ஒரு தடவை அவருடைய ஆடு காணாமல் போய்விட்டது. அவ்வூர் மக்களனைவரும் வந்து அனுதாபத்துடன் ஆறுதல் கூறினார்கள். தவசி, “இறைவன் அருளால் எல்லாம் நன்மைக்கே” என்று கூறினார். மக்கள் அவரைப் “பைத்தியம்” என்று பழித்துவிட்டுச் சென்றார்கள்.

ஒரு வாரம் கழித்து, காணாமல்போன ஆடு காட்டிலிருந்து வேறு சில ஆடுகளையும் அழைத்துக் கொண்டு திரும்பி வந்துசேர்ந்தது. இந்தச் செய்தியை மக்களிடம் தவசி பெருமையாகக் கூறினார்.

சில நாள்களின் பின்னர் தவசியின் மகன் ஆடுகளுக்கு இலைஒடிக்க மரத்தில் ஏறியபோது கீழே விழுந்து அவனுடைய கால்முறிந்துபோனது. மக்கள் அவரை அனுதாபத்துடன் அணுகி ஆறுதல் கூறமுற்பட்டனர். தவசி உடனே, “இறைவன் அருளால் இதுவும் நன்மைக்கே” என்றார்.

மறுநாள் அக்கிராமத்தைக் கொள்ளைக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர். ஊரையே சூறையாடினார்கள். ஊரை விட்டுப்போகும்போது, தமது கூட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காக அவ்வூர் இளைஞர்கள் பலரையும் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றனர். கால் முறிந்து படுக்கையில் இருந்த தவசியின் மகனை அவர்கள் விட்டுவிட்டார்கள்.

இரண்டொரு மாதம் கழித்து, கொள்ளைக் கூட்டத்தாரால் பயிற்சி அளிக்கப்பட்ட கிராமத்து இளைஞர்கள் அரசனால் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். மக்கள் அதற்குப் பிறகு தவசியைக் கேலி செய்வதை நிறுத்தி விட்டனர்.

இறைவனின் அனுமதியின்றி எதுவும் நடைபெறாது. இறைவன் நன்மையே செய்வான் என்பதில் கடைசி வரை உறுதியாக இருந்து காட்டினார் தவசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org